16-29 பிப்ரவரி 2000 www.padippakam.com ரூ. 5.00



# புதிய ஜனநாயகம்

## கொலைகார போலீசின் வெறியாட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இறக்குமதி தடை நீக்கம் விவசாயத்திற்கு ஆபத்து

இறக்குமதிக்கு இருந்து வரும் பெயரளவு கட்டுப்பாடு களையும் ஏப்ரல் 2001-க்குள் மொத்தமாக நீக்கி விடும் ஒப்பந்தமொன்று அமெரிக்காவுக்கும், பா.ஜ.க. கூட்டணி அரசுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது. உலக வர்த்தகக் கழகத்தின் விதிகளின்படி பார்த்தால் கூட, இந்தியா 2003-க்குள் தான் அனைத்து இறக்குமதிக் கட்டுப்பாடு களையும் நீக்கியிருக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க. அரசு, தன்னை அணு ஆயுத வல்லரசாக அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவும், பாகிஸ்தானைவிட இந்தியாதான் அமெரிக்கா வின் உண்மையான விசுவாசி எனக் காட்டிக் கொள்ளவும் அமெரிக்காவை தாஜா செய்யும் நோக்கத்தோடு இந்த ஒப்பந்தத்தைப் போட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, இனி ஆடம்பரப் பொருட்கள் மட்டுமல்ல, அரிசி, கோதுமை போன்ற விவசாயப் பொருட்களும் தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டு, இந்திய விவசாயம் நாசமாக்கப்படும்.

## பெரியாரின் நூலுக்குத் தடை

பெரியார் எழுதியுள்ள ''உண்மை இராமாயணம்'' என்ற நூலின் இந்தி மொழிபெயர்ப்பைத் தடை செய்து உத்தர விட்டுள்ளது, உ.பி. மாநில உயர்நீதி மன்றம். இந்த நூல், ''ராம பக்தர்களின் மனதைப் புண்படுத்துவதாக உள்ளது'' என்று கூறி, இந்து மதவெறியர்கள் தொடுத்த வழக்கை, உயர்நீதி மன்றம் 12 நாட்களுக்குள் விசாரித்து, பெரியாரின் நூலைச் சட்ட விரோதமாக அறிவித்துள்ளது. பெரியார் எழுதிய இந்த நூல், உ.பி. மாநில அரசால் 1971-ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட பொழுது, உ.பி. மாநில உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றமும், ''இந்த நூலின் நோக்கம் ஆரியர்களால் திராவிடர்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அநீதிகளை எடுத்துக் கூறுவதுதான். இதனால், இந்து மதம் - இந்து மதத்தினரின் நம்பிக்கைகள் புண்பட வாய்ப்பில்லை'' எனத் தீர்ப்பளித்து, தடையுத்தரவை ரத்து செய்தன. இப்பொழுது, இந்து மதவெறியர்களின் ஆட்சியில், ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த தீர்ப்புக்கு நேர்மாறாக பெரியாரின் நூல் உயர்நீதி மன்றத்தால் தடை செய்யப் பட்டுள்ளது.

## தொழிலாளர் ஆணையத்தில் பா.ஜ.க. முதலாளிகள்

இரண்டாவது தொழிலாளர் ஆணையம், தொழிலாளர் நல அமைச்சர் சத்திய நாராயண ஜாட்டியா தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தில், பா.ஜ.க.வுக்கு நெருக்கமான தரகு முதலாளி களும், இந்து மதவெறியர்கள் நடத்தி வரும் தொழிற்சங்க மான பி.எம்.எஸ்.ஐச் சேர்ந்த தலைவர்களும் தான் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். சட்ட வரம்புக்கு உட்பட்டு தொழிலாளர்களைத் திரட்டிப் போராடி வரும் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஏ.ஐ.டி. யு.சி., 'இடது'களின் சி.ஐ.டி.யு. மற்றும் ஹெச்.எம்.எஸ். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர் கள்கூட இதில் உறுப்பினர் களாக்கப்படவில்லை.

## ''மின் கட்டணத்தை உயர்த்து'' – உலக வங்கியின் உத்தரவு

உ.பி. மாநில மின்துறை இலாபத்தில் இயங்க வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ள உலக வங்கி, அதற்காகச் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதன்படி, வீடுகளுக்கு 549.6 சதவீதமும், விவசாயத்திற்கு 612.8 சதவீதமும், தெரு விளக்குகளுக்கு 420.7 சதவீதமும், குடிநீர் விநியோகத்திற்கு 254.7 சதவீதமும் மின் கட்டணம் உடனடியாக உயர்த்தப்பட வேண்டும் என உலக வங்கி இரகசியமாகக் கட்டளையிட்டுள் ளது. மக்களுக்குப் பயன்படும் மின்சாரத்தின் கட்டணத்தை உயர்த்தக் கோரும் உலக வங்கியின் கண்களுக்கு, தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் அகப்படாதது ஏன்?

## 'மார்க்சிஸ்டு'களே, பதில் சொல்லுங்கள்

உ.பி. மாநில மின்துறையைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்து அம்மாநில மின்சார ஊழியர்கள் நடத்திய போராட்டத்திற்கு 'மார்க்சிஸ்டு' கட்சியும், அதன் தொழிற் சங்கமும் முழு ஆதரவு தெரிவித்தன. அதே சமயம், கேரளாவில் ஐ.என்.டி.யு.சி.யைச் சேர்ந்த மின்சாரத் தொழிலாளர் சங்கமொன்று, கேரள 'மார்க்சிஸ்டு' அரசை எதிர்த்து அடையாள எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியது. ''கேரளாவின் மின்துறையைச் சீரமைக்க உலக வங்கி கொடுத்துள்ள திட்டத்திற்கு, மார்க்சிஸ்டுகளே, உங்களது பதில் என்ன?'' - இதுதான் அத்தொழிற்சங்கம் எழுப்பியுள்ள கோரிக்கை!

## பூலோக சொர்க்கத்தில் பட்டினிப் பட்டாளம்

ஒருவேளை சோற்றுக்கே வழியில்லாத பட்டினிப் பட்டாளம் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மட்டுமல்ல, அமெரிக்காவிலும் உள்ளது. அந்நாட்டில் கிட்டத்தட்ட 3.6 கோடி பேர் அடுத்த வேளை சோற்றுக்குத் தினந்தோறும் கையேந்தும் நிலையில் காலம் தள்ளுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. பல்வேறு சமூக அமைப்புகள், அமெரிக்காவின் ஐந்து நட்சத்திர விடுதிகள், உணவகங்களில் மீந்து போய் குப்பையில் கொட்ட ஒதுக்கப்படும் உணவை வாங்கி, இவர்களுக்கு வழங்கி வருவதால்தான், இந்தப் பட்டினிப் பட்டாளம் உயிரோடு உலவ முடிகிறது!

## தமிழகப் பருத்தி விவசாயிகளின் கலக்கம்

வெளிநாடுகளில் இருந்து பருத்தியைத் தாராளமாக இறக்குமதி செய்ய வழங்கப்பட்டுள்ள சலுகைகளால், தமிழகத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு ரூ. 23,000/= வரை விற்றுக் கொண்டிருந்த ஒரு ''பேல்'' பருத்தியின் விலை, தற்பொழுது ரூ. 20,000/- ஆகச் சரிந்து போய் விட்டது. அதேசமயம், பருத்தி இறக்கு மதிக்கு 'தேசிய' வங்கிகள் மிகக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதாலும், மைய அரசு சுங்கத் தீர்வை விதிப்பதில் காட்டியுள்ள சலுகைகளாலும், சீனா, பாக்., தென் அமெரிக்கா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தி ரூ. 18,500/-க்கு விற்கப் படுகிறது. இந்தக் கழுத்தறுப்புப் போட்டியால் கதிகலங்கிப் போயுள்ள தமிழகப் பருத்தி விவசாயிகள், பருத்தி இறக்கு மதிக்கு 50 சதவீத இறக்குமதித் தீர்வை விதிக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்!

தனியார்மயமாக்கலை எதிர்த்துப் போராடும் உ.பி. மாநில மின்துறை ஊழியர்கள்





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

**இதழ் 6 - 7**

1 பிப். 2000 - 29 பிப். 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை – 600 083.


# புதிய பொருளாதாரக் கொள்கை தொழிலாளர் எதிர்ப்பு வலுக்கிறது

பெரிய அளவில் தடையோ, எதிர்ப்போ இல்லாமல் கட்டுமானச் சீரமைப்பு எனப்படும் புதிய பொருளாதாரக் கொள்கைகளை - பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றி விட முடியும் என்றுதான் இந்திய ஆளும் வர்க்கங்களும் அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளும் நம்பியிருந்தனர். ஆனால், அந்த நம்பிக்கைக்கு முற்றான தடை வந்துவிடவில்லை என்றாலும், தடுமாற்றமும் எதிர்ப்பும் வந்துவிட்டது.

* காப்பீட்டுத் துறையில் தனியார் மற்றும் அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் சட்டத் திருத்தத்திற்கு எதிராக அரசின் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள் போராடினர். * ஒரு இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட உத்திரப்பிரதேச மின்வாரிய ஊழியர்கள் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதித்து, நாட்டின் மிகப்பெரிய மாநிலத்தை பதினோரு நாட்கள் இருளில் மூழ்கடித்தனர். * நாட்டின் பெரிய துறைமுகங்களில் பணிபுரியும் 99,000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுச் சரக்குப் போக்குவரத்தை முடக்கி வைத்தனர். * இராசஸ்தான் மாநிலத்தின் ஏழு இலட்சம் அரசு ஊழியர்கள் இன்னமும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். * பிப்ரவரி 2-ந் தேதி இலட்சக்கணக்கான மத்திய பொதுத்துறை ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். மார்ச் 3 அன்று ஆர்ப்பாட்டம் நடத்துவது, போராட்டத்தைத் தொடர்வது என முடிவு செய்துள்ளனர்.

இந்தப் போராட்டங்களில் எதுவும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கட்டுமானச் சீரமைப்பின் முழுப் பரிமாணத்தையும் புரிந்து கொண்டு, இவை நாட்டையும் மக்களையும் எந்த அளவு பாதிக்கும் என்பதைப் புரிந்துக் கொண்டு, பரந்து, விரிந்த கண்ணோட்டத்தில் நடந்தவை / நடப்பவை அல்லதான். அதற்கான அடிப்படை தொழிலாளர்களிடம் ஏற்படுவதை நீண்டகாலமாகத் தொழிற்சங்கப் பிழைப்புவாதிகள் தடுத்து வருகின்றனர். எனவே, தம்மை நேரடியாகப் பாதிக்கும் உடனடிப் பிரச்சினைகளை எதிர்த்து மட்டும் இத்தொழிலாளர்கள், ஊழியர்கள் போராடினர் / போராடுகின்றனர். ஆனால், இப்போராட்டங் களே கூட அரசுக்குப் பெரும் பாதிப்பையும், சீர்திருத்தங்களை முடுக்கிவிடும் அதன் முயற்சிக்குத் தாமதத்தையும் ஏற்படுத்துகின்றன.

மைய, மாநில அரசுகளைத் திணறடித்த உ.பி. மாநில மின்வாரியத் தொழிலாளர் மற்றும் பொறியாளர் வேலைநிறுத்தம், அரசின் கட்டுமானச் சீரமைப்பு முயற்சிக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஏகாதிபத்திய தரகனும், ஆர்.எஸ்.எஸ்-இன் அடிவருடியுமான மைய மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் மின் துறையைத் தனியார் மற்றும் அந்நியக் நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பதில் குறியாக இருக்கிறார். மைய - மாநில மின்வாரியங்களைக் கலைத்துவிட்டு, மின் தொழில் கழகங்களாக மாற்றித் தனியார் மற்றும் அந்நியருக்கு விற்பது, மைய - மாநில மின்துறை நெறிப்படுத்தும் ஆணையம் அமைப்பது என்று முடிவு செய்து, ஆந்திரா, ஒரிசா, அரியானா, குஜராத்தில் அமலாக்கப்பட்டு வருகிறது. இதனால் மின் கட்டணங்கள் மீண்டும் மீண்டும் உயர்த்தப்படுவதுதான் அங்கெல்லாம் கண்ட பலன். மூன்று வகையினமாகத் தற்போதைய உ.பி. மின்வாரியத்தைப் பிரிப்பது, பிறகு அக்கழகங்களைத் தனியாருக்கு விற்பது என்றும் மைய மாநில அரசுகள் முடிவெடுத்துள்ளன. உற்பத்தியாகும் மின்சாரத்தில் 43 சதவீதம் இடம்விட்டு இடம் கொண்டு செல்வதிலும், விநியோகத்திலும் இழக்கப்படுகிறது. இதில் திருட்டினால் மட்டும் 1,000 கோடி ரூபாய் இழப்பும், மொத்தமாக ஆண்டுக்கு 7,000 கோடி ரூபாய் நட்டமும் ஏற்படுகிறது. இதற்காகவும், உலக வங்கி 6,000 கோடி ரூபாய் கடன் தருவதற்குப் போட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவும் இந்தக் கட்டுமானச் சீரமைப்பு அவசியம் என்கிறது உ.பி. அரசு.

இதைக் கடுமையாக எதிர்த்தும் வேலை நிறுத்தத்தில் இறங்கிய மின்வாரிய ஊழியர்களைக் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கியது போலீசு. போலீசுக் குண்டர்களை நள்ளிரவில் ஏவி, ஊழியர்களின் குடியிருப்புகளைச் சூறையாடியது. கையில் சிக்கியவர்களை அடித்து நொறுக்கியது. தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சங்கத் தலைவர்களைச் சிறையிலடைத்தது. தொழிலாளர்களின் உறுதி, பிற வடமாநில மின்வாரிய ஊழியர்களின் ஆதரவு ஆகியவை காரணமாக வேறு வழியின்றிப் பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டது அரசு. மூன்று கழகங்களாக மின்வாரியத்தைப் பிரிப்பதைத் தொழிற்சங்கங்கள் ஏற்றன. ஆனால், தனியார்மயமாக்குவது ஓராண்டுக்குத் தள்ளிப் போடப்படும்; போராடிய தொழிலாளர்களைப் பழிவாங்குவதில்லை, வழக்குப் போடுவதில்லை; அமைக்கப்படும் மின் கழகங்களிலும் பழைய வேலை நிலைமைகளும், பொருளாதார நலன்களும் பராமரிக்கப்படும், அதற்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதியம் ஏற்படுத்தப்படும் என்ற உறுதி தரப்பட்டது.

மறுசீரமைப்பைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனதற்கான காரணம் தொழிலாளர்கள் மற்றும் சங்கத் தலைமையிடம் நிலவும் பிழைப்புவாதமே ஆகும். மின்கட்டண மீட்டர் அளவில் மோசடி, நேரடி மின்திருட்டு போன்ற ஊழல்களால் வெறுப்படைந்திருந்த மக்களிடம் இருந்து ஊழியர்கள் ஆதரவைப் பெற முடியாமற் போனது. போராடும் தொழிற்சங்கங்கள் அனைத்திலுடைய அரசியல் கட்சிகளும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கின்றன. போலி கம்யூனிஸ்டுகள் கூடப் பெயரளவுக்கான எதிர்ப்பே காட்டுகின்றனர். இப்படிப்பட்ட துரோகத் தலைமையை நிராகரித்து, பிழைப்புவாதச் சீரழிவுகளைக் கடந்து, விரிவான பார்வையுடன் கூடிய உறுதியான போராட்டங்களை நடத்தாதவரை, ஆளும் வர்க்கங்கள் மேற்கொள்ளும் பொருளாதாரத் தாக்குதல்களை தொழிலாளி வர்க்கம் முறியடிக்க முடியாது.

www.padippakam.com

# கிரிமினல் ஜெயாவை விசாரணையின்றித் தண்டிப்பதே சரி!

''கிரிமினல்கள்தாம் கிரிமினல் சட்டத்தை உருவாக்குகிறார்கள்'' என்கிற கூற்று சரியே என்று மீண்டும் ஒருமுறை 'செல்வி' ஜெயலலிதா நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

எந்தெந்த முறைகளில் கிரிமினல் குற்றங்களைச் செய்யலாம் என்பதைத் திட்டமிட்டு செய்வதும் கிரிமினல் குற்றவாளிகள்தாம். பிடிபட்டால் என்னவெல்லாம் செய்து தப்பிக்கலாம் என்று துருவித் துருவி வழிகள் காண்பதும் கிரிமினல் குற்றவாளிகள் தாம்.

இவர்களிடம் இருந்து ''பாடங்கற்றுக் கொண்டு'' தான், கிரிமினல் குற்றத் தடுப்பு நடவடிக்கையாக கிரிமினல் சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கிரிமினல் குற்றவாளிகளோ புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். கிரிமினல் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்துகிறார்கள். இவற்றையும் தடுக்கும் முயற்சியாக கிரிமினல் சட்டங்கள் செழுமைப்படுத்தப்படுகின்றன.

வெள்ளுடைக் கிரிமினல் குற்றங்கள் புரிவதில் கைதேர்ந்தவரான செல்வி ஜெயலலிதா, இந்த வகையில் கிரிமினல் சட்ட மேதையாகவும் திகழ்கிறார்.

அசைக்க முடியாத ஆதாரங்களுடன் ஏராளமான வழக்குகள் ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கையில்! இருந்தாலும், ஒன்றில் கூட அவர் தண்டிக்கப்படவில்லை. வழக்குகளில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதைவிட முடக்கப்பட்டவைதாம் அதிகம்.

ஜெயா - சசி பெயரில் வெளிநாட்டில் இருந்து வந்த மர்மப்பணம் காரணமாக அந்நியச் செலாவணி மோசடி வழக்கு, ஜெ.ஜெ.டி.வி.க்காக வெளிநாட்டு நிறுவனத்துக்கு பலகோடி ரூபாய் ஜெயா - சசி கும்பல் கட்டிய கட்டணம் தொடர்பான அந்நியச் செலாவணி மோசடி வழக்கு, ஜெயாவின் பினாமி டி.டி.வி. தினகரன் வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ள வழக்கு, ஜெயா - சசி - மலேசியா சுசீலா - அமீர்பாய் சங்கிலித் தொடர்பு மூலம் நடந்த ''ஹவாலா'' வழக்கு விசாரணை, வளர்ப்பு மகனின் ஆடம்பரத் திருமணத்தைத் தொடர்ந்து வருமானவரி வழக்கு - இவையெல்லாம் 1995 ஆரம்பம் முதல் காங்கிரசு ஆட்சியில் தொடுக்கப்பட்டவை. நரசிம்ம ராவ், தேவே கவுடா, குஜ்ரால், வாஜ்பாய் ஆகியோர் தலைமையிலான பல்வேறு கட்சிகளின் ஆட்சி மத்தியில் வந்து போயின. ''எவர் ஆட்சிக்கு வந்தாலும் என்னை ஒன்றும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்று திமிரோடு எல்லா வழக்குகளையும் முடக்கி வைத்தார், 'செல்வி' ஜெயலலிதா.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களே அக்கட்சி அடியாட்களால் தாக்கப்பட்ட வழக்குகள்; வழக்கறிஞர்கள் விஜயன், சண்முகசுந்தரம் மீதான கொலை வெறித் தாக்குதல் வழக்குகள்; ''தராசு'' பத்திரிக்கை அலுவலகத்தின் மீது தாக்குதல் தொடுத்து 2 ஊழியர்களைக் கொன்ற வழக்கு; அதிகாரி பாண்டே வீடு சூறையாடல் வழக்கு; அதிகாரி சந்திரலேகா மீது திராவகம் ஊற்றிய வழக்கு ஆகியவற்றில் ஜெயலலிதாவின் அரசியல் பின்னணி இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இவை அனைத்திலிருந்தும் தண்டனை பெறாமல் தப்பித்துக் கொண்டார்.

இவை தவிர, ஜெயலலிதா தேர்தலில் படுதோல்வி அடைந்து பதவியிழந்த பிறகு, சதி, மோசடி உட்பட ஆறு பொருளாதாரக் கிரிமினல் குற்ற வழக்குகள் அவர் மீது தொடுக்கப்பட்டன. அவை, வருமானத்துக்கு மேல் சொத்து சேர்த்தது, கொடைக்கானல் ஓட்டல் வழக்கு, கலர் டி.வி. வழக்கு, டான்சி நில வழக்கு, நிலக்கரி இறக்குமதி வழக்கு, மீனா விளம்பர நிறுவனம் மூலம் நடந்த முறைகேடு - ஊழல் வழக்கு ஆகியவை. இந்த ஆறு வழக்குகளில் நிலக்கரி இறக்குமதி, டான்சி நிலவழக்கு ஆகியவற்றில் இருந்து ஜெயலலிதா விடுவிக்கப்பட்டிருக்கிறார். விதிகளை மீறிய கொடைக்கானல் ஓட்டல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு ஓராண்டு சிறையும், 2000 ரூபாய் அபராதமும் தண்டனையாகப் பெற்றுள்ளார். பிற வழக்குகளில் விசாரணைகள் நடக்கின்றன.

தம் மீதான வழக்குகள் எல்லாம் அரசியல் உள்நோக்கம் கொண்டவை, ஆதாரமற்றவை, சட்ட விரோதமானவை, நீதிபதிகள் ஒரு தலைப்பட்சமானவர்கள் என்று பல காரணங்கள் கூறி, சென்சு நீதிமன்றத்தில் இருந்து உச்சநீதி மன்றம் வரை நூற்றுக்கணக்கான வழக்குகளை ஜெயலலிதாவும் அவரது முன்னாள் அமைச்சர்கள் அதிகாரிகளும் இதற்கு முன்னர் தொடுத்தனர். வழக்குகளை விசாரணைக்கு வராமல் தடுத்து விடுவது, விசாரணைக்கு வந்தாலும் குறுக்கிட்டு முடக்கி வைப்பது என்பதுதான் ஜெயலலிதாவின் நோக்கம் என்பதை நாடே அறியும்.

**ஊழல் ராணியை டான்சி வழக்கில் இருந்து விடுதலை செய்த ''நீதியரசர்'' தங்கராஜ்**



இந்த முயற்சிகளின் போது, தன்னால் போலீசு, நிர்வாக அதிகாரிகள் மட்டுமல்ல, உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்ற ''நீதியரசர்கள்'' கூட விலைபோகக் கூடியவர்கள்தாம் என்பதை ஜெயலலிதா மீண்டும் மீண்டும் நிரூபித்தார். பணத்தை வாரிஇறைத்தால் நீதி இலகுவில் வளையக்கூடியது தான் என்பதை நிரூபித்தார். தனது வழக்குகளை விசாரித்த நூற்றுக்கணக்கான அதிகாரிகள், வழக்கறிஞர்களை மட்டுமல்ல, நீதிபதிகளையும் வெவ்வேறு இடங்களுக்குத் தூக்கியடிக்கும்படி செய்தார்.

நூற்றுக்கணக்கான பொய்ச்சாட்சிகளைக் கொண்டு வந்து தினந்தோறும் நீதிபதிகளைத் திணறடித்தார்கள். அரசு சாட்சிகளை உருட்டி மிரட்டியும், விலைக்கு வாங்கியும் கட்சி மாறச் செய்தும் விசாரணை அதிகாரிகளைக் கதிகலங்கடித்தார்கள். நினைத்தபோது, திடீர் திடீரென்று விசாரணையை நிறுத்தும்படி சிறப்பு நீதிமன்றம் முதல் உச்சநீதி மன்றம் வரை புதுப்புது மனுப் போட்டார்கள். தமிழில் ஆவணங்கள் கோருவது, பொய்யான மருத்துவக் காரணங்கள் கூறுவது போன்ற உத்திகளைக் கடைப்பிடித்து வழக்குகளை இழுத்தடித்தார். இவற்றின் மூலம் நீதித்துறையின் கையாலாகாத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

கிரிமினல் குற்றங்களில் புலி ஜெயலலிதா என்றால், புவனகிரி பூனையான முன்னாள் எம்.எல்.ஏ. மல்லிகாகூடச் சிறப்பு நீதிமன்றத்தில் உறுமி நீதிபதியை மிரளச் செய்தார். ஓய்வு பெற்ற கடைநிலை ஊழியரின் மகளான இவர் குடும்பத்துக்கு ஒரு ஓட்டு வீடும், 5 ஏக்கர் வானம் பார்த்த பூமியுமே சொத்தாக இருந்தது. தேர்தலுக்குக் காப்புத் தொகை கட்டவே கழுத்திலிருந்த நகையை அடகு வைத்தவர். ஐந்தாண்டு பதவிக் காலத்தில் சுமார் இரண்டே முக்கால் கோடி சொத்துக்கு அதிபதி. இது வருமானத்துக்கு மீறிய சொத்து என்று வழக்குத் தொடுக்கப்பட்டது. சொற்ப



படிப்பகம்

www.padippakam.com



**ஏழைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டவுடன் சிறைக்குள் தள்ளப்படுகிறார்கள். ''ப்ளெஸெண்ட் ஸ்டே'' விடுதி வழக்கில் சட்டப்படி தண்டிக்கப்பட்ட ஜெயாவோ, ராஜமரியாதையோடு நீதிமன்றத்தில் இருந்து போயசு தோட்டத்துக்கு அனுப்பப்படுகிறார்!**

வருமானம் கூட இல்லாத நூறு ஏழை விவசாயிகளிடம் தலைக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கடன் வாங்கியதாகச் சாட்சி சொல்ல வைத்து சிறப்பு நீதிமன்றத்தையே திணறடித்தார். அரபு நாட்டில் இருந்து பல இலட்சம் ரூபாய் பணம் பெற்றிருக்கிறார். அது என்ன அங்கே ஒட்டகம் மேய்க்கும் மல்லிகாவின் சொந்தக்காரர் அனுப்பியதா? பிரபல சினிமா நடிகையை மட்டுமல்ல, இந்த எம்.எல்.ஏவையும் இணைத்துக் கொண்ட முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் வழங்கிய சொத்துக்கள்தாம் இவையெல்லாம் என்று பத்திரிகைகள் எழுதுகின்றன.

இந்த புவனகிரி பூனையின் உறுமலைக் கண்ட நீதிபதி, தனது இறுதித் தீர்ப்பில், ''இந்த வழக்கு வரும்போதெல்லாம் நான் செத்துச்செத்துப் பிழைத்தேன். ஏன் பொழுது விடிகிறது என்று நினைப்பேன். ஒரு நாளாவது வழக்கை சந்தோஷமாக நடத்த விட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டுப் புலம்பியிருக்கிறார்.

பதவியிழந்து, இலஞ்ச - ஊழல் வழக்குகள் தொடுக்கப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் ஜெயா - சசி கும்பல் சற்று தடுமாறிப் போனது உண்மைதான். ஆனால், தி.மு.க. பங்கேற்ற தேசிய முன்னணி கூட்டணி ஆட்சியிலேயே பிரதமர் தேவே கவுடா உட்பட தனக்குச் சாதகமான சக்திகள் இருப்பதைக் கண்டு கொண்டபிறகு, குறிப்பாக 1998 தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்று மைய அரசில் பங்கேற்கும் வாய்ப்புப் பெற்றவுடன், ஜெயா - சசி கும்பல் இந்த வழக்குகளைக் கால்தூசாக மதிக்கத் தொடங்கிவிட்டது. ஜெயா மீதான வழக்குகளை நடத்துவது இருக்கட்டும், தனது ஆட்சியே நீடிக்குமா என்கிற அச்சத்தில் தி.மு.க. அரசு தள்ளப்பட்டது.

மைய அரசில் பங்கேற்ற அ.தி.மு.க. அமைச்சர்கள் நீதித்துறையையே கேலிக் கூத்தாக்கிக் காட்டினர். ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந்த வாஜ்பாய் அரசு அதற்கு உடந்தையாக இருந்தது. வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்த்தவுடன் காங்கிரசின் சோனியா தலைமையில் மாற்று அரசு அமையும்; தன் மீதான வழக்குகளை ரத்து செய்வது, திமு.க ஆட்சியைக் கலைத்து மீண்டும் ஆட்சியைப் பிடித்துக் கொள்ளையிடலாம் என்கிற ஜெயா - சசி கும்பலின் கணக்கு கொஞ்சம் பிசகிவிட்டதுதான். சோனியா ஆட்சி ஏற்படவும் இல்லை; எதிர்பார்த்த அளவு தேர்தல் வெற்றியும் கிட்டவில்லை. பா.ஜ.க. - தி.மு.க. ஆட்சி மத்தியில் ஏற்பட்டு விட்டது. ஆனால், காங்கிரசு மட்டுமல்ல, இரண்டு போலி கம்யூனிசக் கட்சிகள், பிறகு மூப்பனாரின் த.மா.கா.வைக் கூடத் தனக்கு ஆதரவு நிலை எடுக்கச் செய்வதில் ஜெயா - சசி கும்பல் வெற்றி பெற்று விட்டது.

உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்தபிறகு, ''எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம், வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தனிமனிதனின் திறமை தான் முக்கியம்; நேர்மை, நியாயம் என்பதெல்லாம் அவசியமில்லை; கொள்கைகளுக்கும், தத்துவங்களுக்கும் இடமில்லை; இலட்சியங்கள் முக்கியமில்லை, இலட்சங்களே முக்கியம்'' என்ற பண்பாடும், சமூக மதிப்பீடும் பரவியது. கோடி கோடியாகக் கொள்ளையடித்த அர்சத் மேத்தாக்கள் சமூகத்தின் மதிப்புமிக்க மனிதர்களாக, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடமாடத் தொடங்கினர்.

இந்தச் சூழல் ஜெயா-சசி கும்பலுக்கு மேலும் தெம்பூட்டுவதாக அமைந்தது. ''எங்கம்மா எவ்வளவு திறமைசாலி பார்த்தியா?'' என்று திமிரோடு சவால்விடுகிறது கழிசடைக் கட்சியாகிய அ.தி.மு.க. தமிழ்நாட்டில் மிகப் பெரிய நான்கு சாதிப் பிரிவுகளில் ஒன்று முக்குலத்தோர் சாதி. எந்த ஒரு அரசியல் - சமூக அமைப்புமே இலஞ்ச - ஊழல், கிரிமினல் கும்பலோடு தொடர்பு இருப்பதாகத் தெரிவது தனக்குப் பாதகமான பிரச்சாரமாகிவிடும் என்று அதை ஒதுக்கியே வைக்கும். ஆனால், முக்குலத்தோர் சாதி அமைப்புகள் எல்லாமே ஜெயா - சசி கும்பலுக்கு வெளிப்படையாக வக்காலத்து வாங்குகின்றன.

இதெல்லாம் எப்படிச் சாத்தியமானது? ஆட்சியைப் பிடிப்பதில் மட்டுமல்லாது, ஆட்சிக்கு வந்தபின் பகற்கொள்ளை அடிப்பதிலும், கொள்ளையடிப்பதைக் காத்துக் கொள்ளுவதிலும் கை தேர்ந்த சதிகார கும்பலாக ஜெயா - சசி கும்பல் இருக்கிறது. ஒரு குறுகிய காலத்தில் உலக அளவிலான கிரிமினல் கும்பல்களுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொண்டு விட்டது. அதன் கிரிமினல் குற்றங்கள் உண்மைதான் என்பதை அறிவதற்கு ஆதாரங்கள்தேடி அலைய வேண்டியதே இல்லை. ஜெயா - சசி கும்பலிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செல்வங்களே காட்டிக் கொடுத்து விட்டன. அவற்றைக் கூட விடுங்கள்; அறிவிக்கப்பட்ட அவர்களின் சொத்துக்கள் பலவும் முடக்கப்பட்ட பின்னும், அடுத்தடுத்த தேர்தல்களுக்குப் பணத்தைக் கோடிகோடியாக வாரி இறைக்கிறார்கள். அவர்களின் ஆடம்பர உல்லாச, ஊதாரித்தனங்கள் நின்று போகவில்லை. ஜெயா - சசி கும்பல் குவித்திருக்கும் மலையளவு சொத்துக்களில் ஒரு முனையளவுதான் வெளிவந்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு சாட்சிகள், விசாரணை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் என்ன உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்ற நீதியரசர்களையே விலைக்கு வாங்க முடியும் என்ற மிதப்பில் களிக்கிறது, அக்கும்பல்.

போயசு தோட்டத்துடன் சூடான வழித் தடத் தொடர்பு வைத்திருக்கும் ஜூனியர் விகடன், ''பொங்கலுக்கு முன்பே வில்லங்கம் தீர்ந்து விடும் என்று எங்கள் தலைவி ஹைதராபாத்தில் இருந்து கொண்டே தீர்க்க தரிசனத்தோடு தெரிந்து வைத்திருந்தார்'' என்று அ.தி.மு.க.க்காரர்கள் சொன்னதாக எழுதியுள்ளது. அதற்கு


படிப்பகம்

ஆச்சரியமான ஆதாரமாக, ''வழக்கில் சிக்கியிருக்கும் டான்சி நிலத்திலேயே அ.தி.மு.க. கட்சி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடத்துவது என்று தீர்ப்பு வருவதற்கு முன்பே ஜெயலலிதா தேர்ந்தெடுத்திருந்தார்'' என்று அவர்களே சொன்னதாகவும் எழுதியது. ஜெயா - சசி கும்பல் எதிர்பார்த்ததைப் போலவே நீதிதேவன் கண்ணை மூடிக் கொண்டு தீர்ப்பும் வழங்கிவிட்டார்.

டான்சி நில மோசடி வழக்கு பாமரனும் புரிந்து கொள்ளக்கூடிய ஆதாரங்களைக் கொண்டது. டான்சி நட்டத்தில் நடப்பதால் அதன் சொத்துக்களை விற்பது என்று அன்றைய முதல்வரும் தொழில்துறை பொறுப்பு வகித்தவருமான ஜெயா தலைமையிலான கூட்டத்தில் முடிவானது. அதன்படி டான்சிக்குச் சொந்தமான சென்னை - கிண்டியில் உள்ள இரண்டு நிலங்கள், ஜெயலலிதா, சசிகலாவைச் சமபங்குதாரர்களாகக் கொண்ட ஜெயா பப்ளிகேசன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் ஆகியவற்றுக்கு விற்கப்பட்டது. இதில் சதி, ஊழல், முறைகேடுகள் நடந்திருப்பதாக ஜெயா, சசி, முன்னாள் மந்திரி முகமது ஆசிப், ஜெயாவின் துணைச் செயலாளர் கற்பூர சுந்தரபாண்டியன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. இந்த வழக்கைத் தடுத்து நிறுத்த சிறப்பு, உயர், உச்சநீதி மன்றங்களில் பல மனுக்கள் - வழக்குகள் போட்டு அனைத்தும் நிராகரிக்கப்பட்டு, குற்றம் புரிந்திருப்பதற்கு தகுந்த முகாந்திரம் இருப்பதாகத் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. சிறப்பு நீதிமன்றத்தில் பெரும்பலான சாட்சிகளிடம் விசாரணை முடிந்து விட்ட நிலையில், மீண்டும் உயர்நீதி மன்றத்திடம் போய் வழக்கை ரத்து செய்யும்படி ஜெயா கோரினார். ஜெயாவின் வாதங்களை அப்படியே ஏற்ற நீதிபதி தங்கராஜ் வழக்கிலிருந்து ஜெயாவை மட்டும் விடுவித்தார்.

பொது ஊழியரான முதல்வர், அரசு சொத்தை விலைக்கு வாங்கியது பொது ஊழியருக்கான நடத்தை நெறிமுறையை மீறியது என்பது ஒரு குற்றச்சாட்டு. நடத்தை நெறிமுறை என்பது அரசாணையே தவிர, சட்டவிதி அல்ல. ஆகவே தண்டிக்க முடியாது என்கிறார் நீதிபதி தங்கராஜு.

ஒரு கோடி ரூபாய்க்கு மேலான அரசு சொத்தை விற்பதானால் முதல்வரின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பது ஜெயலலிதாவே போட்ட அரசாணை. ஆனால், டான்சியிலிருந்து வரும் கோப்பைத் தானே பார்வையிட்டு ஒப்புதல் அளித்தால், தனக்குத்தானே விற்றுக் கொண்டதாகி விடும் என்பதால் பின்னாளில் தொழில் மந்திரி ஆக்கப்பட்ட முகமது ஆசிப்பைக் கையொப்பமிட வைத்தார். இதற்காக முதல்வரின் பார்வைக்கு அனுப்பும்படி வலியுறுத்திய தொழில்துறைச் செயலரை ஆசிப் மிரட்டியிருக்கிறார். அவர் மிரட்டலுக்கு அஞ்சி நீண்ட விடுப்பில் போனதைப் பயன்படுத்தி ஒரு காரியத்தை முடித்துக் கொண்டார்கள். இன்னொரு நில விவகாரத்தில் ஜெயாவின் துணைச் செயலாளர் கற்பூர சுந்தரபாண்டியன் மூலம் நிதித்துறைச் செயலர், தலைமைச் செயலரை மிரட்டிக் கையொப்பம் பெற்றுக் காரியத்தை முடித்துள்ளனர். இதையெல்லாம் தனிச் சிறப்பு நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே சாட்சியமாக அளித்துள்ளனர். இவற்றைக் கண்டு கொள்ளாத நீதிபதி தங்கராஜ் இதிலெல்லாம் சதி ஏதும் நடக்கவில்லை என்கிறார்.



அ.தி.மு.க. குண்டர்களால் கொளுத்தப்பட்ட பேருந்தும், உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட விவசாயக் கல்லூரி மாணவிகளும்: தொடரும் ஜெயாவின் கிரிமினல் குற்றங்கள்

இவ்விரு நிலங்களை விற்பதற்காக முதலில் டெண்டர்கள் கோரப்பட்டன. அப்போது அதை வாங்க முன் வந்த டெண்டர் தொகை அரசு நிர்ணயித்த தொகையை விடக் குறைவானது என்ற காரணம் கூறி மறு டெண்டருக்கு விடப்பட்டது. இரண்டாவது தடவை அரசு நிர்ணயித்த விலை, முதல் டெண்டரில் நிலத்தை வாங்க முன் வந்த தொகையை விடக் குறைவு. இரண்டாவது தடவை நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிடச் சற்று கூடுதலாக வைத்து ஜெயா - சசி நிலங்களை வாங்கி உள்ளனர். இப்படி வாங்கியதில் சந்தை விலையைவிடக் கோடிக்கணக்கில் குறைந்த விலைக்கு வாங்கி உள்ளனர். பத்திரப் பதிவின்போது அதையும் விடக் குறைவான மதிப்பீடு போட்டு அரசுக்குப் பதிவுக் கட்டணம் செலுத்தியுள்ளனர். இதில் மோசடி என்னவென்றால், அரசு நிர்ணயிக்கும் விலை என்பது ஜெயாவே நிர்ணயிப்பதுதான். டெண்டர்களில் கேட்கப்படும் விலையும் ஜெயா மற்றும் அதிகாரிகள் அறிந்ததே. அரசு நிலங்களின் விற்பனைக்குப் பொறுப்பானவரே விலைக்கு வாங்கும்போது, முன்கூட்டி மற்றவர்களின் டெண்டர் விலை அறிந்து, அதைவிடப் பெயரளவுக்குக் கூடுதலான விலைபேசி வாங்க முடியும். இந்த வகையில் அரசுக்கு நட்டம் ஏற்படுவதோடு, இதைத் தடுக்கப் போடப்பட்ட அரசு சொத்தை அரசு ஊழியரே வாங்கக் கூடாது என்ற விதியையும் மீறி அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியுள்ளனர்.

இதைத் தடுக்கவே அரசுச் சொத்தை அரசு ஊழியரே வாங்கக் கூடாது என்ற அரசாணை உள்ளது. ஆனால், அது சட்டவிதி அல்ல என்று சொல்லும் நீதிபதி தங்கராஜு, மோசடி ஏதும் நடக்கவில்லை, பொது ஏலத்தில் தான் வாங்கப்பட்டது என்கிறார். ஏலம் விடுபவரே ஏலத்தில் எடுப்பது என்பது மோசடி இல்லையா? டெண்டரைப் பார்க்கக் கூடியவரே டெண்டர் கோருவது மோசடி இல்லையா? சொந்த நலனுக்காக அரசுக்கு நட்டமேற்படுத்துவது மோசடி இல்லையா?

பொது ஊழியராக இருப்பவர் இலாபம் தரக்கூடிய வேறு தொழில்களில் ஈடுபடக்கூடாது என்கிற நடத்தைநெறி அரசாணையும் உள்ளது. ஆனால், முதல்வராக உள்ள ஜெயலலிதா கம்பெனிகளில் பங்குதாரராக இருக்கக் கூடாது என்று எந்தச் சட்டம் தடுக்கிறது என்று கேட்டு விடுதலை செய்துள்ளார், நீதிபதி தங்கராஜு.

இறுதியாக, சட்டப்படி ஜெயலலிதா நிரபராதி என்று தான் கூறியிருக்கிறாரே தவிர, நீதிப்படி குற்றமற்றவர் என்று அவரால் கூற முடியவில்லை. அதாவது சட்டம் என்னவாக இருந்தாலும், பகுத்தறிவு - சமூக அறிவுக்குப் பொருந்தும் இயற்கையான நீதி என்று ஒன்றிருக்கிறது. அதன்படி ஜெயா - சசி கும்பல் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள்தாம் என்பதே உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

அதுமட்டுமல்ல, இந்த வழக்கில் இருந்து ஜெயாதான் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டு நீடிக்கிறது. யாருடைய ஆதாயத்துக்காக அவர்கள் குற்றம் புரிந்தார்கள் என்கிற கேள்வி இன்னமும் நீடிக்கிறது. அதேபோல நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கிலும் ஜெயலலிதா, நெடுஞ்செழியன் இருவரையும் விடுவித்து விட்ட நீதிபதி தங்கராஜு, மற்றவர்கள் மீதான வழக்கு தொடரும் என்று தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

ஓய்வுபெற ஐந்து மாதங்களே உள்ள இந்த நீதிபதி அ.தி.மு.க. மந்திரியின் சிபாரிசு பேரிலே பதவி பெற்றவர் என்றும் ஒரு கிரிமினலின் துணையோடு சிங்கப்பூர் போய் வந்தார் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இத்தீர்ப்பைத் தொடர்ந்து, நீதிபதி தங்கராஜைக் கண்டிக்கும் வகையில் இரண்டு மர்ம சுவரொட்டிகள் சென்னையில் ஒட்டப்பட்டன. இவை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்கள் என்றும் இதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று நீதிபதி தங்கராஜும் அ.தி.மு.க. வக்கீல்களும் கோரியுள்ளனர்.

அடுத்த 15 நாட்களிலேயே நீதிமன்றத்தை இந்த அ.தி.மு.க.க்காரர்கள் எந்த அளவு மதிக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். ஜெயா - சசி கும்பல் மட்டுமல்ல, அந்தக் கட்சி முழுவதுமே கிரிமினல்களின் அமைப்புதான் என்று நிரூபித்து விட்டார்கள். தனிச்சிறப்பு நீதிமன்றத்தில் நடந்த கொடைக்கானல் "பிளசண்ட் ஸ்டே ஓட்டல்" வழக்கில் மூன்று குற்றச்சாட்டுக்களில் இரண்டில் தலா ஓராண்டு சிறையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் ஜெயலலிதாவுக்கு விதிக்கப் பட்டது. ஜெயா மேல்முறையீட்டிற்குப் போவதால் தண்டனை கூட உடனே அமலுக்கு வரவில்லை.

ஆனால், தீர்ப்பு வழங்கப்பட்ட மறுநிமிடமே மறியல், வன்முறை, தீவைப்பு கலவரங்களில் ஈடுபட்டனர், அதிமுக குண்டர்கள். இந்த வெறியாட்டங்களின் உச்சக் கட்டமாக கோவை விவசாயப் பல்கலைக்கழக மாணவிகள் சென்ற பேருந்தை தர்மபுரி அருகே அ.தி.மு.க. கிரிமினல்கள் எரி எண்ணெய் (பெட்ரோல்) குண்டுவீசி கொளுத்தினர். அந்த ஈனச் செயலில் மூன்று மாணவிகள் உயிரோடு எரிக்கப்பட்டனர். 16 மாணவிகள் படுகாயமடைந்தனர்.

இக்கொடூரமான குற்றச் செயல் குறித்து, நாடே அதிர்ச்சியுற்றிருக்கும் நிலையில் ஜெயலலிதா தெரிவித்துள்ள கருத்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. அவர் கொஞ்சமும் மனிதத் தன்மையற்ற வக்கிரத்தால் இறுகிய கிரிமினல் என்பது தெளிவாகியுள்ளது. "மாணவிகளை உயிரோடு கொளுத்தியது தன் கட்சிக்காரர்கள் அல்ல. நக்சலைட்டுகளின் தீவிரவாதம் உச்சத்தில் இருக்கும் தருமபுரியில், தி.மு.க.வின் தூண்டுதலின் பேரில் சமூக விரோதிகள் செய்துவிட்டார்கள். அதிமுக தொண்டர்கள் மீது போலீசு பொய் வழக்குப் போட்டுள்ளது. சி.பி.ஐ. விசாரணை வேண்டும்" என்று கோரியுள்ளார், ஜெயா!

ஜெயலலிதா ஒரு சாதாரண இலஞ்ச - ஊழல் முறைகேடுகள் செய்த பொருளாதார குற்றவாளி மட்டுமல்ல. மகாமகம் திருவிழாவில் தனது சகபாடி சசிகலாவுடன் புனித நீராடப் போய், பல பத்துப் பேர் சாவுக்குக் காரணமானதில் இருந்து, இப்போது மாணவிகளை எரித்துக் கொன்றது வரை பல கிரிமினல் குற்றங்களையும் இப்படியே நியாயப்படுத்தி வந்திருக்கிறார். சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி, சின்னாம்பதி பாலியல் வன்முறை வழக்குகளை மூடிமறைத்ததோடு இல்லாமல், நட்ட ஈடு என்ற பெயரில் பணம் பறிக்கவே போலீசார் மீது கற்பழிப்புப் புகார்கள் செய்யப்படுவதாகக் கூறி பாதிக்கப்படும் பெண்களையே இழிவுபடுத்தினார். ஆளுநர் சென்னா ரெட்டியே தன்னிடம் தகாத முறையில் நடக்க முயன்றதாகப் பழிபோட்டவர்.

**ஜெயா மட்டுமின்றி, அத்வானி, பால்தாக்கரே போன்ற கிரிமினல் அரசியல் பேர்வழிகள் அனைவரையும் தண்டிக்கும் உரிமை மக்களுக்கு வேண்டும். மக்கள், தங்கள் கைகளில் சட்டத்தை எடுத்துக் கொள்ளுவது அராஜகத்தைத் தோற்றுவித்துவிடும் என்றால், "சோ" போன்ற பிற்போக்கு ஆளுங்கும்பலின் குலை நடுங்கச் செய்யும் அத்தகைய புரட்சிகர அராஜகம் தான் இன்றைய தேவை!**

அதிகாரத்துக்காகவும், பணத்துக்காக வும் எதையும் செய்யவும், சொல்லவும் துணிந்ததுதான் ஜெயா - சசி கும்பல். எதிர்மறை நாயகர்களையே போற்றும் சமூக மதிப்பீடுகள் பரப்பப்படும் இன்றைய நாளில், இதே ஜெயா - சசி கும்பல் கூட "எதிர்க்கும் துணிந்த, திறமைசாலிகள்' எனப் போற்றி, இந்த சமுதாயம் அங்கீகரிக்கவும் செய்யும்.

மூப்பனார், போலி கம்யூனிஸ்டுகள், திருமாவளவன் ஆகிய யோக்கிய சிகாமணிகள் அனைவருமே குறுகிய தேர்தல் ஆதாயத்துக்காக கிரிமினல் ஜெயாவை ஆதரிக்கவில்லையா!

ஆனால், ஜெயலலிதா மட்டுமல்ல, பால் தாக்கரே, ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் என்று பலரும் அரசியல் கவசம் போட்டுக் கொண்டு தொடர்ந்து கிரிமினல் குற்றங்கள் புரிந்துவிட்டு, எவ்விதத் தண்டனையும் இன்றித் தப்பித்துக் கொள்கிறார்கள். இவர்களுக்குக் கறுப்புப் பூனைப் படை பாதுகாப்பு வேறு. சட்டத்தை மீறுவதையே வாடிக்கையாகக் கொண்ட இவர்களைச் சட்டப்படி தண்டிக்க முயலுவதே தவறாகும். கிரிமினல் குற்றங்கள் புரிவதில் இவர்கள் எவ்வளவு திறமைசாலிகளோ, அதே போல, நீதிபதிகள் உட்பட யாரையும் விலைக்கு வாங்கிச் சட்டத்தை வளைப்பதிலும் வல்லவர்கள். எனவே, இயற்கையான நீதியை அடிப்படையாகக் கொண்டு, இவர்களைச் சட்டபூர்வ, வழக்கு மன்ற விசாரணைகளுக்குப் போகாமல் நேரடியாகவே தண்டிப்பதற்கு வழிதேட வேண்டும். இந்தக் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புக் கவசங்கள் நீக்கப்படவேண்டும். இவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், தண்டிக்கவுமான உரிமை மக்களுக்கு வேண்டும். இந்த அதிகாரம், உரிமைகள் போலீசு, வழக்கு மன்றங்களிடம் இருப்பதே குற்றவாளிகளுக்குச் சாதகமானதுதான்.

மக்கள் அதிகாரத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்தான், சட்டம் தன் கடமையைச் செய்யும், தீர்ப்பு எதுவானாலும் ஏற்க வேண்டும், நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று உபதேசிக்கிறார்கள். நீதிபதிகளாக வருபவர்கள் எல்லாம் தனிப்பிறவிகள் அல்ல. கங்கையில் குளித்த புனிதமானவர்கள் அல்ல. புத்தரைப் போல போதி மரத்தடியில் ஞானம் பெற்றவர்களும் அல்ல. ஜெயாவின் டான்சி வழக்குத் தீர்ப்பே இதற்கு ஆதாரமாக உள்ளது. கொடைக்கானல் ஓட்டல் வழக்குத் தீர்ப்பு போன்றவை விதிகள் அல்ல; விதி விலக்குகள் தாம். அப்படியே குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டாலும், ஜெயலலிதா போன்றவர்கள் சிறைச்சாலையையே உல்லாச உப்பரிகையாக மாற்றிவிடக் கூடியவர்கள்.

இரண்டு பேருந்துகளை எரித்ததாகச் சந்தேகப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் கேள்விமுறையின்றி வேட்டையாடப்பட்டு, சுட்டுக் கொல்லப்படுகிறார். 60-க்கும் மேற்பட்ட பஸ்களை எரித்தவர்கள், அதிலும் மாணவிகளை பேருந்துக்குள் பூட்டிக் கொளுத்தி - மூன்று பேரை உயிரோடு கொளுத்திய கிரிமினல்கள் அரசு விருந்தினர்களைப் போல நடத்தப் படுகின்றனர், சி.பி.ஐ. விசாரணை கோருகின்றனர். அவர்களது அரசியல் கவசம் பிய்த்தெறியப்பட வேண்டும். சட்டபூர்வ விசாரணைகள் நிறுத்தப்பட வேண்டும். மக்கள் தமது ஆத்திரம் தீர எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளும் உரிமையோடு, ஜெயா - சசி உட்பட அந்த கிரிமினல் (மஃபியா) குற்றக் கூட்டம் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அது அராஜகத்தை ஏற்படுத்தும் என்றால், இன்றைய தேவை இத்தகைய அராஜகம் தான் - புரட்சிகர அராஜகம்தான்!

✱ ஆர்.கே



படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க. உட்கட்சித் தேர்தல்: வாரிசுக்காக ஒரு மறுவார்ப்பு

கட்டுப்பாடான கட்சி, தவறாமல் கழக உட்கட்சித் தேர்தல் நடத்தும் மாண்பு, அரசியல் முதிர்ச்சி முதலான வெளித் தோற்றங்களுடன் ஜனநாயக வாதியாகவும் பண்பாளராகவும் பாசாங்கு செய்வதில் தி.மு.க. தலைவர் மு.க. திறமைசாலி; அதேசமயம் கட்சிக்குள் இரகசிய சதிகள் செய்து, தனது குடும்பமும் விசுவாசிகளும் மட்டுமே வெற்றி பெறும் வகையிலே தேர்தல் நடத்தி, உட்கட்சி ஜனநாயகம் பற்றி பீற்றிக் கொள்பவர் என்பதும் அரசியல் அரங்கில் யாவரும் அறிந்ததுதான். வைகோ வெளியேற்றப் பட்டு அவர் தனிக்கட்சி தொடங்கிய பிறகு, அண்மையில் தி.மு.க. உட்கட்சித் தேர்தலை ஒட்டி, மு.கருணாநிதி அறிவித்துள்ள முடிவுகள், மீண்டும் இதையே நிரூபித்துக் காட்டி விட்டன.

திருவள்ளுவர் தினத்தன்று முரசொலி அறக்கட்டளை விழாவில், "தி.மு.க. உட்கட்சித் தேர்தலில் மாவட்டச் செயலாளர் மற்றும் ஒன்றியச் செயலாளர் பதவிக்கு அமைச்சர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ போட்டியிடக் கூடாது" என்று கட்சியின் தலைவரான மு.க. அறிவித்தார்.

தி.மு.க. உட்கட்சித் தேர்தலில் நகரங்களிலும், ஒன்றியங்களிலும் தற்போது அமைச்சர்களாக இருப்பவர்களுக்கு வேண்டப்பட்ட ஆட்களே வெற்றி பெற்றுள்ளார்கள். இவர்களைக் கொண்டு மாவட்டச் செயலாளர் தேர்தலில் தற்போதைய அமைச்சர்களே வெற்றிபெற முயற்சிக்கிறார்கள். உட்கட்சித் தேர்தலில் இதற்காகப் பணப் பெட்டிகள் கைமாறி, ஏகப்பட்ட மோசடிகள் நடந்துள்ளன. இதனால் கட்சிக்காகப் பாடுபட்டவர்களுக்கு உரிய பதவிகள் கிடைப்பதில்லை. எனவே, ஒருவருக்கு ஒரு பதவி என்பதைச் செயல்படுத்தும் வகையிலேயே, தலைவர் மு.க. இத்தகைய முடிவை அறிவித்துள்ளார் என்றுக் கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது.

இதன்படி தற்போது அமைச்சர்களாகவும் மாவட்டச் செயலாளர்களாகவும் உள்ள கோ.சி. மணி, வீரபாண்டி ஆறுமுகம், தா. கிருட்டிணன், நேரு, பொன்முடி, என்.கே.கே. பெரியசாமி, பொங்களூர் பழனிச்சாமி, பிச்சாண்டி, ஐ. பெரியசாமி, முல்லை வேந்தன் ஆகியோருக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான டி.ஆர். பாலுவுக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஒருவருக்கு ஒரு பதவி எனில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோரும் அமைச்சர்களாக நீடிக்க முடியாமல் போய்விடும். இதனால் கட்சிக்கும் ஆட்சிக்கும் தொடர்புஇல்லாமல் போய்விடும் என்று காரணம் காட்டி, இந்த நான்கு பேருக்கும் விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

இதேபோல, மு.க.ஸ்டாலின் சென்னை மாநகர மேயராகவும், இளைஞரணி பொறுப்பிலும் இருப்பது சரியா என்ற வாதங்கள் எழுந்தபோது, இளைஞரணி என்பது கட்சி அல்ல; கட்சியின் துணை அமைப்புதான் என்றும் இந்த விதிவிலக்கு அவருக்கும் பொருந்தும் என்றும் கட்சித் தலைமை விளக்கமளித்துள்ளது.

கட்சித் தலைமையின் இந்த அதிரடி முடிவினால் அதிருப்தி அடைந்த அமைச்சர்களாக உள்ள மூத்த தலைவர்கள், கோ.சி. மணி தலைமையில் இரகசியக் கூட்டம் நடத்தியதாகவும், அமைச்சர் பதவியிலிருந்து விலகி மாவட்டச் செயலாளராக நீடிப்பது என முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் வந்தன. வீரபாண்டி ஆறுமுகம், நேரு ஆகியோர் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக கடிதம் கொடுத்து விட்டனர் என்றும் செய்திகள் வந்தன. கட்சிக்குள் பூகம்பம் வெடிக்கப் போவதாகக் கிசுகிசுப் பத்திரிகைகள் பரபரப்பாக எழுதின. ஆனால், அதற்கும் வாய்ப்பு இல்லாதபடி, புதியதொரு முடிவை தி.மு.க. தலைமை அறிவித்தது.

நீண்ட காலமாகக் கட்சியில் இருக்கும் மூத்த தலைவர்கள் - குறிப்பாக கோ.சி. மணி, வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் தொடர்ந்து பல ஆண்டுகளாக மாவட்டச் செயலாளர்களாக இருப்பவர்கள். இவர்கள் அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டுக் கட்சிப் பதவியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தாலும் அதற்கும் இப்போது வாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஏனெனில், மூன்றுமுறை மாவட்டச் செயலாளர்களாக இருந்தவர்கள், மீண்டும் அப்பதவிக்குப் போட்டியிடத் தடை விதித்துப் புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, கட்சியின் இரண்டாம் மட்டத்திலுள்ள மூத்த தலைவர்களால் இனி மாவட்டச் செயலாளராக முடியாது. தற்போதுள்ள அமைச்சர் பதவியும் இன்னும் ஓராண்டுக்குத்தான். அதன் பிறகு நடக்கும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றாலும், மீண்டும் அவர்களுக்கு



அமைச்சர் பதவி கிடைக்கும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. இதுநாள் வரை அந்தந்த மாவட்டங்களில் குறுநில மன்னர்களாக வலம்வந்த இவர்கள், இனி மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டியதாகிவிடும்.

நீண்டகாலமாக கட்சியிலுள்ள மூத்த தலைவர்கள், தமது ஆதரவாளர்களுடன் கட்சிக்குள் கோஷ்டி கட்டுவதைத் தடுக்க வேண்டும். அவர்களைப் புறக்கணித்து விட்டதாகக் கருத முடியாதபடி தோற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும். அதேசமயம், அவர்கள் அதிருப்தியடைந்து கலகம் செய்துவிடாமல் பல் பிடுங்கப்பட்ட பாம்பாக மாற்றப்பட வேண்டும். இளைஞர்களுக்கு வழிவிடுவது என்ற பெயரில், புதியவர்களை மாவட்டச் செயலாளர்களாகத் தூக்கி விட வேண்டும். அதன் காரணமாக அவர்கள் தலைமைக்கு விசுவாசிகளாக இருப்பார்கள். அரசியல் அனுபவமிக்க, நிர்வாகத் திறனுள்ள இளைஞர் என்று தமது வாரிசு ஸ்டாலின் தலைமையின் கீழ் அவர்களை ஈர்க்க



தொடர்ச்சி 12-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் காஷ்மீர் கொள்கை:

## ★ இராணுவ அடக்குமுறை ★ இந்துக்கள் குடியேற்றம் ★ பாக். மீது தாழ்நிலைப் போர்

சுமார் 45 ஆண்டுகளாக நடைமுறைப் டுத்தப்பட்ட காங்கிரசின் காஷ்மீர்க் காள்கை, காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீராத லைவலியாக நீடிக்கவே வைத்தது.

ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே டைமுறைப்படுத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ். - ாரதீய ஜனதாவின் காஷ்மீர்க் கொள்கை, ாஷ்மீர்ப் பிரச்சினையைத் தீராத ருகுவலியாக மாற்றியிருக்கிறது.

பாக்ரான் - 2 அணுகுண்டு சோதனை

ாகூர் பேருந்து அரசு தந்திரம்

ார்கில் போர்

ந்திய விமானக் கடத்தல்.

வை, ஆர்.எஸ்.எஸ்.-ன் பிரதிநிதிகள், ாரதீய ஜனதாவின் இருபெரும் லைவர்களான வாஜ்பாயி, அத்வானி ஆட்சிப் பொறுப்பேற்றபின் நடந்த, ாஷ்மீர்ப் பிரச்சினையுடன் தொடர்புடைய ான்கு முக்கிய நிகழ்வுகள்.

இந்நான்கிலும் ஆர்.எஸ்.எஸ். - ாராதீய ஜனதா கும்பலின் அந்நிய, ாஷ்மீர்க் கொள்கைகளின் படுதோல்வி ாகவே முடிந்தன.

★ "காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் ர்வதேச ரீதியில் அந்நியப்பட்டு விட்டது - ம்பலப்பட்டு விட்டது."

★ "காஷ்மீர் விவகா த்தில் இந்தியா சர்வதேச, றிப்பாக அமெரிக்க ஆதரவைப் பெற்று ருகிறது" - இப்படி ந்திய ஆளும் - எதிர்த் ரப்புப் பிரச்சாரகர்கள் பருங்கூச்சல் போடுகிறார் ள்.

ஆனால், காஷ்மீர் ளநிலைமைகள் என்ன? ம்மு - காஷ்மீரில் மட்டும் ரண்டு இலட்சம் இந்திய ராணுவ - துணை ராணுவத்தினர் "பணி ல்" ஈடுபடுத்தப்பட்டிருக் ன்றனர். அரசு அறிவிப் ன்படி 1200லிருந்து 2000 பர் வரையிலான ாகிஸ்தானிய - ஆஃப்கா ிய ஊடுருவல் தீவிர ாதிகள் இயங்குகின்றனர்.

இப்போது, காஷ்மீரில் உள்ள இந்திய இராணுவ - துணை இராணுவப் படையினர் தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் வேட்டையில் ஈடுபட்டுள்ளனரா? அல்லது,

"எல்லைக்கப்பால் இருந்து வரும் தீவிரவாதிகள்" தாம் இந்திய இராணுவ - துணை இராணுவப் படையினரைத் தேடி அழிக்கும் வேட்டையில் ஈடுபட்டுள்ளனரா? என்று இனங்காண முடியாத அளவுக்கு "காஷ்மீர்ப் போர்" வளர்ந்திருக்கிறது.

குறிப்பாக, கார்கில் போருக்குப் பிறகு இராணுவ, துணை இராணுவ முகாம்கள், மையங்கள் மீது, மாதா மாதம் அதிகரித்த எண்ணிக்கையில் தற்கொலைப்படைத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

★ ஜூலை 13-ந் தேதி பாண்டிப்போரா என்னுமிடத்தில் உள்ள எல்லைப் பாதுகாப்புப் படை மீது நடந்த தாக்குதலில் துணை இயக்குநரும், நான்கு படைவீரர்களும் கொல்லப்பட்டனர்.

★ ஆகஸ்டு 6-ந் தேதி நட்நூகிலும், ஆகஸ்டு 7-ந் தேதி தெரேகாமிலும், ஆகஸ்டு 13-ந் தேதி பீர்வாவிலும் உள்ள இராணுவ முகாம்களின் மீது நடந்த தாக்குதல்களில், ஒரு மேஜர், ஒரு கர்னல், இரண்டு இளநிலை அதிகாரிகள் மற்றும் ஆறு படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

★ செப்டம்பர் 12-ந் தேதி, தலைநகர் சிரீநகரின் அருகே உள்ள அதீதப் பாதுகாப்பு வசதிமிக்க பதாம்பாக் இராணுவத் தலைமையகத்தின் மீது நடந்த தாக்குதலின் இழப்புகள் இரகசியமாக வைக்கப் பட்டிருக்கின்றன.

★ நவம்பர் 3-ந் தேதி, சிரீநகரின் மையத்தில் உள்ள இராணுவத் தலைமையகத்தின் மீதான தாக்குதலில் இராணுவ செய்தித் தொடர்பு அதிகாரி உட்பட பத்துப் பேர் கொல்லப்பட்டனர்.

★ டிசம்பர் 7-ந் தேதி பாராமுல்லாவில் உள்ள இராணுவத் தலைமையகத்தின் மீதான தாக்குதலில் ஒரு இளநிலை அதிகாரி கொல்லப்பட்டார்.

★ டிசம்பர் 13-ந் தேதி மீண்டும் சிரீநகர் இராணுவக் குடியிருப்பு மீதான தாக்குதலில் 5 போலீசார் கொல்லப்பட்டனர்.

★ டிசம்பர் 15-ந் தேதி ரஃபியாபாத் இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பொதுவில் பலர் படுகாயமடைந்ததாக மட்டும் தெரிவிக்கப்படுகிறது.

★ டிசம்பர் 27-ந் தேதி சிரீநகரில் உள்ள சிறப்பு நடவடிக்கைக் குழுத் தலைமையகம் மீது நடந்தது தாக்குதலில் ஒரு துணை கண்காணிப்பு அதிகாரியும் சிறப்பு நடவடிக்கைக் குழுவினரும் கொல்லப் பட்டனர்.

★ இந்த ஆண்டு ஜனவரி 2-ந் தேதி, சிரீநகர் காய்கறிச் சந்தையில் இருந்த சிறப்புப் பாதுகாப்பு படை மீதான தாக்குதலில் இரண்டு படையினர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.

★ ஜனவரி 7-ந் தேதி, சிரீநகர் வானிலை மையத்தின் மீது நடந்த தாக்குதலில் நான்கு மத்திய ரிசர்வ் படையினர் கொல்லப்பட்டனர்.

★ ஜனவரி 12-ந் தேதி, ஆனந்தநாக் நகரில் உள்ள ராஷ்ட்ரீய ரைபிள் தலைமையகத்தின் மீதான தாக்குதலில்

நிரந்தர இராணுவக் கண்காணிப்பு - சோதனையின் கீழ் வைத்திருக்கப்படும் காஷ்மீர் மக்கள்





படிப்பகம்

www.padippakam.com

இழப்புகள் பற்றி விவரம் மறைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர ஆளுங்கட்சிப் பிரமுகர்கள், ரோந்துப் படையினர் உட்பட பல இலக்குகள் குறிவைத்துத் தாக்கி அழிக்கப்படுகின்றன. கடந்த ஜனவரி 16-ந் தேதி மின்சார வலைப் பின்னல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதுமே இருளில் மூழ்கியது.

இப்படி அடுத்தடுத்து தொடரும் தாக்குதல்கள் எல்லாம் ''தற்கொலை''ப் படையினரால் நடத்தப்படுகின்றன. ''இந்நாள் தீவிரவாதிகள் தமிழ்ப் புலிகளைப் போன்றவர்களாக இருக்கிறார்கள். அதீத சாகச நடவடிக்கைகளில் ஈடுபடத் தயங்குவதே இல்லை'' என்று புலம்புகிறார், ஒரு இந்திய மூத்த அதிகாரி.

மொத்தத்தில் காஷ் மீரில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவமும் துணை இராணுவமும் பீதியில் இருக்கின்றன. இதை நிரூபிக்கும் வகையில் ஒரு சம்பவமும் நடந்துள்ளது.

கடந்த ஜனவரி முதல் வாரத்தில் ஒருநாள் இரவு ரோந்து சுற்றிவிட்டுத் திரும்பிய மத்திய ரிசர்வ் போலீசுப் படையின் ஒரு குழுவைப் பார்த்து, தீவிரவாதிகள்தாம் தம் முகாமைத் தாக்க வந்துவிட்டார்கள் என்று பீதியடைந்த அதே படைப் பிரிவினர் சுட்டனர். இரு பிரிவுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஐந்து பேர் மாண்டனர்.

இந்திய இராணுவ, துணை இராணுவத் தினரிடையே குழப்பம், பீதி பரவி வரும் அதேசமயம், லஸ்கர் - இதோய்பா, ஹர்கத் - உல் - முஜாகிதீன், ஹிஸ்ப் - உல் - முஜாகிதீன் ஆகிய இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளின் தற்கொலைப் படையினர் அதிநவீன ஆயுதங்கள் - செய்தித்தொடர்பு சாதனங் களைக் கொண்டு மிகச் சுலபமாகத் தாக்குதல் தொடுக்கின்றனர்.


டிசம்பர் 27-ந் தேதி சிறீநகர் சிறப்பு நடவடிக்கைக் குழு தலைமையகத்தைத் தாக்கித் தகர்த்த தீவிரவாதிகள், அதைப் பார்வையிட மூன்று நாட்களுக்குப் பிறகு காஷ்மீர் முதல்வர் வந்தபோது, அவர் வருவதற்குச் சில மணி நேரம் முன்பாக பயங்கரக் குண்டு வெடிப்பைச் சாதித்துள்ளனர்.

''கார்கில் போருக்குப் பிறகு, குறிப்பாக பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நிறுவப் பட்ட பிறகு, காஷ்மீரில் தீவிரவாதம் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகிவிட்டது, தாக்குதல்கள் பன்மடங்கு பெருகிவிட்டன'' என்று இந்திய இராணுவம் எண்ணுகிறது.

கார்கில் போரையும், விமானக் கடத்தலையும் தொடர்ந்து, நாடு முழுவதும் தேசிய வெறியைக் கிளப்பிவிடுவதில் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா வெற்றி பெற்றாலும், காஷ்மீரில் களநிலைமைகள் அதற்குப் பாதகமாகவே உள்ளன. ''வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி'' அரசு மென்மையான வழிகளை மேற்கொள்வதால்தான் பின்னடைவுகள் ஏற்படுகின்றன. அதற்கு மாறாக, ஆர்.எஸ்.எஸ்.-ன் காஷ்மீர் கொள்கையைப் பின்பற்றுவதே பிரச்சினைக்குத் தீர்வாகும்'' என்கிற பிரச்சாரம் முடுக்கி விடப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ்.-ன் ஊதுகுழலான ''துக்ளக்'' சோ பின்வருமாறு தலையங்கம் எழுதுகிறார்:

''சற்றும் தயங்காமல் இஸ்ரேல், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவி கொண்டு, நமது திடீர்த் தாக்குதல் முறைகளை நாம் ஒழுங்காக அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான உபகரணங்களையும், ஆயுதங்களையும், பயிற்சியையும் பெற வேண்டும். விமான நிலையங்களில் பாதுகாப்பு முறைகளை, சோதனை முறைகளை சரி செய்து கொள்ளவும்கூட, இவற்றில் அனுபவப்பட்ட நாடுகளின் உதவியைப் பெறவேண்டும். காஷ்மீரில் சற்றும் தயவு தாட்சண்யம் காட்டாமல் தீவிரவாதத்தை ஒடுக்க முனைய வேண்டும். தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சட்டத்தை நம்புவதைவிட, நிர்வாக உறுதியையும், போலீஸ் மற்றும் இராணுவ முனைப்பையும்தான் நம்ப வேண்டும். சில நேரங்களில் அடி உதவுகிறார்போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்; தீவிரவாதிகள் விஷயத்தில் என்கௌண்டர் உதவுகிறார் போல், சட்டம் உதவாது.'' (துக்ளக் 12.1.2000)



**சொந்த நாட்டிலேயே அந்நியர் போல் நடத்தப்படும் அவலம்**

இங்கே, துக்ளக் சோவிடம் வழக்கமாகக் காணப்படும் காந்தியின் அகிம்சை காமராஜரின் பெருந்தன்மை, மூப்பனாரின் ரஜினியின் மனிதநேயம் என்கிற முக மூடியைக் காணோம்! கேலியும், கிண்டலும் ததும்பும் அரசியல் விகடம்கூடக் கிடையாது அப்பட்டமான - நிர்வாணமான பாசிசக் கோமாளியாக விசுவரூபமெடுக்கிறார்.

இதுதான் அத்வானி முதலிய ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிஸ்டுகளின் நிலையும். ''காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அணு ஆயுதப்போர் தொடுப்போம்; காஷ்மீர்த் தீவிரவாதி களுக்குப் பயிற்சி கொடுக்கும் பாகிஸ்தானிலுள்ள முகாம்களைக் குண்டு வீசித் தகர்ப்போம்! முழு அளவிலான போர்ப் பிரகடனம் செய்து பாகிஸ்தான் கைவசம் உள்ள காஷ்மீரப் பகுதியையும் மீட்போம்'' என்று வெறிக்கூச்சல் போடுகிறார்கள்.

வழக்கமாக இறுகிய முகங்களுடன் இட்லர் பாணி வணக்கம் செலுத்தும் காக்கிக் கால்சட்டைக்காரர்களின் முகங்கள் . கடுப்பாகி இருண்டு போயிருக் கின்றன.

அந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பொதுச் செயலாளர் சேசாத்திரி, ''விமானக் கடத்தல் சம்பவத்தைக் கையாண்ட விதம் இந்தியாவை மென்மை யான அரசாகக் காட்டி விட்டது. வானொலி - பத்திரிகைகளும் இதற்குக் காரணமாக உள்ளன. பணயக் கைதிகளின் உறவினர்களுடைய உணர்ச்சிப் பெருக்கை வானொலி - பத்திரிக்கைகள் தொகுத்தளித்த தானது, நிர்பந்தங்கள் உருவாகக் காரணமாகிவிட்டது'' என்கிறார்.

எதிர்க் கட்சியாக இருந்தபோது பா.ஜ.க எடுத்த நிலைப்பாடுகளுக்கு மாறாக தேசியப் பாதுகாப்பு விவகாரங்களில் நடப்பது பற்றிக் கேட்டபோது, ''நான் பா.ஜ.க காரன் அல்ல; ஆனால், பாகிஸ்தானுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவிக்கும்படி இந்தியா கோருவதைப் பற்றிக் கேட்ட போது, ''நாம் நமது சொந்த பலத்தில் திருப்பித்தாக்க வேண்டும்'' என்று ஆத்திரத்துடன் வெடிக்கிறார்.

விமானக் கடத்தல் பிரச்சினை மீதான விவாதத்தின் போது இஞ்சி தின்ற அனுமானாகச் சகித்துக் கொண்ட அத்வானி, ஆர்.எஸ்.எஸ் - ன் குஜராத் கூட்டத்திற்குப் போய் மண்டியிட்டுக் கதறாத குறைதான்!



படிப்பகம்

www.padippakam.com

''விமானக் கடத்தல் சம்பவம் பா.ஜ.கவின் தோற்றத்துக்கு ஒரு பின்னடைவுதான். ஏனென்றால், மற்றெல்லாக் கட்சிகளையும் விட, பா.ஜ.க மாறுதலானது என்று மக்கள் கருதி வந்தார்கள். அதற்கேற்ப பா.ஜ.க. நடந்து கொள்ளவில்லை'' என்று சுருங்கிய முகத்துடன் பேட்டியளித்தார்.

அப்படி மற்ற கட்சிகளிடமிருந்து பா.ஜ.க. கொண்டிருக்கும் மாறுபாடான காஷ்மீர்க் கொள்கைதான் என்ன? தீர்வுதான் என்ன?

''என்னதான் காஷ்மீரிகள் இந்தியாவுடன் சேர்ந்திருந்தாலும் அடிப்படையில் அவர்கள் வெறிபிடித்த முஸ்லீம்கள்தான் என்பதும், முஸ்லீம் மதத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதையும் பாகிஸ்தானி ஆதரவாளர்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டனர்.''



பழ வியாபாரியிடம் வெடிகுண்டைத் தேடி மிரட்டும் இராணுவம்:
அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்!

''ஆனால், வேதனை என்னவென்றால், முஸ்லீம்கள் என்றைக்கும் முஸ்லீம்களாகத் தான் நடப்பார்கள் என்பதையும், நாட்டை விட மதமும் தாருல் இஸ்லாமாகிய பாகிஸ்தானையும் தான் முக்கியமாக நினைப்பார்கள் என்பதையும் அறிந்து கொள்ள இந்திய அரசு தவறிவிட்டது'' என்று ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. அல்லாத அரசுகள் மீது அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ஆர்.எஸ்.எஸ் பத்திரிக்கை - விஜய பாரதம், 1989)

''1989 நவம்பர் பாராளுமன்றத் தேர்தலில் காஷ்மீர் மக்களின் மீதுள்ள தீவிரவாதிகளின் பிடிப்பு வெட்ட வெளிச்சமாகத் தெரிய வந்தபோது, நமது மத்திய அரசு நாட்டுப் பற்றுடன் விழித்துக் கொண்டிருந்திருக்குமானால், இன்று காஷ்மீரில் உருவாகியிருக்கும் பிரச்சினையை முளையிலேயே கிள்ளியிருக்க முடியும்.''

''ஒரு மாநிலம் முழுமையிலுள்ள மக்கள் வெறும் 2 சதமானம் மட்டுமே ஓட்டளித்திருக்கிறார்கள் என்ற உண்மை பாரதீய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். போன்ற தேசபக்தி இயக்கங்களை மட்டுமே பலமாகக் கவலை கொள்ள வைத்தது.''

''நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியையோ, ஆளப்போகும் ஜனதா தளத்தையோ, வேறு எந்த மாநிலக் கட்சிகளையோ இந்த உண்மை சிறிதும் பாதிக்கவில்லை'' என்று வெதும்புகிறார்கள். (மேற்படி பத்திரிகை)

ஆக, காஷ்மீர் மக்கள் அனைவரையும் எதிரிகளாக வைத்துத்தான் அணுக வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க வின் நிலை.

''காஷ்மீரில் பெரும்பான்மை மக்கள் மதவெறியின் அடிப்படையில் பாகிஸ்தானுடன் இணையும் ஆசையை தங்களுக்குள் உண்டாக்கிக் கொண்டு விட்டார்கள்.''

''இந்நிலையில் அவர்களை ஓட்டுப் போட வைத்து, அவர்களது கட்சி (முஸ்லீம் ஒற்றுமை முன்னணி) வெற்றிபெற்று, ஆட்சி அவர்களிடம் போகுமானால் பாகிஸ்தானுக்கு அது பழம் நழுவி பாலில் விழுந்தது போலாகிவிடும்.''

''ஆகவே, காஷ்மீர மக்கள் இந்தியாவை நேசிக்கத் துவங்கும்வரை, அங்கு அரசியல் சுதந்திரத்தை அனுமதிப்பது இந்தியாவின் ஒற்றுமைக்கே ஆபத்து'' (மேற்படி பத்திரிகை.)

இதற்கு விளக்கம் எதுவும் தேவையில்லை. யூத இனத்தின் மீது நாஜி இட்லர் கொண்டிருந்த அதே ஆரிய இனவெறிக் கண்ணோட்டம்தான், இங்கே இசுலாமியர் மீது ஆரிய - பார்ப்பன பாசிச ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வின் கண்ணோட்டமும். ஆகவே, அவர்களுக்கு இருக்கும் ஒரேவழி, காஷ்மீர் தேசத்து மக்கள் விரும்பும் உரிமையை சற்றும் மதியாமல், ஆக்கிரமிப்பு அரசு பயங்கரவாதத்தை ஏவி விடுவதுதான்!

''உடனடியாக, காஷ்மீரில் நடக்கும் மதரசா பள்ளிகளைத் தடை செய்ய வேண்டும்.''

''முஸ்லீம் வெறியையும் தேசத் துரோகத்தையும் வளர்த்து விடும் எந்த அமைப்பினரையும் சுட்டுத்தள்ள வேண்டும்.''

''இந்திய முஸ்லீம்கள் காஷ்மீரில் உள்ளவர்களின் போக்கை மாற்ற வேண்டும். இந்தியாவில் முஸ்லீம் அடிப்படை வாதம் செல்லுபடியாகாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.''

''காஷ்மீர் எல்லை முழுவதும் இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும். அங்கு ஓய்வு பெற்ற இந்தியப்படை வீரர்களைக் குடியமர்த்த வேண்டும். காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து தரும் 370 அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும். ஏராளமான மற்ற மாநில மக்களை காஷ்மீரில் குடியமர்த்த வேண்டும். அங்குள்ள முஸ்லீம்களின் ஏகபோக மெஜாரிட்டியைக் குறைக்க வேண்டும்.''

''காஷ்மீரில் இருந்து ஓடிவந்த பல இலட்சம் ஹிந்துக்களின் சொத்துக்களை மீட்டுக் கொடுத்து, அவர்களை அங்கு பாதுகாப்புடன் குடியமர்த்த வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் நேர்மையான, தேசபக்தியுள்ள லஞ்சமில்லாத ஆட்சியை நடத்த வேண்டும்'' (மேற்படி ஆதாரம்)

இதுதான் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க கும்பலின் காஷ்மீர்க் கொள்கை. இதையே தான் பார்ப்பன பாசிசக் கோமாளி துக்ளக் சோவும் எழுதுகிறார்.

இவ்வளவு காலமும் தாராளவாத, ஜனநாயக வேடம் கட்டிக் கொண்டிருந்த முதலாளித்துவப் பத்திரிக்கைகள்கூட கார்கில் போர், இந்திய விமானக் கடத்தல் சம்பவங்களுக்குப் பிறகு அப்பட்டமாகவே இந்த நிலை எடுத்துள்ளன.

★ காஷ்மீரில் ஆக்கிர மிப்பு அரசு பயங்கரவாதத்தை வெறியுடன் அமலாக்குவது;

★ தொழில் - பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் என்கிற பெயரில் காஷ்மீரில் வெளியாரின் குடியேற்றத்தை நிறுவி, காஷ்மீரிகளின் பாரம்பரிய பூமியைப் பறிப்பது; காஷ்மீர் தேசத்தை முழுக் காலனியாக்குவது;

★ பாகிஸ்தான் மீது தாக்குதல் தன்மையுடைய தாழ்நிலைப்போர் தொடுப்பது; வாய்ப்புக் கிட்டினால் விமானத் தாக்குதல் உட்பட தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்வது.

இந்த மும்முனைத் திட்டத்தை அமலாக்குவது என்று கடந்த ஜனவரி மாத மத்தியில் வாஜ்பாய் - அத்வானி அரசு முடிவு செய்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

காஷ்மீர், பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்திய இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பகுதிதான் என்பதை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் அதன் பாணியில் ஒப்புக் கொள்கிறது.

ஆனால், இரண்டு காரணங்களின் அடிப்படையில் காஷ்மீர் மண்ணின் மீது உரிமை கொண்டாடுகிறது. அதாவது, ஆரிய வர்த்தமாகிய அகண்ட பாரதத்தின் ஒரு பகுதி, இந்துத்துவத்தின் புண்ணிய பூமி; இரண்டாவதாக, 1947-இல் பாகிஸ்தானியப் படையின் அட்டூழியங்களைப் பொறுக்க மாட்டாத காஷ்மீர இந்து மன்னனும், அவரது பிரதிநிதியும் மட்டுமல்ல, ஷேக் அப்துல்லா தலைமையிலான இசுலாமியர்களே கேட்டுக் கொண்டதன் பேரில் தலையிட்டு இரத்தம் சிந்தி இந்திய இராணுவத்தினர் கைப்பற்றினர். இவ்விரு காரணங்களால் எப்படியாயினும் காஷ்மீரை இந்தியப் பிடிக்குள் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வின் நிலை.

ஆகவே, இந்திய இராணுவ அரசு பயங்கரவாதச் செயல்களை மேலும் மேலும் கடுமையாக்கி, அம்மக்களைக் காலனிய அடிமைகளாக்குவது; இந்துக்களின் குடியேற்றம் மூலம் காஷ்மீரை இந்துமயமாக்குவது ஆகியவைதான் இந்து மதவெறி பாசிசத்தின் தீர்வு.

இத்தீர்வை அமலாக்குவது என்பது காஷ்மீர் மக்களை இந்தியாவின் மீது மேலும் வெறுப்பு கொண்டு, பாகிஸ்தான் பக்கம் அதிகரித்த அளவில் தள்ளுவதற்கே வழி வகுக்கும். இந்திய அரசு பயங்கரவாதத்துக்கு பதிலடி கொடுப்பார்கள். அதை இந்தியா தாங்கவும் முடியாது. உலக அரங்கில் மேலும் இந்தியா தனிமைப்படும்.

எல்லாவற்றுக்கும் மேலான ஒரு உண்மை என்னவெனில், அரசு பயங்கரவாதமும், காலனியமயமாக்கலும் எந்தவொரு இன மக்களையும் நீண்ட காலத்துக்கு அடிமைப்படுத்தி வைத்திருக்க உதவாது. பழைய வரலாறு ஒருபுறம் இருக்கட்டும். மிகச் சமீபத்திய கிழக்கு திமோர், ஈழப் பிரச்சினைகளையே இதனைப் பார்க்கலாம். அத்தகைய முயற்சியில் பாசிச ஆக்கிரமிப்பாளர்கள் நிறையவே விலை கொடுக்க வேண்டியிருக்கும்; அப்படியும் வெற்றி கானல் நீராகவே அமையும்.

✱ ஆர்.கே

---

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

முடியும். அதன் மூலம் தமது வாரிசுக்கு எளிதாக மகுடம் சூட்டி விட முடியும் என்று அரசியல் சாணக்கியரான மு.கருணாநிதி கணக்கு போட்டு காய்களை நகர்த்தியுள்ளார்.

இது ஏதோ புதிய விவகாரமல்ல; இத்தகைய சதிகளும் சூழ்ச்சிகளும், தூக்கி விடுவதும் காலைவாரி விடுவதும் கருணாநிதிக்குக் கைவந்த கலை. முன்பு மதுரை முத்துவுக்கு எதிராக காவேரி மணியத்தையும், தென்னரசுவையும் தூக்கி விட்டார். பிறகு பழக்கடை பாண்டியனையும், பொன். முத்துராமலிங்கத்தையும் தூக்கி விட்டார். இப்போது காவேரி மணியத்துக்கு நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவிகூடத் தராமல் காலை வாரிவிட்டார். இதேபோலத்தான் சென்னையில் முன்பு செல்வாக்கு பெற்றிருந்த ஆர்.டி. சீதாபதி, கருணாநிதியால் உருவாக்கப்பட்டவர். பின்னர் டி.ஆர். பாலுவைத் தூக்கி நிறுத்தி சீதாபதி கவிழ்க்கப்பட்டார்.

இப்படி கருணாநிதிக்கும் அவரது குடும்பத்துக்கும் விசுவாசம் இல்லாதவர்கள் ஓரங்கப்பட்டார்கள்; பழிவாங்கப்பட்டார்கள் அல்லது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதையும் மீறி, கட்சியில் தமது சொந்த செல்வாக்கினால் வளர்பவர்களையும் அவர் பொறுத்துக் கொண்டதில்லை. அன்பழகன், நாஞ்சில் மனோகரன், ஆற்காடு வீராசாமி போன்ற வேரும் விழுதும் இல்லாத தலையாட்டி பொம்மைகளும் துதிபாடிகளும் விசுவாசிகளும் தான் அவருக்குத் தேவை.

தாம் விரைவில் பழிவாங்கப்பட்டு விரட்டப்படுவோம்; அதற்கு முன் ஏதாவது புதிய தலைமையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று காத்திருந்த இரண்டாம் மட்டத் தலைவர்களுக்கு அன்று வைகோ கிடைத்தார். மூன்றிலொரு பங்கு மாவட்டச் செயலாளர்கள் விலகி, வைகோவுடன் சேர்ந்து தனிக்கட்சி தொடங்கினார்கள்.

ஆனால், இன்றைய இரண்டாம் மட்ட தி.மு.க. தலைவர்களுக்கு அத்தகைய வாய்ப்பும் இல்லை. தலைமைக்கு விசுவாசமாக இருந்தாலும், அவர்கள் தமது மாவட்டப் பகுதிகளிலேயே காலூன்றி நிற்க முடியாதபடி குழிபறிப்புகள் நடக்கின்றன. தமது ஆதரவாளர்களை நகரச் செயலர், ஒன்றியச் செயலர் தேர்தலில் வெற்றிபெறச் செய்ய அவர்கள் முயற்சித்தாலும், கள்ள ஓட்டு, மோசடி - தில்லுமுல்லு, வாக்காளர் கடத்தல், பணப்பட்டுவாடா முதலானவற்றின் மூலம் தலைமை திணிக்கும் புதிய விசுவாசிகளே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகின்றனர். மேலும், கட்சியின் நிர்வாக வசதிக்காக என்ற பெயரில் தமிழகத்தை 50 மாவட்டங்களாகப் பிரித்து, மாவட்டச் செயலாளர்களின் பலமும் அதிகாரமும் செல்வாக்கும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டாம் மட்டத் தலைவர்கள், தி.மு.க. தோன்றி வேர்விட்ட சிறிது காலத்திற்குப் பின்னர் வந்த அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள்தான். இவர்கள் கொள்கை - இலட்சியப் பிடிப்போ, போராட்டங்களில் ஈடுபட்ட அனுபவமோ, மக்கள் மத்தியில் செல்வாக்கோ கொண்டவர்களும் அல்ல. தனிப்பட்ட அடியாட்படை, ரௌடித்தனம், கட்டைப் பஞ்சாயத்து, அதிகார முறைகேடு முதலான அராஜக அடாவடித்தனங்களால் ஏற்கனவே மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்பவர்கள்தான். கட்சியிலேயே ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி நிற்பவர்கள் தான். ஸ்டாலினுக்கு முந்தைய காலத்திலிருந்தே கட்சியில் இயங்கி வருபவர்கள் என்பதைத் தவிர, வேறு எந்த சிறப்புத் தகுதியோ, செல்வாக்கோ இவர்களுக்குக் கிடையாது. இருப்பினும், இரண்டாம் மட்டத் தலைவர்களாக உள்ள இவர்கள் கட்சியில் நிலவும் அதிருப்தி காரணமாக ஸ்டாலினுக்கு எதிராக ஒரு அணியாகத் திரண்டு விடுவார்களோ என்ற சந்தேகம் காரணமாகவே, கருணாநிதி இவர்களை ஓரங்கட்டி முடக்கிவிட முயற்சிக்கிறார்.

இவை ஏதோ தி.மு.க. கட்சிக்குள் நடக்கும் விவகாரம் என்று தமிழக மக்கள் ஒதுக்கிவிட முடியுமா? நிச்சயமாக முடியாது. பதவி - சுயநலனுக்காக எதையும் செய்யத் துணியும் கடைந்தெடுத்த பிழைப்புவாதிகள், துதிபாடிகள், சாதிவெறியர்கள், அடியாட்படை கொண்ட சமூகவிரோதிகள், ஐயப்பப் பக்தர்களாகவும் ரௌடிகளாகவும் உள்ள இளைஞரணியினர், ரஜினி ரசிகர்கள் என்று வீரிய ஒட்டு ரகப் பொறுக்கி அரசியல் கும்பலின் பிடியில் ஏற்கனவே தி.மு.க. சிக்கிக் கொண்டு விட்டது. தரகுப் பெருமுதலாளித்துவ குடும்பமாக மாறிவிட்ட மு.க. - மாறன் - ஸ்டாலின் தலைமைக்குத் துதிபாடும் பொறுக்கி அரசியல் கூடாரமாக, அதை மேலும் வளர்த்து நிலைநாட்டும் வகையிலேயே தற்போதைய தி.மு.க. உட்கட்சி முடிவுகள் அமைந்துள்ளன.

ஆக, விசுவாசிகளுக்கே பதவி, துதிபாடும் கூட்டத்துக்கே நாற்காலி என்று எகத்தாளத்துடன் அவமானப்படுத்தி சர்வாதிகாரத்துடன் நடக்கும் பார்ப்பன - பாசிச ஜெயாவின் அ.தி.மு.க.வுக்கும் இதையே நாசூக்கான முறையில் செய்து வரும் தி.மு.க. தலைமைக்கும் வேறுபாடு எதுவும் இல்லாமல் போய்விட்டது.

தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு விட்ட இப்பொறுக்கி அரசியல் கும்பல், தமிழக மக்களுக்கு எதிராக மூர்க்கமாகத் தனது பலமுனைத் தாக்குதலைத் தொடுக்கவே செய்யும். அதன் கூட்டாளியாக இந்துவெறிப் பாசிசப் பரிவாரங்கள் மைய ஆட்சியதிகாரத்தில் உள்ள நிலையில், புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களுக்கு எதிராகவும், தமிழின உரிமைக்கு எதிராகவும் பயங்கரவாத - பிரிவினைவாதப் பீதியூட்டி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடவே செய்யும். எனவே, தி.மு.க.வில் நடக்கும் அரசியல் அசிங்கங்களைக் கண்டு தமிழக மக்கள் ஒதுங்கிவிடக் கூடாது. இந்துவெறி பாசிசத்தை ஏந்தி வரும் பல்லக்காக மாறிவிட்ட இந்தப் பிழைப்புவாதப் பொறுக்கி அரசியல் கூடாரத்தை முறியடிக்க முன்வர வேண்டும்.

✱ குமா



படிப்பகம்

www.padippakam.com

# போலீசிடம் சிக்கிய பணயக் கைதிகளாகப் பொது மக்கள்

எனக்கென்னவோ, சாவுகளில் மிகவும் கொடூரமானது, குரூரமானது, வேதனையானது உயிரோடு தீயில் எரிந்து சாவதுதான் என்று தோன்றுகிறது. அது விபத்தோ, கொலையோ, தற்கொலையோ, எதன்காரணமாக இருந்தாலும் சரி. கொலைவெறி மேலும் உக்கிரமடைந்து விகாரமாகும் பொழுது, எரித்துக் கொல்ல வேண்டும் என்கிற வக்கிர வடிவம் பெறுகிறது. மன உடைவு மேலும் இறுகி உறைந்து போகிறபோது, தன்னைத்தானே கொளுத்திக் கொண்டு சாவதைத் தெரிவு செய்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

அருகிலுள்ள புகைப்படத்தில் உயிரோடு எரிந்து கொண்டிருக்கும் 26 வயது இளைஞன் மான்தீப் சிங் சோதி. இது விபத்தல்ல. பிறகு கொலையா? தற்கொலையா?

அந்த இளைஞன் தன்மீதே எரி எண்ணெய் (பெட்ரோல்) ஊற்றிக் கொண்டு கொளுத்திக் கொண்டான். இந்த வயதில் இப்படி ஒரு இளைஞன் செய்தால், அநேகமாகக் காதல் தோல்வியால் செய்து கொள்ளும் தற்கொலையாகத்தான் இருக்கும் என்று பலரும் எண்ணுவர். இல்லை; அப்படிக் காதல் தோல்வி போன்ற எதுவும் காரணமில்லை.

''இல்லை. அவன் தற்கொலை செய்து கொள்ளவில்லை. போலீசால் கொல்லப் பட்டான்'' என்று கதறுகிறாள், அவனது விதவைத் தாய் மால்கீக் கௌர்.

அவன் ''விரக்தீ''யில் எரிந்து மாண்டான்; அதாவது, அவனுக்கும் அவனது சகோதரர்களுக்கும் தொடர்ந்து போலீசுக்காரன்கள் கொடுத்து வந்த தொல்லை, துன்புறுத்தல்கள் தாளமாட்டாமல், தனது வெறுப்பையும் எதிர்ப்பையும் உலகுக்குக் காட்டுவதற்காகத் தன்னைத் தானே கொளுத்திக் கொண்டான் அந்த இளைஞன்.

பட்டப்பகலில், உத்திரப் பிரதேச மாநிலத் தலைநகர் இலட்சுமணபுரி, சட்டப் பேரவை வளாகத்து வாயிலில் இச்சம்பவம் நடந்தது. நெரிசலும் பரபரப்புமிக்க, அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அடிக்கடி வந்து போகும், பாதுகாப்புக்காக நிரந்தரமாக போலீசு முகாமிட்டிருக்கும் அந்தச் சாலையில், யாரும் எதிர்பாராமல் அந்த இளைஞன் தன்னைத்தானே கொளுத்திக் கொண்டான்.

அதைக் கண்ணெதிரே கண்ட மக்கள் திகைத்துப் போனார்கள். யாரும் அவனைக் காப்பாற்றிட முன்வரவில்லை. பாதிக்கு மேலாக அவன் எரிந்துபோன பிறகு, அங்கே வந்த சவாரி ''ரிக்ஷா''வில் கிடந்த போர்வையை இழுத்துப் போட்டுத் தீயணைக்க ஒரு போலீசு அதிகாரி முயன்றார். ஒரு போலீசுக்காரர் ஒரு வாளித்

தனது குடும்பத்தை வேட்டையாடி வந்த உ.பி. மாநில போலீசை எதிர்த்துத் தன்னை உயிரோடு எரித்துக் கொண்ட மான்தீப் சிங் சோதி





படிப்பகம்

www.padippakam.com

தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டினார். வாரிச்சுருட்டி அதே வண்டியில் போட்டு மருத்துவமனைக்குப் போனபோது அவன் உயிர் விட்டிருந்தான்.

ஏன் இந்தக் கோரம்? என்ன அவனது குறை? வேலையில்லாத ஐந்து மகன்களையும் இரண்டு மகள்களையும் வைத்துக் கொண்டு சொற்ப வருவாயில் அல்லாடிக் கொண்டிருந்தது அந்த சீக்கியக் குடும்பம். கடந்த ஆண்டு ஜனவரியில் ஒருநாள் திடீரென்று அவர்களுடைய வீட்டுக்குள் புகுந்த போலீசு, மூத்த மகன் யஷ்பால் சிங்கின் நண்பன் ஒருவன் முதல் நாள் கொண்டு வந்து நிறுத்திவிட்டுப் போன மோட்டார்சைக்கிளைக்கைப்பற்றியது. அது யஷ்பால் சிங், இந்தர்பால் ஆகிய இரு சகோதரர்கள் திருடி வந்தது என்று சொல்லி இழுத்துக் கொண்டு போய் சித்திரவதை செய்தது. பின்னர் அவர்களை விடுதலை செய்தது. அப்புறம் ஒரு போலீசுக்காரனைக் கொலை செய்ய முயன்றதாக யஷ்பாலைக் கைது செய்தது. பிணையின் வந்த அவன், போலீசு மீது மானநட்ட வழக்குப் போட்டான். அதனால் பழிவாங்கும் எண்ணத்துடன் இரண்டு சகோதரர்களை கிரிமினல் கும்பல்கள் சட்டத்தில் சிறையிலடைத்தது, போலீசு. மீண்டும் பிணையில் வெளிவந்தனர்.

அவர்களுடைய தாய் அப்போதைய முதல்வர் கல்யாண்சிங்கை நேரடியாகச் சந்தித்து முறையிட்டார். பிரச்சினையைக் கவனிப்பதாக அவர் கொடுத்த வாக்குறுதி காற்றில் கரைந்தது. தொடர்ந்து போலீசு ''ரெய்டு''களும், கைதுகளும் அக்குடும்பத்தை ஆட்டிப் படைத்தன. இப்படிப் போலீசு வேட்டை தொடரவே, அன்று தாய் வழக்கு மன்றத்துக்கும், மகன் மன்தீப்சிங் சட்டப்பேரவை வளாகத்துக்கும் சென்றனர். வழக்கு மன்றத்தில் ஒரு மகன் விடுதலை செய்யப்பட்டான். உயர் போலீசு அதிகாரிகளிடம் முறையிடப் போன இன்னொரு மகன் அங்கிருந்து விரட்டப்படவே வெறுத்துப் போய் தன்னைத்தானே கொளுத்திக் கொண்டு மாண்டான்.

நாட்டு நடப்புக்களைத் தொடர்ந்து கவனித்துவரும் அனைவரும் நன்கு அறிவர். மான்தீப் சிங் ''விரக்தீ''யில் வெந்து மாண்டது ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. ''நன்கு பயிற்சி பெற்ற, அமைப்பு ரீதியில் திரண்டுள்ள போலீசு என்ற கிரிமினல் கும்ப''லின் அராஜகத்துக்கு மௌனமாகப் பலியாகும் இதுபோன்ற சம்பவங்கள் பலவும் அன்றாடம் நடக்கின்றன.

மான்தீப் உயிரோடு கொளுத்திக் கொண்ட பரபரப்பு அடங்கும் முன்னரே, அச்சம்பவம் நடந்த இரண்டாம் நாள், மீரட் நகரில் காரில் சென்று கொண்டிருந்த ஒரு அப்பாவிப் பெண்ணை போலீசார் சுட்டுக் கொன்று விட்டு தவறான அடையாளம் காரணமாக நடந்து விட்டது என்று சமாதானம் கூறினர்.

சென்னையில் பல குடித்தனங்கள் வாழும் குடியிருப்பு ஒன்றில் மிதிவண்டி நிறுத்தும் தகராறில் போலீசு தலையிட்டு இழுத்துக் கொண்டு போன ஒரு இளம் பெண், திரும்பி வந்ததும் அவமானம் தாங்காமல்தற்கொலை செய்து கொண்டாள்.

சென்னையிலேயே, கடையில் வேலை செய்யும் கணவன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு நள்ளிரவில் போலீசார் இழுத்துப் போன சித்ரா என்ற இளம் கர்ப்பிணிப் பெண், வீடு திரும்பியதும் தற்கொலை செய்து கொண்டாள்.

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக் கோட்டை அருகே ஒரு கிராமத்தில இருந்த ஒரு குடும்பத்தினரை சிலை திருடியதாக இழுத்துக் கொண்டு போனது, போலீசு. திரும்பி வந்ததும் பொங்கல் கொண்டாடி விட்டு குடும்பமே தற்கொலை செய்து கொண்டது.

குண்டு வெடிப்பில் காயமடைந்த அந்தானு சர்மாவைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து, அவரின் வேதனையை வேடிக்கை பார்க்கும் அஸ்ஸாம் போலீசின் குரூரம்





படிப்பகம்

www.padippakam.com

இவை போன்று சம்பவங்கள், வெளிவராமல் அடக்கப்பட்ட துயரங்கள் ஏராளமானவை.

1998 பிப்ரவரி மாதம் அசாமின் கௌகாத்தி ரயில் நிலையத்தில் குண்டு வெடித்ததில் படுகாயமுற்று வீழ்ந்தார் அந்தானு சர்மா என்கிற ஆயுள் காப்பீட்டுக் கழக முகவர். குண்டு வைத்த சதிகாரர்களில் ஒருவர் என அவரைப் பிடித்து விலங்கு மாட்டிய போலீசார், இரத்தம் கசியத் துடித்த அவரை மூன்று மணிநேரம் மருத்துவச் சிகிச்சையின்றி ரயில் நிலைய நிலை மேடையிலேயே கிடத்தி வைத்தனர்.



**உ.பி. மாநில போலீசால் 'தவறுதலாக'ச் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் பயணம் செய்த கார்.**

1998-99-இல் மட்டும் உ.பி. போலீசின் அட்டூழியங்கள் - அக்கிரமங்கள் பற்றி இரண்டு இலட்சம் வழக்குகள் வந்ததாக தேசிய மனித உரிமைக் கமிசன் கூறுகிறது.

போலீசுடன் மோதல் என்கிற பெயரில் நடத்தும் படுகொலைகள், சித்திரவதை - கொட்டடிக் கொலைகள், பாலியல் வன்முறை போன்ற இவையும்கூட போலீசின் கிரிமினல் குற்றங்கள் தாம்.

குற்றவாளிகளைப்பிடிக்கிறோம்என்கிற பெயரில் செய்யப்படும் குற்றங்கள், சட்டபூர்வப் பாதுகாப்புடன் நடக்கின்றன. அதுவும் அமைப்பு ஆதரவு - பின்னணி இல்லாத தனிநபர்கள் - குடும்பங்களுக்கு எதிராக போலீசு அராஜகம் - தாக்குதல் தொடுக்கும்போது அவர்கள் என்ன செய்ய முடியும்? பொதுமக்களின் தன்னெழுச்சியான எதிர்த்தாக்குதல், தனிநபர் பழிவாங்குதல், எதுவும் சாத்தியமில்லாத போது ''தற்கொலை''யும் ஒரு எதிர்ப்பு போராட்டமாகலாம். மௌனமான சகிப்புத் தன்மையை விட இது மேலானது.

இது போலீசு அராஜகத்தை அம்பலப் படுத்துவது மட்டுமல்ல; இந்தச் சமுதாயத்துக்கே விடப்படும் சவால்! இந்தச் சமுதாயத்தின் செயலற்ற நிலையை எள்ளி நகையாடுவது! இந்தச் சமுதாயத்தின் ஒழுங்கையும், நியாயத்தையும் பாதுகாப்பது என்கிற பெயரில் வரை முறையற்ற அதிகாரத்தைப் பெற்ற போலீசுக்காரன்களே, சமுதாயத்தின் மிக மோசமான ஒழுக்கக் கேடர்களாகவும், அந்த நிறுவனமே அநியாய - ஆபத்து விளைவிக்கும் கிரிமினல் அமைப்பாகவும் இருக்கும் போது என்ன செய்வது?

போலீசுக்காரன்களும் சாதாரண மனிதர்கள்தான். சம்பளமும், கிம்பளமும், அதிகாரமும் நிறைந்த வேலையாகக் கருதி, லஞ்ச ஊழல் முறைகேடுகள் மூலம் பதவி பெறுகிறவர்கள்தாம். அவர்களிடம் போய் எந்தவொரு நம்பிக்கை, உத்திரவாதம் அடிப்படையில் இவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளைப் போலன்றி, நியாய மாகவும் நேர்மையாகவும், சட்டப்படியும் எந்தவொரு போலீசுக்காரனும் நடந்து கொள்வான் என்பதற்கு என்ன உறுதியிருக் கிறது? பயிற்சியும் போதனையும் மட்டும் இருந்தால் போதுமா?

எந்தவொரு போலீசுக்காரனும் கிரிமினல் குற்றங்கள்புரிவதற்கானவாய்ப்பு வசதிகளும், அதிகாரமும் சட்டப் பாதுகாப்புகளும் தான் இருக்கிறதே தவிர, அவற்றுக்கெதிராகத் தண்டிக்கப் படுவதற்கான வழி வகைகள் ஏறக்குறைய கிடையவே கிடையாது. போலீசுக்காரன் களின் கிரிமினல் குற்றங்களுக்கு நீதிமன்றங்கள், நிர்வாக அமைப்புகள் உட்பட சட்டப்பூர்வப் பாதுகாப்பு மட்டுமல்ல; அவர்கள் தாங்களாகவே பல சட்டவிரோதப் பாதுகாப்பு முறைகளையும் கடைபிடிக்கிறார்கள். போலீசின் அத்து மீறல்களுக்கு மக்கள் அடிபணிய மறுக்கும் போது ஆயுதபாணியாக போலீசு குண்டர்கள் திரண்டு வந்து மக்களைத் தாக்குகிறார்கள். போலீசுக்காரன்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரப் படுமானால், அந்த வட்டாரப் போலீசு நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட தொகை நிர்ணயித்து வசூல் செய்து போலீசுக் குற்றவாளிக்குத் தரப்படுகிறது - இதுவும் போலீசுக் காரன்களின் சம்பளத்தில் இருந்து அல்ல; ''மாமூல்'' என்கிற முறையில் மக்களிடம்தான் வசூலிக்கப் படுகிறது!

போலீசுக் குற்றவாளிகளுக்கு தரப்படும் ''தண்டனை''யோ இடமாற்றம், பதவி உயர்வு நிறுத்தி வைப்பு, இடைநீக்கம் போன்றவை தாம்! மான்தீப் சிங் உயிரோடு கொளுத்திக் கொண்ட விவகாரத்தில் சம்பந்தப்பட்ட போலீசுக்காரன்களுக்கு, ''வேலைக்கு வரவேண்டாம், குடியிருப்பு களில் தங்கியிருக்க வேண்டும்'' என்பது தான் தண்டனை! உண்மையில் இவை போன்றவை தண்டனைகள் அல்ல! மக்கள் எங்காவது ஆத்திரப்பட்டு அந்தப் போலீசுக்காரன்களைத் தாக்கிவிடக் கூடாது என்பதற்கான பாதுகாப்புதான்!

இந்தியப் போலீசு, இராணுவம், துணை இராணுவத்தின் அட்டூழியங்கள், அராஜகங்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக சர்வதேச மன்னிப்பு போன்ற பல்வேறு மனித உரிமை அமைப்பு அறிக்கைகளும், புகார்களும், கண்டிப்புகளும் குவிந்தன. அவை தலையிட்டு உண்மை அறியவும், விசாரிக்கவும் முயன்று நிர்பந்தம் அதிகரிக்கவே, விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறி மத்திய, மாநில மனித உரிமை கழகங்களை அமைத்தது, இந்திய அரசு. ஆனால் தண்டிக்கும் அதிகாரம் ஏதும் இல்லாத அந்தக் கழகங்கள் கண்துடைப்பு வேலைகளும், நிவாரணப் பரிந்துரைகளும் மட்டுமே செய்கின்றன. அவற்றின் பரிந்துரைகளைக் கூட எந்த அரசும் மதித்து அமலாக்காமல் உதாசீனப்படுத்துகின்றன.

**போலீசுக்கும் மனித உரிமைகளுக்கும் சம்மந்தமுண்டா?**



இப்போது இந்தச் சமுதாய மனிதர்கள் எதிர் கொண்டிருக்கும் உடனடியான, அவசியமான பிரச்சினைகளில் ஒன்று, சட்டபூர்வ நுணுக்கங் களும் கிரிமினல் முறைகளும் நன்கு அறிந்து அனுபவப்பட்ட, அதிநவீன ஆயுதங்களும் போக்குவரத்து - தொலைத் தொடர்பு சாதன வசதிகளும் நிறைந்த போலீசு நிறுவனத்தின் கோரப் பிடியிலிருந்து விடுபடுவது எப்படி என்பது தான்!

✱ பச்சையப்பன்



படிப்பகம்

# நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்திரன் படுகொலையும் போலீசின் கட்டுக்கதையும்

புரட்சிகர - சனநாயக இயக்கங்களை ஒடுக்க ஆந்திரப் போலீசாரால் கையாளப்படும் ''போலி மோதல் நாடகத்தை'' தமிழகத்திலும் மீண்டும் துவக்கி வைத்திருக்கிறார், கருணாநிதி. கடந்த சனவரி மாதம் 10-ஆம் தேதி தருமபுரி மாவட்டத்தில் தமிழகப் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் இரவீந்திரனின் படுகொலை, இதன் தொடக்கமாக அமைந்துள்ளது.

* * *

''கடந்த டிசம்பரில் மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த மூன்று தலைவர்கள் ஆந்திரப் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நக்சலைட்டு இயக்கத்தினர் தருமபுரி மாவட்டத்தில் இரண்டு அரசுப் பேருந்துகளை 26.12.99 அன்று தீயிட்டுக் கொளுத்தினர். இச்சம்பவம் தொடர்பாக நக்சலைட்டு இயக்கத்தைச் சேர்ந்த இரவீந்திரனைத் தேடிக் கொண்டிருந்தோம். இரவீந்திரனும், வேறு சில நக்சலைட்டுகளும் பெருங்காடு கிராமப் பகுதியில் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைக்கவே, போலீசாரும், சிறப்பு அதிரடிப் படையும் அக்கிராமத்தைச் சுற்றி வளைத்து, இரவீந்திரனைப் பிடிக்க முனைந்தோம். போலீசிடமிருந்து அவர்கள் தப்பி ஓட முயன்ற பொழுது, இரவீந்திரன் போலீசை நோக்கிச் சுட்டார். போலீசார் திருப்பிச் சுட்டதில், இரவீந்திரன் இறந்து போனார்; சென்னையைச் சேர்ந்த சிவக்குமார் போலீசாரிடம் பிடிபட்டான்; வேறு இருவர் காட்டுக்குள் புகுந்து தப்பிவிட்டனர்.'' - இதுதான் நடந்த உண்மை என்று போலீசு தரப்பில் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யச் சென்ற மனித உரிமைக் குழுவினர், தர்மபுரி மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் கந்தசாமியிடம், ''இரவீந்திரனின் முழங்காலுக்கு கீழே சுட்டு, இரவீந்திரனைப் பிடிக்க போலீசார் ஏன் முயலவில்லை?'' என்று கேட்ட பொழுது, அவர், ''இரவீந்திரன் (ஒருவிதமாக) உட்கார்ந்து கொண்டு போலீசை நோக்கிச் சுட்டதால், அவரின் முழங்காலுக்குக் கீழே சுட முடியவில்லை'' என்று கூறியிருக்கிறார்.

''இரவீந்திரனைப் பிடிப்பதற்கு பெருங்காடு கிராம மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்ததாகவும், போலீசாரின் முழு நடவடிக்கையும் மக்களின் கண்முன்னே நடந்ததாகவும்'' போலீசு கூறுகிறது. ''பெருங்காடு மற்றும் சாஸ்திரமுட்லு கிராம மக்கள் கொடுத்த உடைகளை அணிந்து கொண்டு, கிராமத்துவாசிகள் போல் தான் போலீசார் தேடுதல் வேட்டை நடத்தினர்; இறந்து போன நபரை 'இவன்தான் இரவீந்திரன்' என்று கிராம மக்கள்தான் போலீசாரிடம் உறுதிப்படுத்தியதாக'' ஜூனியர் விகடன் எழுதுகிறது.

ஆர்.எஸ்.எஸ்.இன் ஊதுகுழலான இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் வெளியிடும் தமிழன் எக்ஸ்பிரஸ், ''தர்மபுரியில் பத்து மனித வெடிகுண்டுகள் அலைந்து திரிவதாகவும்'', ''நக்சலைட்டுகள் ஆந்திர முதல்வரைக் குறி வைத்திருப்பது விசாரணையின்போது தெரிய வந்ததாக வும்'' வதந்திகளையே செய்திகளாக வெளியிட்டது.

ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியையாகப் பணியாற்றி வரும் இரவீந்திரனின் மனைவி நிர்மலாவை, ''மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த தீவிரவாதி; அவர் ஆந்திராவில் தலைமறைவாக இயங்கிக் கொண்டிருக் கிறார்'' என்று பரப்பப்பட்ட வதந்திதான் இரவீந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக தமிழகப் பத்திரிகைகளும் போலீசும் அள்ளித் தெளித்த அவதூறுகளிலேயே, கீழ்த்தரமானதும், வெட்கக்கேடானதும் ஆகும்.

உண்மையைத் திரித்தும், ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டுகள், அவதூறுகளை அள்ளி வீசுவதன் மூலமும் போலீசும் தமிழகப் பத்திரிகைகளும், ''நக்சலைட்டு இரவீந்திரனும், அவனது சகாக்களும் சமூக' விரோதிகள்; பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உள்ளிட்ட பல்வேறு தேசவிரோத பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பு கொண்டவர்கள்; எந்தவொரு நாசவேலைக்கும் அஞ்சாதவர்கள்; சில ஆண்டுகளாக அமைதியாக இருந்த தர்மபுரி மாவட்டம் மீண்டும் இவர்களின் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டது; எனவே, போலீசார் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட, நக்சலைட்டுகளின் தலைவனான இரவீந்திரனை, தங்களின் பாதுகாப்புக் கருதி சுட்டுக் கொன்றது நியாயமானதுதான்'' என்ற கருத்தை தமிழக மக்களின் மனதில் விதைக்க முயலுகின்றன.

* * *

நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்திரன், உழவர் உழைப்பாளர் மாமன்றம் எனும் அமைப்பின் கீழ், கடந்த ஆறாண்டுகளாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள பெருங்காடு, நத்தம், அமதன்கோட்டை, வெள்ளாளப்பட்டி உள்ளிட்ட சில கிராமங்களில் அரசியல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். அவர், பூதிப்பட்டி கிராம மக்களை ஆட்டிப் படைத்து வரும் கந்து வட்டிச் சுரண்டல் போர்வழிகளை எதிர்த்தும், காடுகளில் ஆடு மாடுகளை மேய்க்க ''வரி'' என்ற பெயரில் வனத்துறை அதிகாரிகள் அக்கிராம மக்களிடம் இலஞ்சம் வாங்கி வருவதையும் அம்பலப்படுத்தியும் பிரசுரங்கள் போட்டு, இவர்களை எதிர்த்துப் போராடுமாறு அக்கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்திருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, 1993-ஆம் ஆண்டு முத்தமிழ் முதல்வன் என்ற போலீசு அதிகாரி (துணை ஆய்வாளர்) இரவீந்திரனைச் சட்ட விரோதமாகக் கைது செய்து, சேலம் மைய சிறைச்சாலையில் அடைத்தார். இரவீந்திரன், சக கைதிகளைத் திரட்டி, சிறையில் நிலவிய மனிதத் தன்மையற்ற நிலையை எதிர்த்துப் போராடினார். அதே போலீசு அதிகாரி, எரையூர் போலீசு நிலையத்தில் பணியாற்றிய பொழுது, ஒரு சிறுவனை எரித்துக் கொன்றதை அம்பலப்படுத்தி இரவீந்திரன் வழக்கு தொடுத்தார்.



ரவீந்திரன்

இரவீந்திரனும், அவர் சார்ந்த உழவர் உழைப்பாளர் மாமன்றமும் ஆங்காங்கே துண்டு துண்டாக பொதுவான அரசியல் பிரச்சாரப் பணிகளைச் செய்து வந்த போதே, ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் மக்கள் போர்க் குழுவினர் கொரில்லா படைகளை அமைத்துச் செயல்பட்டு வருவவதைப் போல, தருமபுரி பகுதியை மாற்றி



படிப்பகம்

www.padippakam.com

விட வேண்டும் என்றும் விரும்பினர்.

ஆந்திராவின் தெலுங்கானா பகுதி, கம்யூனிஸ்டுகளின் தலைமையில் வீரஞ்செறிந்த ஆயுதப் போராட்டங்களை நடத்திய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது. தெலுங்கானா போராட்டத் தையும், சிறீகாகுளம் உழவர் எழுச்சியையும் அரசு ஒடுக்கிவிட்ட போதிலும், தெலுங்கானா பகுதியில் மலைவாழ் மக்களும், கிராமப்புற ஏழை விவசாயிகளும் நக்சல்பாரி இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து வருகின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நக்சல்பாரி இயக்கம் தருமபுரி பகுதியில் செல்வாக்குடன் இருப்பதாகக் கூறப்பட்ட பொழுதுகூட, அவ்வியக்கம் பெருந்திரளான மக்களைத் தன் பின்னே அணி திரட்டியிருக்க வில்லை. மக்களை அரசியல்படுத்தி, அமைப்பாக்கி, ஆயுதம் ஏந்தச் செய்வதற்குப் பதிலாக, நக்சல்பாரி இயக்கம் ''அழித்தொழிப்பு நடவடிக்கை''யை நம்பியே செயல்பட்டதால், பெருவாரியான மக்களிடமிருந்து இயக்கம் தனிமைப்பட்டு நின்றதால், தேவாரம் கும்பலால் நக்சல்பாரி தோழர்களை எளிதாகக் கொன்றொழிக்க முடிந்தது.

இரவீந்திரனும் அவரது சக தோழர்களும், மக்கள் போர்க்குழு தலைவர்களை ஆந்திர அரசு கொன்றொழித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில், இரண்டு அரசு பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தருமபுரி பகுதியில், மக்களை அரசியல்படுத்துவதற்கு முன்பாகவே, மக்கள் மத்தியில் வலுவான அமைப்புகளைக் கட்டுவதற்குமுன்பாகவே, ஆந்திராவில் நடப்பதைப் போல, 'அரசு சொத்துக்களை நாசப்படுத்துவது' போன்ற தனிநபர் சாகசவாத நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கிய செயலானது, எவ்வித எதிர்ப்புமின்றி தருமபுரி பகுதியில் மீண்டும் அரசு பயங்கரவாதத்தை தமிழக அரசு கட்டவிழ்த்து விடுவதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

கருணாநிதி அரசும் தமிழகப் போலீசும் இரவீந்திரனைச் சட்ட விரோதகமாகக் கைது செய்து, சித்திரவதை செய்து, சுட்டுக் கொன்றுவிட்டு, மோதலில் இறந்து விட்டதாகக்கதையளக்கின்றன; தீவிரவாதப் பீதியூட்டி, இப்பச்சைப் படுகொலையை நியாயப்படுத்த முயலுகின்றன.

போலீசாரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது சேலம் மைய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள சிவா கொடுத்துள்ள உறுதிமொழித் தாளில் (affidavit) ''நாங்கள் நால்வரும் (இறந்து போன இரவீந்திரன், ராமச்சந்திரன், குமார் மற்றும் சிவா) பிரச்சாரம் செய்வதற்காக, 6.1.2000 அன்று இரவு 7.00 மணிக்கு பெருங்காடு பள்ளத்திற்குச் சென்றோம். மறுநாள் காலை



போலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தோழர் சிவா

11.30 மணியளவில் அதிரடிப் படையைச் சேர்ந்த 25 போலீசார் எங்களைச் சுற்றி வளைத்தனர். மற்ற இருவரும் தப்பித்து ஓடிவிட, நானும், இரவீந்திரனும் போலீசிடம் அகப்பட்டுக் கொண்டோம். போலீசார், அதே இடத்திலேயே எங்களை ''பூட்ஸ்'' காலால் மிதித்தும், துப்பாக்கிக் கட்டையால் அடித்தும் சித்திரவதை செய்தனர். பின்னர் மதியம் இரண்டு மணி அளவில் எங்கள் கைகளைப் பின்புறமாகவும், கண்களையும் கட்டி விட்டு இழுத்துச் சென்றனர்.''

''7.1.2000 இரவு தொடங்கி 9.1.2000 காலை வரை கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையிலேயே வைத்து சித்திரவதை செய்யப்பட்டோம். பின்னர், 10.1.2000 அன்று காலையில், நாங்கள் இருவரும் பெருங்காடு பள்ளம் கிராமத்தின் ஊர்க் கவுண்டர் வீட்டருகே கொண்டு வரப்பட்டோம். எங்களை போலீசார் ஓடச் சொன்னதற்கு மறுத்துவிட்டோம். சிறிது நேரம் கழித்து ஐந்து முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. அன்று இரவு ஏழு மணி வரை, நான் கண்கள் கட்டப்பட்ட நிலையில் அந்தக் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தேன். அதன் பின்னர், மாரண்டஹள்ளி போலீசு நிலையத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு தான், இரவீந்திரன் சடலத்தைப் பார்த்தேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வலது கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில தலைமைக் கமிட்டியின் உறுப்பினர் தேவபேரின்பன், ''எங்கள் கட்சி வழியாக நாங்கள் விசாரித்ததில், இரவீந்திரனை ஆள்காட்டி மூலம் மோப்பம் பிடித்து விட்ட போலீசார், இரவீந்திரனையும் சிவாவையும் 10.1.2000 அன்று காலையில் பெருங்காட்டில் வைத்துப் பிடித்தனர். இரவீந்திரனை இயக்கத்தின் முக்கிய புள்ளியாகக் கருதிய போலீசு, அவரது கதையை முடித்துவிட்டு, சிவாவை போலீசு காவலில் வைத்துக் கொண்டனர். இப்பொழுது இரவீந்திரனைக் கடைந்தெடுத்த சமூக விரோதியாக, கிரிமினலாகக் காட்டுவதற்காகப் பொய் வழக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இறந்து போன இரவீந்திரனின் கையில் காணப்படும் துப்பாக்கிகூட போலீசாரால் திணிக்கப் பட்டதாக இருக்கலாம்'' என்று மனித உரிமைக் குழுவினரிடம் கூறியுள்ளார்.

போலீசார், தங்களது இந்த நடவடிக்கை பெருங்காடு கிராம மக்களின் கண்முன்னே நடந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், அந்தக் கிராம மக்கள் நடந்த உண்மையை எவ்விதப் பயமோ, தயக்கமோயின்றி வெளி உலகுக்குத் தெரிவிக்க முடியாதபடி, பெருங்காட்டில் போலீசு அவுட் போஸ்ட் அமைக்கப்பட்டு, அந்தக் கிராமம் திறந்த வெளி சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மனித உரிமைக் குழுவினரைக் கூட அந்தக் கிராம மக்களிடம் தனியாகப் பேச போலீசு அனுமதிக்க வில்லை. ''அந்தக் கிராமத்தில் விநோதமான மௌனம் நிலவுகிறது; போலீசு சொல்லிக் கொடுத்ததையே அந்தக் கிராம மக்கள் எங்களிடம் கூறினாலும், அவர்களால் இரவீந்திரன் மீது கொண்டிருந்த அன்பையும், மரியாதையையும் முழுமையாக மறைக்க முடியவில்லை'' என மனித உரிமைக் குழுவினர், தங்களது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இரவீந்திரனின் உடம்பில் இரு துப்பாக்கிக் குண்டு காயங்கள் உள்ளன; ஒன்று, சிறியதாக வலது மார்பிலும், இடது பக்க முதுகில் பெரிய குண்டுக் காயமும் காணப்படுகிறது. குண்டுக் காயங்கள் தவிர, அவரது வலது தொடையில் காணப்பட்ட தடியடிக் காயமும், உடைக்கப்பட்ட வலது மணிக்கட்டு, கால் மூட்டுக்களும் போலீசு சித்திரவதை செய்திருப்பதற்கு அடையாளமாக இருந்தன. இம்மோதல் படுகொலையைக் கேள்விக்குள்ளாக்கி, இரவீந்திரனின் மனைவி நிர்மலா சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு விசாரணையில் உள்ளது.

ஒவ்வொரு மோதல் படுகொலையும் மனிதப் படுகொலையாகக் கருதப்பட்டு, சம்மந்தப்பட்ட போலீசு அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்கிறது குற்றவியல் சட்டம். ஆனால், கருணாநிதி அரசோ, இரவீந்திரனைக் கொன்ற போலீசாருக்கு 20,000 ரூபாய் வெகுமதியாகக் கொடுத்துள்ளது. இப்படி, தாங்களே ஏற்றுக் கொண்ட சட்டத்தை மீறுகின்ற ஆட்சியில், போலீசாரை வாடகைக் கொலைகாரர்களாக வளர்த்துவிடும் ஆட்சியில், ''இரவீந்திரனின் படுகொலைக்கு நீதி கிடைக்குமா?'' எனக் கேட்கும் பொழுதே, ''இன்னும், எத்தனை இரவீந்திரனைப் பலிகேட்பார்கள்?'' என்றும் கேட்டுப் பாருங்கள். அப்பொழுதுதான், போலி மோதல் படுகொலைகள் மூலம் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களை ஒழித்துக் கட்டுவதைக் கொள்கையாகக் கடைபிடித்து வரும் இந்த 'மக்களாட்சி'யின் இலட்சணம் அம்பலத்துக்கு வரும்!

✱ சுப்பு



படிப்பகம்

## படுகொலைக்குப் பின்னரும் பலிவாங்கும் நச்சு ஆலை

போபாலில் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நச்சுவாயுப் படுகொலை நடந்து 15 ஆண்டுகள் ஆகி விட்டன. 1984-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ந் தேதியன்று ஏற்பட்ட நச்சுவாயுக் கசிவினால் 10,000-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இன்னமும் 2 லட்சத்திற்கு மேலானோர் நடைபிணமாகப் பரிதவிக்கின்றனர். அவர்களில் ஏறத்தாழ 15 பேர் வீதம் மாதந்தோறும் மாண்டு வருகின்றனர். இப்பேரழிவுக்குப் பின்னரும் யூனியன் கார்பைடு நிறுவனம் உள்ள இடமும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் நஞ்சாகி, போபால் நகர உழைக்கும் மக்களை ஓசையின்றிக் காவு கொண்டு வருகிறது.

நச்சு வாயுக் கசிவினால் ஏற்பட்ட கோரமான படுகொலைக்குப் பிறகு, அமெரிக்காவின் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நிர்வாகிகளும் உயரதிகாரிகளும் நாட்டை விட்டுத் தப்பியோட இந்திய அரசே ஏற்பாடுகளைச் செய்தது. ஆலையை மூடி விசாரணை நாடகமாடிய அரசு, பின்னர், அந்த ஆலையையும் இடத்தையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. ஆனாலும் அங்குள்ள நச்சுக் கழிவுகளை அகற்றாமல் அப்படியே கிடப்பில் போட்டுக் கைவிட்டது. இதன் விளைவாக, ஒரு பெரிய கல்லறை போலத் தோற்ற மளிக்கும் யூனியன் கார்பைடு நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் நஞ்சாகி வருவதோடு, இப்பகுதி வாழ் மக்களையும் கால்நடைகளையும் பலி வாங்கி வருகிறது.




படுகொலை நடந்து 15 ஆண்டுகளாகியும் தொடரும் அவலம்: மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு எதிராக போபால் மக்களின் ஆர்ப்பாட்டம்

இந்த ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் திறந்த வெளி கழிவுப் பொருள் குட்டைகள் அமைந்துள்ளன. சூரிய ஒளியில் கழிவுகள் ஆவியாக்கப்படுவதற்காகக் கட்டப்பட்ட இக்குட்டைகளில் இன்னமும் நச்சுக் கழிவுகள் தேங்கியுள்ளன. மழைக் காலங்களில் இக்குட்டைகளில் தேங்கும் நீரைக் குடித்து கணக்கற்ற கால்நடைகள் மாண்டு போயுள்ளன. கடந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் கைவிடப்பட்ட ஆலையின் இரசாயனக் கிடங்குப் பகுதியில் அடுத்தடுத்து பெரும் தீ விபத்துகள் நடந்துள்ளன. ஆலையின் திறந்தவெளி கழிவுக் கிடங்குப் பகுதியில் பாதரசம் இருந்த பானைகள் பயன்பாட்டுக்குப் பின்னர் எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுமின்றி குவிந்து கிடக்கின்றன. உபயோகப்படுத்தப்படாத பல பாதரசப் பானைகள் நொறுங்கிக் கிடக்கின்றன. பாதரம் மிகவும் அபாயகரமான நச்சு இரசாயனப் பொருளாகும். அதன் காற்றுப் படும் வகையில் தொடர்ந்து இருந்தால் மூளை, சிறுநீரகம் மற்றும் கருப்பையும் கருவும் நிரந்தரமாக பாதிக்கப்படும். ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் ஏழை மக்கள் தீராத நோய்களுக்கு ஆளாகித் தொடர்ந்து பாதிக்கப்பட்டும் கூட, ஆட்சியாளர்கள் இப்பாதரசக் கழிவுகளை அகற்ற எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

யூனியன் கார்பைடு ஆலையைச் சுற்றியுள்ள அண்ணு நகர், நவாப் நகர், ஆரிப் நகர் முதலான குடிசைப்பகுதிகளில் 10,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இப்பகுதிகளின் நிலத்தடி நீர் ஆலைக் கழிவுகளால் நஞ்சாகிப் போய்விட்டது. அடிக்குழாய் தண்ணீரைக் குடிக்க வேண்டாம் என்று அரசு எச்சரிக்கைப் பலகை வைத்துள்ளது. ஆனால், குடிநீருக்கு அரசு மாற்று ஏற்பாடு எதுவும் செய்து தராததால், வேறுவழியின்றி இம்மக்கள் அடிக்குழாய் தண்ணீரையே குடிக்கின்றனர். யூனியன் கார்பைடு ஆலையில் பயன்படுத்தப்பட்ட கொடிய நச்சு இரசாயனங்களின் விளைவாகவே நிலத்தடி நீர் நஞ்சாகிப் போயுள்ளது என்றும், இப்பகுதிவாழ் மக்களுக்கு குடிநீர் உள்ளிட்டு அனைத்து அடிப்படை வசதிகளும், முறையான மருத்துவப் பரிசோதனையும் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென அரசு ஆராய்ச்சிக் கூட அறிக்கைகள் வலியுறுத்திய போதிலும், கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

## வரி ஏய்ப்பு - கறுப்புப் பணக் குவிப்பு கொட்டமடிக்கும் தரகு முதலாளிகள்

இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பை ஒட்டச் சுரண்டிக் கொழுக்கும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்திய ஆட்சியாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு கணக்கற்ற சலுகைகளை வாரியிறைத்த போதிலும், இத்தொழில் நிறுவனங்கள் அரசுக்குச் சல்லிக்காசு கூட வரியாகச் செலுத்தாமல் ஏய்த்து வருகின்றன. தொடர்ந்து இலாபமீட்டி வரும் 1500 முன்னணி தொழில் நிறுவனங்களில் 1000-க்கும் மேலானவை சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு எந்த வரியையும் செலுத்துவதில்லை. 1996-97-இல் அன்றைய நிதியமைச்சர் சிதம்பரம், இலாபமீட்டும் நிறுவனங்கள் தமது நிகர இலாபத்தில் 13% தொகையை குறைந்தபட்ச வரியாகச் செலுத்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனாலும், பெரும்பாலான நிறுவனங்கள், இந்தச் சட்டத்தின்படி கூட எந்த வரியையும் செலுத்தாமல் இன்னமும் ராமநாமம் போட்டு வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் மாதிரி கணக்கெடுப் பின்படி, 1200 முன்னணி நிறுவனங்களில் எந்த வரியும் செலுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கை 1996-97-ல் 253 ஆக இருந்தது. 1998-99-இல் இது 471 ஆக உயர்ந்துள்ளது.

1950-51-இல் இந்திய பட்ஜெட்டின் மொத்த வரி வருவாயில், மக்கள் மீது போடப்பட்ட மறைமுக வரிகளின் விகிதம் 56.5% ஆகவும், முதலாளிகள் - நிலப்பிரபுக்கள் முதலான சொத்துடைய வர்க்கங்களின் மீது போடப்பட்ட நேர்முக வரிகளின் விகிதம் 43.5% ஆகவும் இருந்தது. பின்னர் ஆண்டுதோறும் நேர்முக வரிகள் குறைக்கப்பட்டு, மக்கள் மீது சுமத்தப்படும் மறைமுக வரிகளின் விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1990-91-ல் மொத்த வரி வருவாயில், மறைமுக வரிகளின் விகிதம் 84.1% ஆகவும், நேர்முக வரிகளின் விகிதம் 15.9% ஆகவும் மாறியது. இதுவும் போதாது என்று முதலாளிகளுக்கு மேலும் வரிகள் குறைக்கப்பட்டுள்ளதோடு, வரித்தள்ளுபடி, குறிப்பிட்ட சில தொழில்களுக்கு வரிவிலக்கு, இரயில்வே சரக்குக் கட்டணச் சலுகை, மின் கட்டணச் சலுகை, வங்கி மூலம் கடனுதவி, மானிய விலையில் கச்சாப் பொருட்கள், ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்கத் தீர்வை சலுகை என ஒவ்வொரு ஆண்டும் கணக்கற்ற சலுகைகளை ஆட்சியாளர்கள் வாரியிறைக்கின்றனர்.

ஆனாலும், பெரும்பாலான தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் தொழில் வரியைச் செலுத்துவதில்லை. 1993-94-ல் ரூ. 570 கோடி நிகர லாபம் ஈட்டிய தரகுப் பெருமுதலாளி அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் ஒரு பைசா கூட தொழில் முதலீட்டு வரியாகச் செலுத்தவில்லை. கடந்த 25 ஆண்டுகளாக இந்த நிறுவனம் தொழில் முதலீட்டு வரியே செலுத்தியது கிடையாது. இதேபோல டாடா

www.padippakam.com



இரும்பு எஃகு நிறுவனம், ஏ.சி.சி., பாம்பே டையிங், அர்விந்த் மில்ஸ், எஸ்ஸார், அசோக் லேலண்டு, அண்மையில் மறைந்த சிதம்பரம் செட்டியாரின் ஸ்பிக் உர நிறுவனம் முதலான தரகுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்கள் கோடி கோடியாய் இலாபமீட்டிய போதிலும் தொழில் முதலீட்டு வரியே செலுத்தவில்லை. ஆனாலும், இந்நிறுவனங்கள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லை.

தரகுப் பெருமுதலாளிகளுக்கு வரிச் சலுகை - வரிக் குறைப்பு செய்தால், கிடைக்கும் இலாபத்திலிருந்து புதிய தொழில் தொடங்கி நாட்டை முன்னேற்றுவார்கள் என்று ஆட்சியாளர்கள் கதையளந்து வருகின்றனர். ஆனால், தரகுப் பெருமுதலாளிகள் அப்படி புதிய தொழில் எதுவும் தொடங்குவதில்லை. வரி ஏய்ப்பு - மோசடிகள் மூலம் ரூ. 80,000 கோடிக்கும் மேலாக கறுப்புப் பணம் பெருகிவிட்டதாக 1996-இல் திட்டக் கமிஷனின் துணைத் தலைவராக இருந்த மது தந்தவதே அறிவித்தார். முதலாளிகளின் இந்தக் கறுப்புப் பணம் ஹவாலா மூலம் வெளிநாடுகளிலும் சுவிஸ் இரகசிய வங்கியிலும் குவிக்கப்படுகிறது. டெல்லியிலுள்ள சுவிஸ் தூதரகத் தலைமை அதிகாரியான பியரேஹெக் என்பவர், இந்தியப் பெருமுதலாளிகளும் அரசியல்வாதிகளும் ரூ. 2,80,000 கோடி அளவுக்கு சுவிஸ் ரகசிய வங்கியில் குவித்துள்ளதாக 1997-இல் ஒரு செய்தியில் குறிப்பிட்டார். இப்படி வரியே செலுத்தாமல் ஏய்த்து வரும் தரகுப் பெருமுதலாளிகளின் ஆலோசனைப்படி பட்ஜெட் தயாரிக்கும் ஆட்சியாளர்கள், மக்கள் மீது ஆண்டுதோறும் வரிச்சுமையை ஏற்றி வதைத்து வருகின்றனர்.

## வல்லரசு ஜப்பானில் தீவிரமாகும் வேலையின்மை

மிகப் பெரிய பொருளாதார வல்லரசான ஜப்பானில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இதுவரை கண்டிராத வகையில் வேலையின்மையும் வறுமையும் தீவிரமாகி வருகிறது. கடந்த சில மாதங்களாக வேலையற்றோர் விகிதம் 5% வீதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மிகப் பெரிய தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அல்லது நிர்வாகச் சீரமைப்பு என்ற பெயரில் ஆட்குறைப்பு செய்து தொழிலாளர்களை வெளியேற்றுகின்றன. குறிப்பாக, அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் தமது சந்தையைப் பாதுகாத்துக் கொள்ள ஜப்பானிய நுகர் பொருட்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதித்ததிலிருந்து ஜப்பானில் நெருக்கடிகள் முற்றத் தொடங்கிவிட்டன. மேலும், தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட நாணய மதிப்பு வீழ்ச்சியைத் தொடர்ந்து நெருக்கடி தீவிரமாகியது. இதனால் உற்பத்தி பெருகி சந்தை இல்லாத நிலையில், இன்று ஜப்பானில் 25%-க்கும் மேலான ஆலைகள் கதவடைப்பு செய்துவிட்டன.

மிகப் பெரிய ''நிசான்'' மோட்டார் நிறுவனம், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஆட்குறைப்பு நடவடிக்கையின் மூலம் வேலையிலிருந்து விரட்டியடித்துள்ளது. ''பானாசோனிக்'' என்று வெளிநாடுகளில் அறியப்பட்டுள்ள ஜப்பானின் ''மாட்சுஷிட்டா'' மின் நிறுவனம் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் 40% தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. இதன் விளைவாக வேலையற்றோரின் எண்ணிக்கை நாளும் பெருகி, இன்று 35 லட்சம் பேராக உயர்ந்துள்ளது. ஜப்பானின் மூன்றாவது பெரிய நகரமான ஒசாகாவில் மட்டும் 25,000 தொழிலாளர்கள் வேலையின்றிப் பரிதவிக்கின்றனர்.

ஜப்பானின் மொத்தத் தொழிலாளர்களில் நிரந்தரத் தொழிலாளர்களின் விகிதம் கடந்த சில ஆண்டுகளில் குறைந்து கொண்டே வருகிறது. அதேசமயம் பகுதி நேரத் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்களின் விகிதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவர்களின் எண்ணிக்கை மொத்தத் தொழிலாளர்களில் 50%-க்கும் மேலாக உள்ளது. இத்தகைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் அனைவரும் ஆலை மூடல் - ஆட்குறைப்பினால் வேலையிழந்த நிரந்தரத் தொழிலாளிகளே ஆவர்.



நிசான் மோட்டார் நிறுவனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கையை எதிர்த்து, ஜப்பானியத் தொழிலாளர்கள் டோக்கியோவில் நடத்தும் ஆர்ப்பாட்டம்

வேலையிழந்து தத்தளிக்கும் தொழிலாளிகள் தமது மனைவி - குழந்தைகளை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு, நகரங்களிலேயே தங்கி வேலைதேடி அலைவதும், பின்னர் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவதும் அதிகரித்து வருகிறது. தலைநகர் டோக்கியோவில் மட்டும் 10,000-க்கும் மேற்பட்டோர் வீடற்றவர்களாகப் பிச்சை எடுக்கின்றனர் என்று ஜப்பானிய பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன. இவர்கள் சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள், கைவிடப்பட்ட துருப்பிடித்துக் கிடக்கும் கார்களில் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர். தொழிற்சங்கங்களும் சில தொண்டு நிறுவனங்களும் அமைத்துள்ள ''பிரட் லைன்'', ''சூப் லைன்'' எனப்படும் கஞ்சித்தொட்டி நிலையத்தில் மதிய வேளையில் தரப்படும் ஒரு துண்டு ரொட்டியுடன் ஒரு குவளைக் கஞ்சியைக் குடித்து விட்டு எப்படியோ உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தீவிரமாகிவிட்ட இக்கொடுமைகளை எதிர்த்து ''ஜென்ரோரான்'' எனப்படும் தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பு போர்க்குணமிக்க பல்வேறு போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. ஜப்பானைப் பற்றி ஏகாதிபத்திய உலகம் பரப்பி வரும் மாயைகளைத் தகர்த்தெறிந்து, ஜப்பானில் நிலவும் கொடூரச் சுரண்டல் - அற்பமான ஊதியம் பற்றி அம்பலப்படுத்தி வருகிறது. ஒப்பந்தத் தொழிலாளர் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை பாதுகாப்பு கோரியும், அரசியல் பொருளாதார மாற்றங்களுக்காகவும் தொழிற்சங்கங்கள் நடத்தி வரும் தொடர் போராட்டங்களைக் கண்டு ஜப்பானிய ஆட்சியாளர்கள் அதிர்ச்சியடைந்து நிற்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தீவிரமாகும் வறுமையும் வேலையின்மையும்

# தனியார்மயக் கொள்கையின் விபரீத விளைவுகள்

உண்மைகள் சில நேரங்களில் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியானதாகவும் கசப்பானதாகவும் இருக்கும். 1990-களில் தனியார்மயம் - தாராளமயம் எனும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை இந்திய ஆட்சியாளர்கள் செயல்படுத்தத் தொடங்கியதிலிருந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு 5.6% வீதம் 'முன்னேறியது'. பின்னர் 97-லிருந்து 6.9% ஆக நாலுகால் பாய்ச்சலில் 'முன்னேறி'க் கொண்டிருக்கிறது! அதே சமயம், 1990-இல் 30 கோடிப் பேராக இருந்த வறுமைக் கோட்டுக்குக் கீழிருந்த மக்கள் தொகை, 1998-இல் 40 கோடிப் பேராக அதிகரித்துள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து ஆண்டுக்கு ஒரு சதவிகிதம் வீதம் வறுமையும் வேலையின்மையும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

அதிகாரபூர்வ தேசிய மாதிரி கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, திட்டக்கமிஷனின் உறுப்பினரான டாக்டர் எஸ்.பி. குப்தாவும், டாக்டர் கௌரவ் தத்தாவும் அண்மையில் சில உண்மைகளை ஆய்வுரையாக வெளியிட்டனர். 80-களில் 32 கோடி பேராக இருந்த வறியவர்களின் எண்ணிக்கை, 1989-90-இல் 27.6 கோடி பேராக சற்றே குறைந்தது. '90-களில் கொண்டு வரப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்குப் பிறகு வறியவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து, 1998-இல் 40 கோடிப் பேராகியுள்ளது. அதாவது 8 ஆண்டுக்குள் 13 கோடிப் பேர் புதிதாக வறுமைப் பட்டாளத்தில் சேர்ந்துள்ளனர். '90-களில் கிராமப் புறங்களும் விவசாயமும் கைத்தொழிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன. இதன் விளைவாக வறுமையும் வேலை இன்மையும் தீவிரமாகியுள்ளது.


வறுமைக்கோடு என்பதற்கு அளவுகோல் என்ன? நகரங்களில் 2100 கலோரி சத்து அளிக்கக்கூடிய உணவும், கிராமங்களில் 2400 கலோரி சத்து அளிக்கக்கூடிய உணவும் பெறமுடியாத நிலையில் இருப்பவர்களே, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று 70-களில் மதிப்பிடப்பட்டது. 1973-74 ஆம் ஆண்டின் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் படி, அன்றைய விலைவாசி நிலவரப்படி நகரங்களில் ரூ. 56.54 பைசாவும், கிராமங்களில் ரூ. 49.09 பைசாவும், தினக் கூலியாக பெற இயலாதவர்களே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று மதிப்பிடப்பட்டது. 1973-74 ஆம் ஆண்டைவிட பல மடங்கு விலைவாசி உயர்ந்துள்ள இன்றைய நிலையில் வறியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு மடங்கு அதிகரித்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்தப் புள்ளி விபரங்கள் சதவீதக் கணக்குகள் காட்டும் உண்மை ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கை யதார்த்தங்களே இதை நிரூபித்துக் காட்டுகின்றன.

இராமண்ணா, மும்பை மாநகரின் மேற்கு அந்தேரி பகுதியிலுள்ள தங்கர்வாடி குடிசைப் பகுதியில் வசிக்கும் தொழிலாளி, 1992 வரை அவர் பரேல் தொழிற்பேட்டையிலுள்ள சீனிவாஸ் மில்லில் பணியாற்றி வந்தார். பாசிச ராஜீவ் திணித்த புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாக, சீனிவாஸ் மில் நசிவடைந்து மூடப்பட்டு இராமண்ணா, வேலை இழந்தார். இதைப் போலவே மதுசுதன் மில், பீனிக்ஸ் மில், ரகுவம்சி மில் என நூற்றுக்கும் மேற்பட்ட நெசவாலைகள் படிப்படியாக மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். தங்கர்வாடி குடிசைப் பகுதி வேலையிழந்த தொழிலாளர்களின் மையமாக மாறிப் போனது.

வேலையிழந்த தொழிலாளிகள் தினமும் காலை 6 மணியளவில் கூப்பர் மருத்துவமனை சந்திப்பில் திரள்கின்றனர். கட்டிட வேலை, சுமை இறக்குதல், குடிநீர் குழாய் பொருத்துதல், தச்சு வேலை, சுண்ணாம்பு அடித்தல் முதலான வேலைகளுக்கு கூலிக்கு ஆள் பிடிக்க தரகர்களும் ஒப்பந்தக்காரர்களும் அங்கு வருகின்றனர். ரூ. 120, ரூ. 100 எனத் தொடங்கி கடைசியில் கூலி ரூ. 75, ரூ. 50 என அங்கே பேரம் நடந்து, லாரிகளில் அவர்கள் வேலைக்கு அழைத்துச் செல்லப் படுகிறார்கள். ''கணக்கற்றோர் வேலைக்கு போட்டி போடுவதால் அற்பமான கூலிக்கு வேறு வழியின்றி நாங்கள் செல்கிறோம். இல்லையேல் எங்களது குடும்பம் பட்டினி கிடக்க வேண்டியதாகி விடும்'' என்று வேதனையோடு கூறுகிறார் இராமண்ணா. ''எங்களுக்கு மாதத்தில் 10 நாட்கள் வேலை கிடைத்தால், நாங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்; ஆனால் பல நேரங்களில் வேலை கிடைப்பதில்லை. நண்பகல் வரை கூப்பர் மருத்துவமனை சந்திப்பில் காத்திருந்து விட்டு பல நாட்கள் திரும்பி வந்திருக்கிறோம்'' என்கிறார் பீமப்பா. இவர் பீனிக்ஸ் மில்லில் வேலையிழந்த தொழிலாளி. ''சாப்பாட்டுக்கே வழியில்லாத போது குழந்தைகளை எப்படி படிக்க வைக்க முடியம்? எனது இரு மகன்களும் 5-ஆம்

பிழைக்க வழியின்றிப் பட்டினியால் பரிதவிக்கும் மத்தியப் பிரதேசத்தின் பழங்குடியினக் குடும்பம்





படிப்பகம்

www.padippakam.com



**ஆலைமூடலால் வேலையிழந்த தொழிலாளர்கள் மும்பை கூப்பர் மருத்துவமனைச் சந்திப்பில் கூலி வேலைக்காகக் காத்துக் கிடக்கும் அவலம்**

வகுப்பு வரை பள்ளிக் கூடம் சென்றார்கள். எனக்கு வேலை போன பிறகு என் வாழ்வில் வறுமை சூழ்ந்தது. என் மகன்களைப் படிக்க வைக்க முடியவில்லை. அவர்களை லேத் பட்டறையில் வேலைக்கு சேர்த்துள்ளேன். ஏதோ ஒரு வேளை கஞ்சியுடன் என் குடும்பம் நடக்கிறது'' என்று குமுறுகிறார் சுபீர் ஷேக்.

இந்தியாவின் தொழில் - வர்த்தகத் தலைநகர், பணப்புழக்கம் மிகுந்த சந்தை நகரம் என்று வர்ணிக்கப்படும் மும்பை மாநகரிலேயே இந்த நிலைமை என்றால், மற்ற நகரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இப்படியும் பிழைக்க முடியுமா? இதிலே அப்படி என்ன வருமானம் கிடைத்து விடும்? என்று எண்ணுமளவுக்கு ஏதேதோ உதிரியான வேலைகளில் கோடிக்கணக்கான மக்கள் ஈடுபட்டு வறுமையுடன் போராடி வருகிறார்கள்.

மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்திலுள்ளது கோரசௌபட்டி எனும் சிறு சந்தை நகரம். அங்குள்ள நடுநிலைப் பள்ளியின் மைதானம் அகதி முகாம் போலக் காட்சியளிக்கிறது. அன்றாடம் நூற்றுக்கணக்கான பழங்குடி இன மக்கள் தமது குடும்பத்தோடு அங்கு வந்து குவிகிறார்கள். ஓரிரு நாட்களில் தரகர்களின் ஏற்பாட்டின் மூலம் அவர்கள் லாரிகளிலும் பேருந்துகளிலும் இராஜஸ்தான், குஜராத், பஞ்சாப் மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாகக் கொண்டு செல்லப்படுகிறார்கள். ஒருவரல்ல; இருவரல்ல; கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் பழங்குடியின மக்கள் அகதிகளாக பிற மாநிலங்களுக்கு ஓடியுள்ளனர்.

மத்திய பிரதேசத்தின் மேற்கு பிராந்தியம் முழுவதும் வறட்சியும் பஞ்சமும் தலை விரித்தாடுகிறது. கடந்த இரு பருவங்களாக பருவ மழை பொய்த்துப் போனதால் நிலங்கள் தரிசாகிக் கிடக்கின்றன. கிராமப்புறங்களில் குடிக்கக் கூட தண்ணீர் இல்லை. கால்நடைகள் எலும்பும் தோலுமாக நிற்கின்றன. பட்டினியால் பரிதவிக்கும் பில், பிலாலா எனப்படும் பழங்குடியின மக்கள் பிழைக்க வழிதேடி கிராமங்களை விட்டு அகதிகளாக ஓடி வருகிறார்கள். இந்த உழைப்பாளிகளை கொத்தடிமைகளாக விலை பேசும் சந்தையாக கோரசௌபட்டியிலுள்ள பள்ளி மைதானம் இன்று மாறிவிட்டது.

ஒரிசாவில் காலகந்தியில் மட்டுமின்றி, அம்மாவட்டத்தை அடுத்துள்ள போலங்கீர், பவானிபட்னா முதலான மாவட்டங்களும் இன்று வறுமையிலும் பட்டினியிலும் சிக்கித் தவிக்கின்றன. ஒரிசாவுக்கு இணையாக, இன்று, ஆந்திராவின் அடிலாபாத், மகாராஷ்டிராவின் ஜலகோன், பீடு, கர்நாடகத்தின் பிதார், குல்பர்கா, மே.வங்கத்தின் புருலியா மாவட்டங்களும், பீகார், உ.பி. மாநிலங்களின் பெரும் பகுதியும் இன்று வறட்சி - பஞ்சத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

''விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து விட்டோம்; மக்கள் தொகை வளர்ச்சியை ஒப்பிடும் போது, உணவு உற்பத்தி மூன்று மடங்குக்கும் மேலாக உயர்ந்துள்ளது. பால் - காய்கறி - பழங்களின் உற்பத்தி இரு மடங்கு உயர்ந்து விட்டது'' என்று புள்ளி விபரச் சாதனைகளைக் காட்டி ஆட்சியாளர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால், நாட்டின் பல பகுதிகளில் கிராமப்புற ஏழைகள் காட்டுக் கிழங்குகளையும், கீரைகளையும் கொண்டு உயிர் வாழ்ந்து பட்டினியில் பரிதவிக்கிறார்கள். பசுமைப் புரட்சி, பயிற்சிவழி தொடர்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்திரா ஆவாஸ் யோஜனா, வறுமை ஒழிப்புத் திட்டம், வறட்சி நிவாரணப் பணித் திட்டம் என எத்தனையோ திட்டங்கள். ஆனாலும் வறுமை குறையவில்லை. கடந்த பத்தாண்டுகளில் இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மேலும் குறைக்கப்பட்டதன் விளைவாக வறுமையும் ஏழ்மையும் மேலும் தீவிரமாகிவிட்டது.

''தனியார்மயம் - தாராளமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையால் அந்நிய மூலதனம் இங்கே வந்து குவியும். புதிய தொழில்நுட்பங்களும் நவீனமயமான உற்பத்தியும் பெருகும். பலகோடிப் பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்'' என்று ஆட்சியாளர்கள் கதையளந்தார்கள். இப்பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளால், 1991-க்குப் பிறகு அந்நிய முதலீடு பலமடங்கு உயர்ந்தது உண்மைதான். ஆனால், அது ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்ளும் தன்மையிலான முதலீடாக இல்லை. புதிய பொருளுற்பத்திச் சொத்துக்களையோ, புதிய வேலை வாய்ப்பையோ பெருக்கவும் இல்லை. ஆக்கப்பூர்வமான ஆலை உற்பத்தியில் முதலீடு செய்வதற்கு மாறாக, பங்குச் சந்தை சூதாட்டத்தில் பல்லாயிரங் கோடிக்கு முதலீடு செய்வதும், குறுகிய காலத்திலேயே நோகாமல் அந்நிய நிறுவனங்கள் கொள்ளையடித்துச் செல்வதும் தான் நடந்தது. பங்குச் சந்தை சூதாட்டம், ஆழ்கடல் மீன்பிடிப்பு - இறால் பண்ணை என இயற்கை வளங்களைச் சூறையாடுவது, இலாப உத்திரவாதம் கிடைக்கும் தொழில்களிலும் ஆடம்பர நுகர்பொருள் விற்பனையிலும் முதலீடு செய்வதுதான் நடந்தது. அதனாலேயே நாடு தொழில்மயமாகிவிடும் என்ற எதிர்பார்ப்பு தகர்ந்துபோய், இக்கொள்கைகள் படுதோல்வியில் போய் முடிந்தன. பொருளாதாரத்தை திவால் நிலைக்குத் தள்ளி, வறுமையை தீவிரமாக்கி விட்டன. ''மாதம் ஒரு தொழிற்சாலை; ஆண்டுக்கு ஒரு லட்சம் பேருக்கு வேலை'' என்ற தேர்தல் வாக்குறுதிகள் காற்றிலே கரைந்து விட்டன.

இந்நாசகார கொள்கைகளை நடைமுறைப்படுத்தி நாட்டை வறுமைப் படுகுழியில் தள்ளிய பின்னரும், இதே கொள்கைகளை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தினால் நாடு முன்னேறிவிடும் என்று ஆட்சியாளர்கள் இரண்டாவது தலைமுறை பொருளாதார சீர்திருத்தங்களை செயல்படுத்தக் கிளம்பி விட்டார்கள். விலையேற்றம், கட்டண உயர்வு, வரிச்சுமை என்று கசக்கிப் பிழிந்து, நடுத்தர மக்களை வறியவர்களாக்கி, வறியவர்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளவும் துடிக்கிறார்கள்.

மூடிக் கிடக்கும் ஆலைகளும், தரிசாகக் கிடக்கும் வறண்ட நிலங்களும் மௌனமாக இருக்கலாம். ஆனால், தீவிரமாகி விட்ட வறுமையினால் குமுறிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை.

✱ மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

## தாழ்த்தப்பட்டோர் மீது அடுத்த சுற்றுத் தாக்குதல்:

# சிதம்பர பயங்கரம்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களை வாக்களிக்கவிடாமல் சிதம்பரம் தொகுதியில் வன்னிய சாதிவெறியர்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைக்குப் பின்னர், கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் அடுத்த சுற்றுத் தாக்குதலை வன்னிய சாதிவெறியர்கள் மீண்டும் நடத்தியுள்ளனர். இத்தொகுதியில் 'வெற்றி' பெற்று மத்திய அமைச்சராகி விட்ட பா.ம.க.வின் பொன்னுசாமி, கடந்த நவம்பர் மாத இறுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க வந்தார். எங்கெல்லாம் அவர் சென்றாரோ அங்கெல்லாம் உடன் சென்ற சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், வாகனத்தில் இருந்தபடியே பா.ம.க அமைச்சர் பொன்னுசாமி கையசைத்துக் கொண்டு நவம்பர் 21 அன்று ஓமக்குளம் வழியாகச் சென்றார். ஓமக்குளம் கிராமத்தில் சாலை ஓரத்தில் நின்றிருந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்களான பாலசந்திரனும் பழனியும் அமைச்சருக்கு மரியாதை செலுத்தும் வகையில் தாங்களும் கையசைத்தனர். அமைச்சருடன் கார்களில் பவனி வந்த சாதிவெறிக் குண்டர்கள் உடனே அவர்களைச் சூழ்ந்து கொண்டு அடித்தனர். ''அமைச்சரைப் பார்த்துக் கையசைக்க உங்களுக்குத் தைரியம் வந்து விட்டதா?'' என்று தாக்கியதும், அந்த இளைஞர்கள் தப்பியோடி ஒரு தேநீர்க் கடையில் ஒளிந்தனர். விரட்டி வந்த சாதி வெறியர்கள் அவர்களைக் கும்பலாகச் சூழ்ந்து கொண்டு தாக்கி, பாலச்சந்திரனைக் கத்தியால் குத்தி பற்களை உடைத்தனர். அந்த தேநீர்க் கடையும் அடித்து நொறுக்கப்பட்டது. இத்தனையும், புராணக் கதையில் சாதிவெறியர்களால் தீயிட்டுக் கொளுத்தப் பட்ட தாழ்த்தப்பட்ட சிவபக்தன் நந்தனின் நினைவாக ஊரின் நடுவே அமைக்கப் பட்டுள்ள நந்தனார் மண்டபத்தின் அருகிலேயே நடந்தது.

இக்கொடுமையைப் பற்றி பாலசந்திரனின் தாயார் ருக்மணி அம்மாள் போலீசாரிடம் புகார் கொடுக்கச் சென்ற போது, போலீசார் அவரை அவமானப்படுத்தி விரட்டியடித்தனர். சாதிவெறி குண்டர்களைக் கைது செய்ய வக்கற்ற போலீசு, பாதிக்கப்பட்ட பாலசந்திரன் மீது பொய் வழக்கு போட்டுள்ளது. இத்தாக்குதல் நடந்து இரு மாதங்களுக்கு மேலாகியும், வாயில் ஏற்பட்ட காயங்களால் பாலசந்திரனால் வாய்திறந்து பேச முடியவில்லை.

ஓமக்குளம் கிராமத்தில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் தாழ்த்தப்பட்டோர் 16 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களில் 12 பேர் பள்ளி மாணவர்கள். அவர்களில் ஒருவன் 13 வயதுடைய சிறுவன்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தேசிய நலக் கமிஷன், தேர்தலை ஒட்டி நடந்த சாதிவெறித் தாக்குதல் பற்றிய விபரங்களைச் சேகரிக்க சிதம்பரம் தொகுதிக்கு வந்தது. இக்கமிஷனின் உறுப்பினரான வீணா நய்யாரிடம் ஆயிபேட்டை கிராமத்தின் தாழ்த்தப்பட்ட பெண்கள் தேர்தலின்போது சாதி வெறியர்கள் நடத்திய தாக்குதலைப் பற்றிக் கூறியதற்காக, நவம்பர் 25-ந் தேதியன்று சாதிவெறியர்கள் மீண்டும் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். விமலா என்பவரை முடியைப் பிடித்து அடித்து, அவரது ஆடைகளைக் கிழித்து அவமானப் படுத்தினர். இதைத் தடுக்க முற்பட்ட மல்லிகா, வனமயில் ஆகியோரையும் அடித்து அவமானப் படுத்தினர்.

பின்னர் இக்கொடுமையைப் பற்றி அருகிலுள்ள ஒரத்தூர் போலீசு நிலையத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் புகார் கொடுத்த போதிலும் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதைக் கண்டித்துப் பெண்கள் சாலை மறியல் போராட்டத்தில் இறங்கிய பின்னரே, இக்கிராமத்தில் பாதுகாப்புக்காக போலீசார் நிறுத்தப்பட்டனர்.

சாதிவெறியர்கள் இப்போது தமது விவசாய வேலைக்கோ, இதர வேலைகளுக்கோ தாழ்த்தப்பட்டோரை அமர்த்திக் கொள்வதில்லை. சுற்றியுள்ள கிராமங்களிலும் இதே நிலைமைதான். இதனால் தாழ்த்தப்பட்டோர் தொலைவிலுள்ள கிராமங்களுக்குச் சென்று வேலை தேடுகின்றனர். கிராமப் பொதுச் சுடுகாட்டைத் தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தவும் சாதி வெறியர்களால் தடை விதிக்கப்பட்டுள்ளது. துண்டு - துக்காணியாக நிலம் வைத்துள்ள தாழ்த்தப்பட்டோரில் ஒரு சிலர் தமது நிலத்தில் பயிர் வைக்கவும் முடியவில்லை. ஏனெனில், மேல்சாதி வெறியர்களின் நிலங்களை ஒட்டி இவை அமைந்திருப்பதால், தமது நிலத்தின் வழியே தாழ்த்தப்பட்டோர் செல்லக் கூடாது என்று அவர்கள் தடை விதித்துள்ளனர்.

விவசாயக் கூலிகளான தாழ்த்தப் பட்டோர் சமூகப் புறக்கணிப்பாலும் வேலையின்மையாலும் பட்டினியாலும் பரிதவிக்கின்றனர். ஆயிக்குளம், ஓமக்குளம், பள்ளி நீரோடை, தாத்தான்குப்பம், மணிக்கொல்லை, நடுத்திட்டு, கண்டமங்கலம் முதலான



வன்னிய சாதிவெறியாட்டம்: ஆயிப்பேட்டை கிராமத்தில் தீயிடப்பட்ட தாழ்த்தப்பட்டோர் வீடுகள்




படிப்பகம்

www.padippakam.com

25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இச்சமூகப் புறக்கணிப்பு கேள்வி முறையின்றித் தொடர்கிறது. மேல்சாதி வெறியர்கள் உள்ள பகுதியில் ரேஷன் கடை அமைந்துள்ளதால், தாழ்த்தப் பட்டோர் ரேஷனிலும் உணவுப் பொருட்களை வாங்க முடிவதில்லை. பொதுக் கிணற்றிலும் தண்ணீர் எடுக்க முடியாமல் தாழ்த்தப்பட்ட பெண்கள் சாதிவெறி இளைஞர்களால் கேலி, கிண்டல் செய்து விரட்டப்படுகின்றனர். மேல்சாதியினர் உள்ள பகுதியில் பள்ளிக் கூடங்கள் அமைந்துள்ளதால், தாழ்த்தப் பட்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் அச்சுறுத்தப்படுகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், வன்னிய சாதி வெறியர்கள் சிதம்பரம் தொகுதியில் கிடைத்தத வெற்றியை, தமது கட்சிக்குக் கிடைத்த தேர்தல் வெற்றியாக மட்டும் கருதவில்லை. தமது சாதிவெறி ஆதிக்கத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதியே அவர்கள் கொட்டமடித்து வருகின்றனர். தொடரும் இச்சாதிவெறி அட்டூழியங்களைப் பற்றி பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியான பின்னரும், இதுவரை எந்தவொரு சாதிவெறியனும் கைது செய்யப்பட வில்லை.



ஓமக்குளம் கிராமத்தில் பல்லுடைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர் பாலச்சந்திரன்

சமத்துவபுர சதிராட்டங்கள், சமபந்தி விருந்துகள், ''அய்யன்'' திருவள்ளுவருக்குச் சிலை என்று சமாதான நல்லிணக்கப் பசப்பல்களுடன் நாடகமாடி வரும் தி.மு.க. ஆட்சியும் கட்சியும், தமது ஓட்டு வங்கிக்காக வெளிப்படையாகவே சாதிவெறியர்களுடன் வெட்கமின்றிக் கை கோர்த்துக் கொண்டு நிற்கிறது. வன்னிய சாதிவெறியர்களின் கட்சியான பா.ம.க.வின் தலைவர் இராமதாசு, ''தாழ்த்தப்பட்டோருக்கு என்னைவிட யார் பாடுபட்டிருக்கிறார்கள்?'' என்று வெட்கமின்றி மார்தட்டிக் கொள்கிறார். அக்கட்சியினரின் சாதி வெறியாட்டத்தைக் கண்டிக்க முன்வராத தமிழினவாத குழுக்கள், இராமதாசை 'தமிழினப் போராளி' என்று துதிபாடிக் கொண்டிருக்கின்றன.

★ முத்து

## துறைமுகத் தொழிலாளர் போராட்டம்:
# போராட்ட உறுதியால் இராணுவம் பின்வாங்கியது



அனைத்திந்தியத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது, கடந்த ஜனவரி 18-ந் தேதியன்று மாலை 5 மணிக்கு சென்னைத் துறைமுகத்தில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப் பட்டனர். வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் வகையில், நிலக்கரி எடுத்துச் செல்வதற்காக இரயில் எஞ்சினை இயக்கிய இராணுவத்தினர், வழியில் கட்டியிருந்த தொழிற்சங்கக் கொடிகளையும், பேனர் களையும் அறுத்து எறிந்தனர்; கீழே தள்ளிக் காலில் போட்டு மிதித்தனர்.

இதைக் கண்டு கொதிப்படைந்த துறைமுகத் தொழிலாளர்கள், இரயில் என்ஜினை வழிமறித்துத் தடுத்து நிறுத்தினர். அதைத் தொடர்ந்து கடற்படை, தரைப்படை, பிரதேச இராணுவம், ஊர்க்காவல் அதிரடிப்படை, மத்திய பாதுகாப்புப் படை, இரயில்வே பாதுகாப்புப் படை என ஏராளமான படையினர் குவிக்கப்பட்டு தாக்குதலுக்கு த் தயாராயினர்.

அவர்களிடம் தொழிலாளர்கள், ''ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததாலேயே இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகிறோம். எங்களுடைய நியாயம் உங்களுக்குப் புரியவில்லையா? தேசியப் கொடிக்கு மரியாதை செலுத்தும் நீங்கள், தொழிலாளர்கள் இரத்தம் சிந்திப் பெற்ற உரிமைகளைப் பறிக்கும் துரோகச் செயலுக்குத் துணை போகலாமா? எங்கள் கொடியை அவமதித்ததன் மூலம் எங்களையே நீங்கள் அவமதிக்கிறீர்கள். கார்கில் நிதியாக எங்கள் சம்பளத்திலிருந்து உங்களுக்கு நன்கொடை கொடுத்ததற்காக இப்போது மிகவும் வருந்துகிறோம். எங்களுடன் பணியாற்றும் முன்னாள் இராணுவத்தினரையும் உங்களது செயலால் அவமதிக்கிறீர்கள். உங்களுக்கு இரண்டு ஆண்டுகளாக ஊதிய உயர்வு தரப்படாவிட்டால், நீங்கள் போராட மாட்டீர்களா? உங்கள் உறவினர்கள், துறைமுகத் தொழிலாளியாக இருந்து போராட்டத்தில் ஈடுபட்டால், அவர்களையும் நீங்கள் அடக்குவீர்களா?'' என்று நீண்ட நேரம் தமது நியாயத்தை எடுத்து விளக்கினர், தொழிலாளர்கள்.

உண்மையை உணர்ந்த இராணுவப் படையினர், அறுத்து மிதித்த கொடிகளை எடுத்து அவர்களாகவே கட்டினர். இராணுவ உயரதிகாரிகள் முகம் சுளித்து நிற்க, முன்னோக்கி வந்த இரயில் என்ஜினை பின்னோக்கி எடுத்துச் சென்றனர். துறைமுகத்தில் முகாமிட்டதைத் தவிர, வேலை நிறுத்தத்தை உடைக்கும் நடவடிக்கையில் ஈடுபட மறுத்து விட்டனர்.

இது தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கும், போராட்ட உறுதிக்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். எந்த தொழிற்சங்கமும் இப்படி இராணுவத்தினரிடம் நியாயத்தை விளக்க முயற்சிக்காத போதிலும், வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களின் முன்முயற்சியால் கிடைத்துள்ள இந்த வெற்றியானது, தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

- புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

# பிர்லாவின் மோசடிக்குத் துணைபோகும் 'மார்க்சிஸ்டு' அரசு

**சியாட்டிலில் நடந்த உலக வர்த்தகக் கழக மாநாட்டில், சுற்றுப்புறச் சூழல் விதிகளை ஏகாதிபத்தியங்கள் திணிக்க முயன்ற பொழுது, அதை இந்திய அரசும், இந்தியத் தரகு முதலாளிகளும், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக் கட்சிகளும், "இது எங்கள் உள்நாட்டுப் பிரச்சினை; இதில் ஏகாதிபத்தியங்கள் தலையிடக் கூடாது" என்றார்கள்; தங்களை ஏகாதிபத்திய எதிர்ப்பு தேச பக்தர்களாகக் காட்டிக் கொண்டார்கள். அவர்கள் சியாட்டிலில் காட்டிய 'தேச' பக்தி மோசடித்தனமானது என பு.ஜ.(16 - 31 ஜன. 2000) இதழில் அம்பலப்படுத்தி எழுதியிருந்தோம். அதற்கு ஆதரமாக, கேரள மாநிலத் திலுள்ள மாவூர் பகுதி மக்கள் நடத்தி வரும் போராட்டம் அமைந்துள்ளது.**

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்திலுள்ள மாவூர் எனுமிடத்தில் உள்ள "கிரேசிம்" துணியாலை, இந்தியா வின் பழம்பெரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுள் ஒன்றான பிர்லா குடும்பத்திற்குச் சொந்தமானது. கடந்த முப்பந்தைந்து ஆண்டுகளாக இயங்கி வந்த இந்த ஆலையில் இருந்து வெளியேற்றப் பட்ட கழிவுகளால் அப்பகுதியில் ஓடும் சாளியாறு நஞ்சாகிப் போய்விட்டது. இந்த ஆற்று நீரில் கையையோ, காலையோ நனைத்தாலே அரிப்பும் எரிச்சலும் ஏற்பட்டு விடும். இந்த ஆற்றின் கரையை ஒட்டியுள்ள வாழக்காடு பகுதியைச் சேர்ந்த 200 கிராமங்களில் வாழும் மக்கள் தோல் வியாதியால் மட்டுமல்ல; புற்று நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாசு காரணமாக வயநாட்டுப் பகுதியிலுள்ள மூங்கில் காடுகள் அழியும் நிலைக்குச் சென்று விட்டன. அத்துணியாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுள் 25 சதவீதப் பேர் (கிட்டதட்ட 1000 தொழிலாளர்கள்) புற்றுநோய், சுவாசக் கோளாறு, இரத்த அழுத்த நோய்களால் அவதிப்படுகின்றனர்.

தனது துணியாலையால் சுற்றுப்புறச் சூழலுக்கோ, மனித உயிர்களுக்கோ எவ்விதப் பாதிப்பும் கிடையாது என பிர்லா நிறுவனம் பல ஆண்டுகளாக உண்மையை மூடி மறைத்துச்சாதித்து வந்தது. ஆனாலும், கேரள சட்டமன்றம் நிறுவிய ஆய்வுக் குழுவும், மைய அரசின் சுற்றுப்புறச்சூழல் வாரியம் நிறுவிய சென்குப்தா குழுவும், இத்துணி ஆலையால் சுற்றுச் சூழல் நஞ்சாகிப் போனதையும், பகுதி கிராம மக்களும், துணியாலைத் தொழிலாளர் களும் நோய்களால் பாதிக்கப்பட்டுள் ளதையும் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தப் பிரச்சினையில், கேரள உயர்நீதி மன்றம் கிரேசிம் துணியாலைக்கு எதிராகத் தீர்ப்பளித்துள்ளது. அப்பகுதி மக்களும், இந்தத் துணியாலையை மூடக்கோரி சுகுதகுமாரி என்ற சுற்றுப்புறச் சூழல் வாதியின் தலைமையில் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் பிர்லா நிறுவனம், கடந்த ஆண்டு மே மாதம் முதல் ஆலையின் உற்பத்தியை நிறுத்தி விட்டது; நவம்பர் 30-இல் ஆலையை இழுத்து மூடப் போவதாகவும் கேரள மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. ஆலையை மூடுவதற்கு, இத்துணியாலையில் உற்பத்தி செய்யப்படும் நூலிழைக்குத் தேவையான மூலப்பொருட்கள் சரிவரக் கிடைக்காதது தான் காரணம் எனக் கூறி வருகிறது பிர்லா நிறுவனம்.

ஆனால், உண்மைக்காரணம் இதுவல்ல. ஆலைக் கழிவுகளைச் சுத்திகரிக்காமல் இனியும் வெளியேற்ற முடியாது என்ற நிலை, மக்களின் விழிப்புணர்ச்சி காரணமாக உருவாகிவிட்டது. ஆலைக் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்குப் பல கோடி ரூபாய் மூலதனம் இட வேண்டும். அதைவிட ஆலையை மூடிவிடுவதை இலாபகரமான தாகப் பார்கிறது, பிர்லா நிறுவனம்.

சியாட்டிலில் நடந்த உலக வர்த்தக கழக மாநாட்டில், சுற்றுப்புறச் சூழல் விதிகளைத் திணிக்க ஏகாதிபத்தியங்கள் முயன்ற பொழுது, ஏகாதிபத்தியங்களின் முயற்சியை, பிர்லா உள்ளிட்ட எல்லா தரகு முதலாளிகளும் தேச நலன் கருதி எதிர்ப்பதாகக் கூறினர். இது, எங்களின் உள்நாட்டுப் பிரச்சினை என்று வாதிட்டார்கள்.

**மாவூர்ப் பகுதியின் சுற்றுப் புறச் சூழலை நாசமாக்கிய பிர்லா நிறுவனத்தைத் தண்டிக்காத கேரள 'மார்க்சிஸ்டு' அரசு, "ஆலையை மீண்டும் திறந்து நடத்துமாறு" பிர்லாவிடம் கெஞ்சுகிறது!**

கேரளாவின் கோழிக்கோடு மாவட்ட மக்கள் சுற்றுப்புறச் சூழலை நாசமாக்கிய பிர்லா நிறுவனத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம், கிளிண்டன் தூண்டி விட்டு நடக்கவில்லை. ஆனாலும், பிர்லா நிறுவனம் தனது ஆலைக் கழிவுகளைச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்குத் தயாராக இல்லை. மாறாக, ஆலையை இழுத்து மூடிவிட்டு, உள்ளூர் மக்கள் நடத்தி வரும் போராட்டத்தை மழுங்கடிக்க முயலுகிறது. சியாட்டில் மாநாட்டில், பிர்லா போன்ற தரகு முதலாளிகள் ஏகாதிபத்தியங்களை எதிர்த்துத் தூக்கிப் பிடித்த தேச நலன் என்பது, அவர்களது சொந்த இலாப நலன் என்பதை வெட்ட வெளிச்சமாகிவிட்டது, இந்தப் போராட்டம்.

பிர்லாவைப் போலவே, 'மார்க்சிஸ்டு' களும் சியாட்டில் மாநாட்டில் ஏகாதிபத்தியங்கள் சுற்றுப்புறச் சூழல் விதிகளைத் திணிக்க முயன்றதை தேச நலன் என்ற பெயரில் எதிர்த்தவர்கள் தான். ஆனாலும், 'மார்க்சிஸ்டு'கள் ஏகாதிபத்தியத்தை மட்டுமல்ல, பிர்லாவையும் எதிர்ப்பதாகக் கூறிக் கொள்பவர்கள்! எனவே, கேரளாவை ஆளும் 'மார்க்சிஸ்டு' அரசு, பிர்லா துணியாலையை எதிர்த்து உள்ளூர் மக்கள் நடத்தும்போராட்டத்திற்கு ஆதரவாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதுதான். ஆனால், 'மார்க்சிஸ்டு' அரசோ, இந்த நியாயத்திற்கு நேர் எதிராக நடந்து வருகிறது.

'மார்க்சிஸ்டு'கள், அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, "ஆலைக் கழிவைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான இயந்திரங்களை நிறுவி, ஆலையை மீண்டும் தொடங்குமாறு" பிர்லா நிறுவனத்தை நிர்பந்திக்கவில்லை. மாறாக, "ஆலைக்குத் தேவையான மூலப் பொருட்கள் தடையின்றிக் கிடைப்பதற்கு நாங்கள் உத்தரவாதம் தருகிறோம்; ஆலையை மீண்டும் திறந்து நடத்துங்கள்" என்று பிர்லா நிறுவனத்திடம் கெஞ்சுகிறார்கள்.

கேரள 'மார்க்சிஸ்டு' அரசாங்கம் ஆலையை மீண்டும் திறப்பது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த, டிசம்பர் 16 அன்று திருவனந்தபுரத்திற்கு வருமாறு கிரேசிம் துணியாலை அதிபர் குமாரமங்கலம் பிர்லாவை அழைத்திருந்தது. கேரள முதல்வர் நாயனார், தொழில் மந்திரி சுசீலா கோபாலன் உள்ளிட்ட ஐந்து அமைச்சர்கள், கேரள மாநிலத் தலைமைச் செயலகத்தில் உள்ள கொலு மண்டபத்தில், அன்று முழுவதும் பிர்லாவின் வருகைக்காகக் காத்துக் கிடந்தனர். பேச்சு வார்த்தைக்கு குமாரமங்கலம் பிர்லா வரவில்லை; வர முடியாமல் போனதற்கான காரணத்தைக் கூட, மரியாதை நிமித்தம் முன்கூட்டியே தெரிவிக்கவில்லை.

பிர்லா நிறுவனம் 'மார்க்சிஸ்டு'களின் முகத்தில் கரியைப் பூசிய பின்னும் அவர்கள்

www.padippakam.com

அசரவில்லை. பிர்லா நிறுவனத்தின் இருப்பிடத்திற்கே சென்று பேச்சு வார்த்தை நடத்தத் திட்டமிட்டனர். கேரள முதல்வர் நாயனார், தொழில் அமைச்சர் சுசீலா கோபாலன், நிதியமைச்சர் சிவதாசமேனன் ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக சனவரி 15 அன்று கல்கத்தாவுக்குப் பறந்து சென்றனர்.

பேச்சு வார்த்தையை நாளுக்காகத் தட்டிக் கழிக்க நினைத்த பிர்லா, தனக்குப் பதிலாக பிர்லா நிறுவனத்தின் இயக்குநர் தபு பட்டச்சார்யாவை அனுப்பி வைத்தார். அவர், "தனக்கு முடிவு எடுக்கும் அதிகாரம் இல்லையென்றும், தான் ஒரு ஒப்புக்குச் சப்பாணி" என்றும் கூறி, பிர்லாவுக்காகக் காத்துக் கிடந்த 'மார்க்சிஸ்டு'களை நோகடித்தார். குப்புறக் கவிழ்ந்த பின்னரும் மீசையில் மண் ஒட்டாத 'மார்க்சிஸ்டு'கள், "பிர்லாவிடம் மட்டும் தான் நாங்கள் பேசுவோம்" என்று வீண் ஜம்பம் அடித்து விட்டுத் திரும்பினர்.

பிர்லா நிறுவனம், கேரள மாநிலம் மாவூரில் உள்ள ஆலையை விட அதிக அளவில் உற்பத்தித்திறன் கொண்ட நூலிழை ஆலைகளை இந்தியாவில் வேறு மூன்று இடங்களில் நிறுவியுள்ளது. இதன் காரணமாகவே, சர்ச்சைக்குரிய மாவூர் ஆலையை மீண்டும் திறக்கவோ, அவ்வாலையில் மீண்டும் முதலீடு செய்யவோ தரகு முதலாளி பிர்லா விரும்பவில்லை. பிர்லாவின் இந்தக் கைகழுவும் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாத அப்பாவி அல்ல. கேரள 'மார்க்சிஸ்டு' அரசு.

முதலாளிகளின் சொர்க்க பூமியான அமெரிக்காவில்கூட, சுற்றுப்புறச் சூழலை நஞ்சாக்கிய டியு-பாண்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், அமெரிக்க மக்களின் போராட்டங்கள் காரணமாக, அமெரிக்க முதலாளித்துவ அரசால் தண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இடதுசாரி அரசை நடத்தி வருவதாகக் கூறிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'களோ, முப்பத்தைந்து ஆண்டுகளாக மாவூர் பகுதியின் சுற்றுப்புறச் சூழலை நாசமாக்கிய பிர்லாவைத் தண்டிக்க முடியாத, பிர்லா நிறுவனத்திடமிருந்து நட்ட ஈடு வசூலிக்க முடியாத தங்களின் கையாலாகாத்தனத்தை, பேச்சு வார்த்தை என்ற பெயரில் மூடி மறைக்கின்றனர்.

"கேரளாவின் மிகப்பெரும் தனியார் நிறுவனமான கிரேசிம் ஆலை மூடிக் கிடந்தால், பிற முதலாளிகள் கேரளாவில் மூலதனமிட முன்வரமாட்டார்கள்" என்று நியாயம் பேசுகிறது, 'மார்க்சிஸ்டு' அரசு. தொழிலாளர்களின், பகுதி மக்களின் உடல்நலன், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இவற்றை விட 'மார்க்சிஸ்டு'களுக்கு மாநிலத்தின் தொழில் வளம் பெரிதாம். இதைத் தான் பிர்லா பச்சையாக, எனக்கு இலாபம் பெரிது என்கிறார்!

✱ செல்வம்

# எது நக்சல்பாரி வழி?

## மக்களுக்காகப் போராடுவதே! மக்களிடம் கொள்ளையடிப்பதல்ல!

டிசம்பர் 8-ந் தேதி, பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகரக் கடை வீதியில் புத்தம் புதிய "டாடா சுமோ" வாகனம் சீறிக் கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து திபுதிபுவென குதித்த 10 பேர், அருகிலிருந்த ஒரு வியாபாரியின் வீட்டில் திடீரென நுழைந்தனர். அவர்கள் கையில் துப்பாக்கி உள்ளிட்ட கொடிய ஆயுதங்கள்! வீட்டின் கதவைத் தாழிட்டுக் கொண்டு காவலுக்கு இருவர் நிற்க, மற்றவர்கள் தமது சொந்த வீடு போல அந்த வியாபாரியின் வீட்டை ஆக்கிரமித்துக் கொள்கின்றனர்.

வீட்டிலுள்ளவர்கள் பீதியில் உறைந்து போய் நிற்க, அந்த கும்பலில் ஒருவர் வியாபாரியை அழைத்து, "உனக்கு இலட்சக்கணக்கில் சொத்து இருக்கிறது. இவையெல்லாம் நீ கொள்ளையடித்துச் சம்பாதித்த சொத்துக்கள்; உனக்கு ஒரு லட்ச ரூபாய் அபராதம் விதித்துள்ளோம். இன்னும் 3 நாட்களில் நாங்கள் வரும்போது மரியாதையாக நீ கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால், நாங்களே எடுத்துக் கொள்வோம். எங்கள் வாய் பேசாது; துப்பாக்கியும் வெடிகுண்டும்தான் பேசும்" என்று எச்சரித்து விட்டு ஒரு துண்டுச் சீட்டை (ரசீது) கொடுக்கின்றார். பின்னர் இந்த கும்பல் இன்னொரு வியாபாரியின் வீட்டில் நுழைகிறது.

இது ஏதோ சினிமாப் படங்களில் வரும் வில்லன்களின் சாகசக் காட்சி அல்ல. மறைந்த தமிழர் விடுதலைப் படை அமைப்பாளர் தமிழரசனின் சீடரான இளவரசன் தலைமையிலான கும்பல் "தமிழர் விடுதலை இயக்கம்" என்ற பெயரில் தமது கட்சிக்கு நிதிதிரட்டும் 'புரட்சிகரமான' நடவடிக்கைதான் இது!

ஏற்கனவே கைதாகியிருந்த இளவரசன் கடந்த நவம்பர் மாதத்தில் பிணையில் விடுதலையானதும், புரட்சிகரமான மக்கள் திரள் அமைப்பு கட்டப் போவதாக அறிவித்துக் கொண்டு, அதற்காக நிதி திரட்டுகிறேன் என்று அடாவடி வசூல் வேட்டையில் இறங்கினார். "தமிழ்தேச மக்கள் விடுதலை இயக்கம்" என்ற பெயரில் பத்துக்கும் மேற்பட்டோரைக் கொண்ட இளவரசன் தலைமையிலான கும்பல், "டாடா சுமோ" வாகனத்தில் வந்து மீன்சுருட்டி, ஆண்டிமடம், செந்துறை, ஜெயங்கொண்டம் ஆகிய ஊர்களில் பட்டப்பகலில் அடாவடி வசூலில் இறங்கியது.

சிறு கடைகள் எனில் ரூ. 1000, பெரிய கடைகள் எனில் ரூ. 5000 முதல் 25,000; நகைக்கடை, ஜவுளிக் கடை, பிராந்திக் கடைகளுக்கு ரூ. 50,000; மருத்துவர்களுக்கு ஒரு லட்சம்; லாரி - பேருந்து உரிமையாளர்களுக்கு ரூ. 2 லட்சம் என பட்டியல் போட்டு இக்கும்பல் பகற்கொள்ளையை நடத்தி வந்தது. இரகசியமாக வங்கிகளிலும் பிற இடங்களிலும் கொள்ளையடித்தால் இரகசியக் கட்சி; பட்டப் பகலில் பகிரங்கமாக மக்களை மிரட்டிக் கொள்ளையடித்தால் மக்கள் திரள் கட்சி என்று இந்த கும்பல் புதிய அரசியல் இலக்கணம் வகுத்துக் கொண்டுள்ளது போலும்!

மற்ற ஊர்களில் இக்கும்பலைக் கண்டு அஞ்சிய சிறு கடைக்காரர்கள் லட்சக்கணக்கில் கப்பம் கட்டியுள்ளனர். லாரி - பேருந்து உரிமையாளர்கள் தமது உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து நேரிடலாம் என்று பயந்து, இளவரசன் கும்பல் கேட்ட தொகையைக் கொடுத்துள்ளனர். அந்த தைரியத்தில் கடந்த டிசம்பர் 7,8 தேதிகளில் ஜெயங்கொண்டம் நகருக்கு வந்த இந்த கும்பல், கடைக்காரர்கள் மற்றும் மருத்துவர்களை மிரட்டி கப்பம் கட்ட வேண்டிய தொகை குறித்த துண்டுச் சீட்டைக் கொடுத்து எச்சரித்து விட்டுச் சென்றது.

இக்கும்பலின் அடாவடித்தனம், அச்சுறுத்தல் மற்றும் அவமானப்படுத்தலைக் கண்டு ஜெயங்கொண்டம் மருத்துவர்கள் அனைவரும் கலந்து பேசி, மருத்துவர்கள் சங்கம் மூலம் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து போலீசாரும் இளவரசனை அழைத்துப் பேசியுள்ளனரே தவிர, கைது செய்யவில்லை.

ஏற்கனவே கெடு விதிக்கப்பட்ட நாளான டிசம்பர் 11-ந் தேதியன்று கப்பம் வசூலிக்க இளவரசன் கும்பல் மீண்டும் ஜெயங்கொண்டம் நகர கடைவீதிக்கு



படிப்பகம்

www.padippakam.com

வந்தது. இக்கும்பலின் அடாவடித்தனத்தை இனியும் சகித்துக் கொள்ள முடியாமல் வியாபாரிகளும் மருத்துவர்களும் பேருந்து உரிமையாளர்களும் ஒன்றிணைந்து, கடைகளை அடைத்து விட்டு சாலை மறியல் போராட்டத்தில் இறங்கினர். இளவரசன் கும்பலின் அடாவடி வசூல், கொலை மிரட்டலிலிருந்து தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்; இந்த சமூக விரோதக் கும்பலைக் கைது செய்ய வேண்டும் என்று கோரி அவர்கள் நடத்திய போராட்டத்தால் ஜெயங்கொண்டம் நகரமே செயலற்று முடங்கிப் போனது. பின்னர் போலீசார் வந்து பேச்சு வார்த்தை நடத்தி, பாதிக்கப்பட்டவர்கள் தனித்தனியே புகார் மனு கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியது. இதன்படி 30-க்கும் மேற்பட்டோர் புகார் கொடுத்த பிறகு, இளவரசன் உள்ளிட்ட 10 பேர் கொண்ட கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது.

இளவரசன் கும்பலின் அச்சுறுத்தல் அடாவடித்தனங்களை எதிர்த்து வியாபாரிகளும் பொதுமக்களும் மருத்துவர்களும், ''ஜெயங்கொண்டம் மக்கள் பாதுகாப்பு மற்றும் பொது நலக்குழு'' என்ற அமைப்பை நிறுவி தொடர்ந்து போராடி வருகின்றனர். இவர்களது போராட்டத்தை ஆதரித்தும் பாராட்டியும் இப்பகுதியில் இயங்கும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும், விவசாயிகள் விடுதலை முன்னணியும் இணைந்து சுவரொட்டி பிரச்சார இயக்கத்தை நடத்தின. நக்சல்பாரி பாதையிலிருந்து விலகி சமூக விரோதிகளாகச் சீரழிந்துவிட்ட இளவரசன் கும்பலின் அடாவடித் தனங்களை முறியடிக்க அணி திரளுமாறு மக்களுக்கு அறைகூவி அழைத்தன.

இச்சுவரொட்டி பிரச்சாரத்தால் மேலும் அம்பலமாகிப் போன இக்கும்பலின் எடுபிடிகள் பீதியடைந்து, அடுத்த நாளே அவற்றைக் கிழித்தெறிந்தனர். ''என்ன நடந்தது என்று எங்களிடம் கேட்காமல் நீங்கள் கண்டபடி போஸ்டர் ஒட்டியது தவறு'' என்று ஒருபுறம் நைச்சியமாகவும், மறுபுறம் ''எங்களுக்கு எதிராக போஸ்டர் ஒட்டினால் இனிமேல் கைஇருக்காது'' என்று மிரட்டியும் எமது அமைப்புகளுக்கு இக்கும்பலின் எடுபிடிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எமது அமைப்புகளுக்கு எதிராக சிறிய அளவில் கண்டனச் சுவரொட்டிகளை நகரில் ஒட்டியுள்ளனர்.

தங்களது தலைவனும் புரவலனும் கைது செய்யப்பட்டு விட்ட ஆத்திரத்தில் இக்கும்பலின் எடுபிடிகள், ஆங்காங்கே வீரவசனம் பேசி, கோழைத்தனமாக பலரை மிரட்டி வருகின்றனர். மக்கள் பாதுகாப்புக் குழு சார்பில் போலீசாரிடம் புகார் மனு கொடுத்த டாக்டர் சின்னசாமியை திருச்சியில் அவர் பணிபுரியும் ராஜாஜி மருத்துவமனைக்கே சென்று இக்கும்பலின் எடுபிடிகள் பயமுறுத்தியுள்ளனர். அவரிடம் புகாரை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதே போல, மக்கள் பாதுகாப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளரான டாக்டர் வில்சனுக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். கடையடைப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவளித்த ஒரே காரணத்திற்காக, ''உங்களை அல்-உம்மா தீவிரவாதிகள் பட்டியலில் சேர்க்கும்படி புகார் கொடுப்போம்'' என்று முஸ்லிம்களை ரம்ஜான் நோன்பு காலத்தில் இக்கும்பல்



**இளவரசன் தலைமையில் உள்ள இந்த அராஜகக் கும்பலுக்கும், நக்சல்பாரி இயக்கத்துக்கும் எவ்வித ஒட்டோ உறவோ கிடையாது. மக்களிடம் கொள்ளையடிக்கும் தங்களின் சமூக விரோதச் செயலை நியாயப்படுத்துவதற்காகவே, இவர்கள், ''நக்சல்பாரி'', ''தமிழின விடுதலை'' போன்றவற்றைக் கேடாகப் பயன்படுத்துகிறார்கள்.**

வந்து மிரட்டிவிட்டுச் சென்றுள்ளது.

''இன்னும் 15 நாட்களில் எங்கள் தலைவர்கள் வெளியே வந்து விடுவார்கள்; அதன் பிறகு எங்களுக்கு எதிராகச் செயல்பட்டவர்களுக்கு எங்கள் இயக்க விதிகளின்படி தண்டனை கொடுப்போம்!'' என்று இக்கும்பல் பீதியையும் பதற்றத்தையும் பரப்பி வருகிறது. இந்நிலைமைகளை விளக்கி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் பாதுகாப்பு பொதுநலக் குழுவினர் தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளதோடு, அனைத்து பத்திரிகைகளுக்கும் செய்தி விடுத்துள்ளனர்.

வங்கிக் கொள்ளை, வாகனத்திருட்டு, முந்திரிக் காடுகளில் முந்திரிக் கொட்டை பொறுக்கும் உரிமையைக் கைப்பற்றிக் கொள்வது, கட்டைப் பஞ்சாயத்து, ஆயுதத் தாக்குதல், கப்பம் கட்டச் சொல்லி மிரட்டல் முதலானவற்றின் மூலம் இளவரசன் கும்பல் பேரரசனாகிவிட முயற்சிக்கிறது. போலீசு மற்றும் சில ஓட்டுக் கட்சிகள் - சாதிய சங்கங்களின் மறைமுக ஆதரவோடு அதைச் சாதிக்கவும் கிளம்பியுள்ளது. இக் கீழ்த்தரமான செயல்களுக்கு நக்சல்பாரி புரட்சி இயக்கத்தின் பெயரைக் கேடாகவும் பயன்படுத்தி வருகிறது. உண்மையில் இந்த அராஜக கும்பலுக்கும் நக்சல்பாரி இயக்கத்துக்கும் அரசியல் - சித்தாந்தம், கொள்கை ரீதியாகவோ, அமைப்பு - செயல்பாடு ரீதியாகவோ எவ்வித ஒட்டோ உறவோ, தொடர்போ அறவே கிடையாது. அதேபோல தமிழ்நாடு விடுதலை கோரிக்கைக்கும் இந்தக் கும்பலுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, மக்களை அச்சுறுத்திக் கொண்டு திரியும் இவர்கள் மக்கள்திரள் கட்சி நடத்துவதாகக் கூறிக் கொள்வதை எந்த மக்கள் ஏற்பார்கள்? மக்களை மிரட்டி கப்பம் வசூலிக்கும் இவர்கள், எந்த மக்களை விடுதலை செய்யப் போகிறார்கள்? மக்ளை அணிதிரட்டாமல், நிதி திரட்டுவதுதான் மக்கள் திரள் கட்சியின் நடவடிக்கையா?

தற்போது மக்கள் திரள் கட்சி தொடங்கியுள்ளதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள், என்ன அரசியல் கோரிக்கையை, என்ன முழக்கத்தை முன் வைக்கிறார்கள்? அதற்காக மக்களிடம் என்ன பிரச்சார வேலைகளைச் செய்துள்ளார்கள் என்று பரிசீலித்தாலே இவர்களது யோக்கியதை புரிந்து விடும்!

வங்கிக் கொள்கை, வாகனப் பறிப்பு, கட்டைப் பஞ்சாயத்து, மிரட்டிப் பணம் பறித்தல் முதலான 'புரட்சிகரமான' நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த தொகையைப் பங்குபோட்டுக் கொள்வதில், தகராறு ஏற்பட்டு 'சகோதரக் கொலை' களை நடத்தியுள்ள இவர்கள், புரட்சி என்றும் தமிழின விடுதலை என்றும் பேசித் திரிய என்ன அருகதை இருக்கிறது?

தமது அடியாட்படையோடு ஓர் அரசியல் கோரிக்கையைச் சேர்த்துக் கொண்டால் அது மதிப்பாகவும் பாது காப்பாகவும் இருக்கும் என்பதாலேயே இவற்றைத் தம்மோடு ஒட்டிக் கொண்டு இக்கும்பல் அலைகிறது. இதன் மூலம் நக்சல்பாரி புரட்சியாளர்களை இழிவுபடுத்தி அரசு பயங்கரவாத அடக்குமுறையை தமிழக அரசு ஏவி விடவும், தமிழின உரிமை கோரிக்கையைக் கொச்சைப்படுத்தவுமே இக்கும்பலின் செயல்பாடுகள் வழி வகுக்கின்றன.

தகவல்: புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஜெயங்கொண்டம்.



படிப்பகம்

www.padippakam.com

பின் அட்டை தொடர்ச்சி

வயல்களை நாசப்படுத்தி விட்டதாக வும், அதற்கு அபராதமாக நெடுந் திடலில் வசிக்கும் 25 அருந்ததியினர் குடும்பமும் 40 மூட்டை நெல் அளக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். அக்கூட்டத்திற்குச் சென்றிருந்த தாழ்த்தப்பட்ட பெரியவர்கள், பஞ்சாயத்தார் முன்பு மூனு தடவை காலில் விழுந்து எழுந்த பின்பு, 25 மூட்டை நெல்லைக் கொடு எனக் கட்டளையிட்டனர். ஊர்ப் பஞ்சாயத் தில் கலந்து கொண்ட தமிழக முதல்வ ரின் மைத்துனரும், கோயில் திருமாளம் ஊராட்சித் தலைவருமான தெட்சிணா மூர்த்தி தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான இத்தீர்ப்புக்குத் தலையாட்டியிருப்ப தோடு, அதை நியாயப் படுத்தியும் பேசி வருகிறார்.

மேல்சாதி வெறியர்களின் இக்-கட்டைப் பஞ்சாயத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட தாழ்த்தப்பட்டோர், ''தப்பு அடிக்கிறது, பிணத்துக்குக் குழி வெட்டறது போன்ற அடிமைத் தொழில்களை இனி செய்ய மாட்டோம்'' என அறிவித்து, தப்பு, மேளம் ஆகியவற்றைக் கொளுத்தி, தங்களின் எதிர்ப்பைக் காட்டினர். இதன்பின், தாழ்த்தப்பட்டோர் காலனியை விட்டு வெளியே வர முடியாதபடி, காலனியைச் சுற்றி மேல்சாதி வெறியர்கள் கட்டிய முள் வேலியை அடித்து நொறுக்கிய தாழ்த்தப்பட்டோர், இத்தீண்டாமைக் குற்றத்திற்கு நீதி கேட்டுப் போராட்டத்தில் குதித்தனர். தமிழக அரசோ, ''சமாதானம்'' எனும் போர்வையில், மேல்சாதி வெறியர் களைக் கைது செய்யாமல், காப்பாற்றி வருகிறது.





◁ தெட்சிணாமூர்த்தி

மருதமுத்து ▽

நவீனமயம், தகவல் தொழில்நுட்பப் புரட்சி, 21-ஆம் நூற்றாண்டு என்ற பம்மாத்து ஒருபுறம்; தாழ்த்தப் பட்டோரை, விலங்குகளை விடக் கேவலமாக நடத்தும் இருண்ட காலத்தில்தான் தமிழகமும், இந்தியா வும் வாழ்கிறது என்ற உண்மை மறுபுறம். தூசி படிந்து கிடக்கும் அரசு கோப்புகளின் இடத்தில் கணினி வந்து உட்கார்ந்துவிட்டால் சமூக ஒடுக்கு முறைகள் தாமாக மறைந்து விடுமா? தாழ்த்தப்பட்டோர் மீது தொடுக்கப் படும் தீண்டாமைத் தாக்குதல்களை, காகிதத்திற்குப் பதில், கணினியில் குறித்துக் கொள்வது முன்னேற்றத்தின் அடையாளமாகி விடுமா?

# எம்பிக் குதித்த ஊழல் நரி அம்பலப்பட்டுப் போனது

திருச்சி மாவட்டம், பெருவளப்பூர் ஊராட்சி மன்றத் தலைவரான செல்வராசு, தனது ஊழல் - மோசடி, சாதிவெறி அடாவடித்தனங்களால் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போனவர். சிரங்கு பிடித்தவன் கையும், ஊழல் பெருச்சாளியின் கையும் சும்மா இருப்பதில்லை. ஊழல் அரிப்பெடுத்த ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராசு, இப்போது இன்னுமொரு மோசடி விவகாரத்தில் சிக்கி, அம்பலப்பட்டுச் சந்திசிரிக்க நிற்கிறார்.

ஊராட்சி மன்றத்தில் இயங்கும் கிராமத் தொலைபேசி, மக்கள் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு அழைப்புக்குக் கட்டணம் ரூ. 1.26 என ரசீது கொடுத்து விட்டு, முறை கேடாக ரூ. 2.00 வீதம் வசூலித்து, உழைக்கும் மக்களை ஏய்த்து வந்தது செல்வராசு கும்பல்.

கிராமத் தொலைபேசியின் நோக்கமே, வெளியிலிருந்து தொலைபேசி மூலம் வரும் தகவலை உரியவருக்கு தெரிவிப்பது தான். ஆனால், செல்வராசு அப்படி யாருக்கும் சொல்ல மாட்டோம் என்று திமிராக அறிவித்துள்ளார்.

கிராமத் தொலைபேசி நிலையத்தில் பணியாற்றும் ஊழியரின் உழைப்பை 24 மணி நேரமும் சுரண்டிக் கொண்டு, மாதத்துக்கு வெறும் ரூ. 600 மட்டும் கொடுத்து விட்டு மீதியை செல்வராசு கும்பல் ஏப்பம் விட்டது. இதுதவிர, ஒரு அழைப்புக்கு 0.80 பைசா வீதம் தொலைபேசித் துறைக்கு செலுத்தியதுபோக இலாபமாகக் கிடைக்கும் தொகையையும் செல்வராசு கும்பல் சுருட்டிக் கொண்டது. இத்தகைய மோசடிகள் மூலம் மாதம் ரூ. 3000-க்கும் மேலாக செல்வராசு கொள்ளையடித்து வந்தார்.

இந்தப் பகற்கொள்ளையை இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி அம்பலப்படுத்தியதும், தனது எடுபிடிகளுடன் வந்த செல்வராசு வி.வி.மு. தோழர்களை ஆபாசமாக வசைபாடி தாக்கவும் முற்பட்டார்.

இந்தப் பிரச்சினை குறித்து ''கொள்ளையடிக்கிறார் செல்வராசு'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் வெளியிட்ட வி.வி.மு., வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் செய்து நன்கொடை திரட்டி, 20.12.99 அன்று ''சுயநலக் கும்பலைச் சுட்டெரிக்க வாரீர்'' என்று பொதுக்கூட்டத்தையும் நடத்தியது. இப்பொதுக்கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் ஆதரவளித்ததையும், தான் அம்பலப்பட்டுப் போனதையும் கண்டு ஆத்திரமடைந்த செல்வராசு, தனது கைத்தடிகளிடம் ''போய் அடிங்கடா! நொறுக்குங்கடா!'' என்று வெறிக் கூச்சல் போட்டுள்ளார். பிறகு கூட்டத்திற்குப் பாதுகாப்புக்காக வந்த போலீசாரிடம் வீதியில் நின்று கத்தி, ''நாளைக்கு நானும் பொதுக்கூட்டம் போட்டு இவனுங்களை கெட்ட வார்த்தையால் திட்டப் போகிறேன்'' என்று சவால் விட்டார்.

எதிர்மேடை போட்டு பேசப் போவதாக செல்வராசு விடுத்த சவால், குடிகாரன் பேச்சு, விடிஞ்சா போச்சு என்ற கதையாகிப் போனது. பொதுக் கூட்டம் முடிந்த மறுநாள் ''சாக்கடைப் பன்றி, நாய்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை'' என்று எழுதி வைத்த செல்வராசு, மாலையில் தனது எடுபிடிகளைக் கொண்டு அதையும் அழித்துவிட்டு உள்ளூரப் பொருமிக் கொண்டிருக்கிறார். ஆளுங்கட்சி - அதிகார பலத்தின் மூலம் என்னை எவனும் எதிர்க்க முடியாது என்று ஆட்டம் போட்டு வந்த ஊழல் மோசடி செல்வராசு கும்பல், வி.வி.மு.வின் தொடர்ச்சியான போராட்டத்தால் இன்று வாலறுந்த நரியாக அம்பலப்பட்டு நிற்கிறது.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
பெருவளப்பூர்.

Published and Owned by A. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110 ii Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: A. SHANMUGA RAJ.


படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG- 544 / 2000
www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

தொழிற்சாலைகளில் புகுத்தப்படும் நவீனமயம், இப்பொழுது அரசு நிர்வாக இயந்திரத்திலும் மூக்கை நுழைக்கத் தொடங்கிவிட்டது. இதோ, இந்தப் படத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி, திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கணினிப்படுத்தப்பட்ட நிலப்பதிவேடுகளைப் பொது மக்களுக்கு வழங்குகிறார். ஊருக்குள் நாலு கட்டடம் புதிதாக முளைத்தாலே, ''பழைய மாதிரி இல்லப்பா, ஊரு ரொம்ப மாறிப் போச்சு.. சின்னவங்க பெரியவங்க மரியாதையில்ல... சின்ன சாதி, பெரிய சாதி இல்ல...'' என்று அலுத்துக் கொள்ளும் காலத்தில், திருவாரூர் மாவட்ட ஆட்சியாளர் உமா சங்கர் (படத்தில் கருணாநிதியின் வலது பக்கம் நிற்பவர்), ''திருவாரூர் மாவட்டத்தை தமிழகத்திலேயே முதல் தரமான கணினி மாவட்டமாக மாற்றிக் காட்டுகிறேன்'' என்று சவால் விடுகிறார். அப்படியென்றால், சவுக்கடிக்கும், சாணிப்பாலுக்கும் பெயர்போன பழைய தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியான திருவாரூர் மாவட்டம் ரொம்பவும் மாறிப் போய் விட்டதா? இந்த இரண்டாயிரம் ஆண்டில், கணினி, முன்னேற்றத்தின் குறியீடாகக் காட்டப்படுகிறது. தமிழக அரசு திருவாரூரின் முன்னேற்றத்தைக் கணினிகளின் இணைப்பைக் கொண்டு கணக்கிடட்டும். நாம், அதற்கு வேறொரு அளவுகோலைப் பயன் படுத்துவோம்!





இந்தப் படத்தில் நாம் காண்பது திருவாரூர் மாவட்டம், கோயில் திருமாளம் ஊராட்சியில் உள்ள நெடுந்திடல் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரின் (அருந்ததி சாதியினரின்) குடியிருப்பு. அவர்கள், இங்கு வசித்து வரும் மருதமுத்து என்பவரின் தந்தை இறந்தபொழுது, அக்கிராமத்தில் தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை சேறும், சகதியுமாகக் கிடந்ததால், அவரது சடலத்தை அரசுக்குச் சொந்தமான ஊர்ப் பொதுச் சாலை வழியாக எடுத்துச் செல்ல மேல்சாதிக்காரர்களிடம் அனுமதி கேட்டனர். மேல்சாதி வெறியர்கள் அனுமதி கொடுக்க மறுத்துவிட்ட பின்பு, அத்தாழ்த்தப்பட்டோர் தங்களின் உரிமையை நிலைநாட்டும் வண்ணம், அச்சடலத்தை ஊர்ப் பொதுப் பாதை வழியாகத் தூக்கிச் செல்ல முனைந்தனர். மேல்சாதி வெறியர்களோ, ஆயுதங்களோடு வந்து, தாழ்த்தப்பட்டவர்களைத் தடுத்துத் துரத்தியடித்தனர். இதனால், தாழ்த்தப்பட்டோர் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பாதையிலேயே பிணத்தைத் தூக்கிச் சென்று புதைத்தனர்.

''இத்தனை நாள் தங்களின் கட்டளைக்கு அடங்கிக் கிடந்த கீழ்ச் சாதியினர், இன்றைக்கு தங்களை எதிர்த்து நிற்பதா?'' என ஆத்திரம் கொண்ட மேல்சாதி வெறியர்கள், இதை முளையிலேயே கிள்ளி எறிய எண்ணி, மறுநாள் ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டினர். அதில், தாழ்த்தப்பட்டோர் பிணத்தை எடுத்துச் செல்லும் போது தங்களின்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்